சுடர்கொடியின்

# ஸ்ரீ கலா

மலர் கொடி

மாத நாவல்



ரூ. 30

# நெஞ்சம் தாம் கலந்தனவே...

# ஸ்ரீகலா எழுதிய

இதழ் - 2



# நெஞ்சம் தாம் கலைந்தனவே...

மலர்கொடி

# நெஞ்சம் தாம் கலந்தனவே...

## 1

*"காக்க காக்க கனகவேல் காக்க*
*நோக்க நோக்க நொடியில் நோக்க*
*தாக்க தாக்க தடையறக் தாக்க"*

**பூ**ஜையறையில் இருந்து கணீரென்ற குரலில் பாடி கொண்டிருந்தாள் சக்திப்ரியா.. இல்லையில்லை, கத்தி கொண்டிருந்தாள்..

"அப்பப்பா.. எக்சாம் வந்துட்டால் போதுமே.. இவளோட பெரிய ரோதனையா போச்சு.. என்னப்பனே முருகா, இந்த அறியாப்பிள்ளையை மன்னிச்சிருப்பா.." தனது இரு காதுகளையும் மூடி கொண்டு தனது இஷ்ட தெய்வமான முருக பெருமானை வேண்டி கொண்டார் ஞானம்.. சக்திப்ரியாவோ பாட்டி ஞானத்தின் கதறலை கூடக் கண்டு கொள்ளாது கந்தசஷ்டியை பாடி கடவுளை கதற வைத்து கொண்டிருந்தாள்..

"சக்தி.." அவளது அன்னை ராணி பூஜையறை முன்பு வந்து சத்தம் போட..

"எவ அவ..?" என்று ஒற்றைக் கண்ணை மட்டும் திறந்து திரும்பி பார்த்த சக்திப்ரியா அங்கு அன்னை நின்றிருப்பதைக் கண்டு மனதிற்குள் திடுக்கிட்டாலும் வெளியில் கெத்தாக,

"ம்மா, சின்சியரா சாமி கும்பிடும் போது டிஸ்டர்ப் பண்ணாதீங்க.." என்று அதட்டியவள் மீண்டும் கதறி (பாடி) கடவுளை துன்புறுத்த ஆரம்பித்தாள்..

"இவளோட..." என்று தலையில் அடித்த ராணி..

"சக்தி, எக்சாமுக்கு புக் எடுத்து படிக்கணும்.. அதை விட்டுட்டு இப்படிச் சாமி கும்பிட்டுட்டு இருந்தால் சாமி வந்து எக்சாம் எழுத மாட்டார்.." என்று மகளைக் கேலி செய்தார்..

"நீங்க எந்த நம்பிக்கையில் கடவுள் கிட்ட வேண்டுதல் வைக்கிறீங்களோ அதே நம்பிக்கையில் தான் நானும் கடவுள் கிட்ட வேண்டிக்கிறேன்.. என் வேண்டுதலை நீங்க கேலி செஞ்சீங்க.. அப்புறம் சாமி வந்து உங்க கண்ணைக் குத்திருவாரு.." என்றபடி

பூஜையறையில் இருந்து வெளிவந்தவள் தனது வலக்கை ஆட்காட்டி விரலை அன்னையின் கண்களின் அருகே குத்தி விடுவது போல் கொண்டு சென்றாள்..

"அடியேய், சாமி கண்ணைக் குத்துறாரோ இல்லையோ.. நீ என் கண்ணைக் குத்திராதேடி.." என்று முறைத்தபடி மகளின் கையைத் தட்டி விட்டார் ராணி..

"ம்மா.." என்று ஒரு காலை தரையில் உதைத்தபடி அங்கிருந்து அகன்றவள் வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஞானத்தின் அருகில் வந்து அமர்ந்தாள்..

"ஹாய் ப்ரைனி.." என்றவளை முறைத்தார் ஞானம்..

"என் பெயர் ஞானம்.. ப்ரைனி இல்லை.."

"ஞானம்ன்னா அறிவு.. அறிவுன்னா செம மூளைன்னு அர்த்தம்.. மூளைக்கு இங்கிலீசில் என்ன அர்த்தம்..?"

"என்ன அர்த்தம்..?" பதிலுக்குத் திருப்பிக் கேட்டார் படிப்பறிவில்லாத ஞானம்..

"ப்ரைன்.. அதே மாதிரி இந்தியில் நானின்னா பாட்டின்னு அர்த்தம்.. இரண்டும் சேர்த்து ப்ரைனி.. எப்படி என் அறிவு..?" என்று டீசர்ட்டின் காலரை தூக்கி விட்டு கொண்டாள் சக்திப்ரியா..

"பார்த்துடிம்மா.. அறிவு ரொம்ப வழியுது.. விட்டா காக்கா கொத்திட்டு போயிர போகுது.." என்று கழுத்தை வெட்டி நொடித்துக் கொண்டார் ஞானம்..

"ம்க்கும்.. என்னோட அறிவையாவது காக்கா தூக்கிட்டு போகும்.. ஆனா உன் அறிவை ஒரு காக்கா கூடச் சீண்டாது.." பதிலுக்குப் பழிப்பு காட்டியவள் தொலையியக்கி கொண்டு தொலைக்காட்சியை உயிர்ப்பித்துத் தனக்குப் பிடித்த தமிழ் தொடர் நாடகத்தைப் பார்க்க ஆரம்பித்தாள்..

"ஏன்டி சக்தி.. உன் வயசு பொண்ணுங்க எல்லாம் கொரியன், சைனீஸ் டிராமான்னு பார்த்து ஜொள்ளு விட்டுட்டு இருக்காங்க.. நீ என்னடான்னா நம்ம ஊரு அழுகாச்சி சீரியல் பார்த்துக்கிட்டு இருக்க..?" ஞானம் பேத்தியை சீண்டினார்..

"ப்ரைனி, அதெல்லாம் பார்த்து ஜொள்ளு மட்டும் தான்விட முடியும்.. ஆனா நம்ம ஊர் நாடகம் பார்த்து ஃபீல் பண்ணுற மாதிரி ஃபீல் பண்ண முடியாது.. அதுக்கு எல்லாம் தனி ரசனை வேணும்.."

தொலைக்காட்சியைத் திரையைப் பார்த்தபடி பதில் கூறியவள் நாடகத்தைப் பார்க்க ஆரம்பித்தாள்..

"அப்போ நாளைக்கு எக்சாம் அதோ கதி தான்னு சொல்லு.."

"ப்ரைனி.." என்று அவள் கோபத்தில் பல்லை கடித்தாள்.

"அத்தை மேல் எதுக்குடி கோபப்படுற..? நானும் அதே கேள்வியைத் தான் கேட்கிறேன்.. நாளைக்கு எக்சாமில் பாஸ் பண்ணுவியா..? மாட்டியா..?"

"எல்லாம் அவன் கையில் இருக்கு.. என் கையில் எதுவுமே இல்லை அம்மையே.. யாம் ஏதும் அறியா பச்சை மண்ணு.." மனதில் தனது தோழன் ராமை நினைத்துக் கொண்டு கூறினாள் சக்திப்ரியா..

"அவன்னா யாருடி..? அந்த ராம் பய தானே..?" ஞானம் பேத்தியின் 'மைன்ட் வாய்ஸ்'ஐ கண்டுபிடித்து விட்டார்..

"ஹி..ஹி.. இல்லையே.." அவள் இளித்து வைத்த லட்சணத்திலேயே தெரிந்தது.. அது அவன் தான் என்று..

"அவனே ஒரு மக்கு மண்ணாந்தை.. பிட் அடிக்கிற பய.. அவனைப் பார்த்து நீ எழுதி.. பாஸ் பண்ணி.. அதுக்குள்ள உலகமே அழிஞ்சிரும்.." என்று நொடித்துக் கொண்டார் ஞானம்..

"அதெல்லாம் பார்டரில் பாஸ் பண்ணிருவேன் ப்ரைனி.." என்று அவள் சிணுங்க..

"பார்டரில் பாஸ் பண்ணி என்னடி பண்ண போற..? அவனவன் டிஸ்டிங்க்சனில் பாஸ் பண்ணியும் வேலை கிடைக்காம அல்லாடிக்கிட்டு இருக்கான்.. அரியர் வச்ச உனக்கு எவன்டி வேலை கொடுக்கப் போறான்..?" என்று சிடுசிடுத்த அன்னையைக் கோபத்துடன் பார்த்த சக்திப்ரியா,

"ம்மா, நான் வேலைக்குப் போறேன்னு சொன்னேன்னா..? நான் சொன்னேன்னான்னு கேட்கிறேன்.." என்று ஒற்றை விரல் நீட்டியபடி எகிறிக் கொண்டு வர..

"அப்புறம் என்னடி பண்ண போற..?" ஞானம் திகைப்பாய் பேத்தியிடம் வினவ..

"கல்யாணம் பண்ணிக்கிட்டு, வர போறவன் சம்பாத்தியத்தில் மூக்கு பிடிக்க மொக்கிட்டு, டிவியில் மொக்கை சீரியல் பார்த்துட்டு,

ஜாலியா வீட்டில் இருக்கப் போறேன்.." சீரியசாய் கூறியவளை கவலையுடன் பார்த்தனர் பாட்டியும், அன்னையும்..

அப்போது அவளின் தந்தை தயாளன் உள்ளே நுழைந்தார்.. தந்தையைக் கண்டதும் விரிந்த புன்னகையுடன் அவரை நோக்கி ஓடியவள் அவரின் கையிலிருந்த பையை வாங்கியபடி,

"எனக்கு என்னப்பா வாங்கிட்டு வந்திருக்கீங்க..?" என்று கேட்டபடி அவரது பையைத் திறந்து நோண்ட ஆரம்பித்தாள்..

"உனக்குப் பிடித்த வெங்காயச் சமோசா வாங்கிட்டு வந்திருக்கேன் சக்தி.." என்ற தயாளன் மகளை வாஞ்சையுடன் பார்த்தார்..

"நீங்க இப்படியே செல்லம் கொடுத்து அவளைக் குட்டிச்சுவராக்குங்க.." என்று ராணி கணவரை கடிந்தார்..

"எல்லாம் நம்ம வீட்டில் இருக்கும் வரை தான்.. போகிற இடத்தில் இப்படி இருக்க முடியுமா..? இங்கே இருக்கும் வரை சந்தோசமா இருக்கட்டும்.."

"ப்பா, பேசாம எனக்கு ஹோட்டல்க்காரனை கல்யாணம் பண்ணி வச்சிருங்க.. மூணு வேளை சமைக்க வேண்டாம்.." என்றவளை முறைத்து பார்த்த ராணி,

"ஆமாம், ஆமாம், மூணு வேளையும் மூக்குப் பிடிக்கத் திங்கலாம்.." என்று கடுப்படித்தாள்..

"கரெக்ட், அதே தான்.. கல் தின்றாலும் செரிக்கும் வாலிப வயசு இது.." நகைச்சுவை பாணியில் கூறியவள் கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்த சமோசாவை எடுத்து உண்டபடி தொலைக்காட்சியில் மூழ்கிவிட்டாள்..

தயாளன் அறைக்குள் நுழைய.. அவரைத் தொடர்ந்து கையில் காபி தம்பளருடன் ராணி பின்னே சென்றார்.. கணவரிடம் காபி தம்பளரை கொடுத்தவர்,

"என்னங்க..?" என்று ஆரம்பிக்க..

"சொல்லும்மா.." என்ற தயாளன் காபியை எடுத்து உறிஞ்ச ஆரம்பித்தார்..

"இன்னைக்குச் சங்கீதா ஃபோன் பண்ணியிருந்தாள்.."

"என்ன விசயமாம்..?"

"கல்யாணமாகி ஒரு மாசம் தான் ஆகுது.. ஆனா அதுக்குள்ள வாழ்க்கையே சலிச்ச மாதிரி பேசுகிறாள்.." என்ற மனைவியைக் கண்டு அவரது புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது..

"ஏன்..? என்னாச்சு..?"

"தெரியலைங்க.. எதையும் வாய்விட்டுச் சொன்னால் தானே புரியும்.. ஆனால் அவளது பேச்சில் பழைய துள்ளல், சந்தோசம் எதுவும் இல்லை.. அது மட்டும் தெளிவா தெரியுது.."

"இரண்டு பேரும் காதலிச்சு தானே கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க.. அப்புறம் ஏன் பிரச்சனை வர போகுது..? நீயா எதையாவது யோசிக்காதே ராணி.."

"எதுக்கும் ஒரு எட்டு சங்கீதாவை போய்ப் பார்த்துட்டு வந்துடலாமா..?"

"போகணுமா..?" தயாளன் தயங்கியபடி மனைவியைப் பார்த்தார்.. கணவர் எதனால் அப்படிச் சொல்கிறார்..? என்பதைப் புரிந்த ராணி அவரைக் கண்டு ஆறுதலாகப் புன்னகைத்தார்..

"பொண்ணைக் கொடுத்துட்டா எல்லாத்தையும் சகிச்சுட்டு தான் போயாகணும்.."

"கல்யாணத்தோட பார்த்த தானே.. எப்படி நடந்துக்கிட்டாங்கன்னு..? அவங்க பணக்காரங்களா இருக்கலாம்.. அவங்க அந்தஸ்துக்கு நாம சரிசமமா இல்லாம இருக்கலாம்.. அதுக்காகச் சக மனுசங்களை மதிக்க வேண்டாமா..? அவங்க வீட்டில் வளர்க்கும் நாய்க்கு கிடைக்கும் மரியாதை கூட நமக்கு இல்லை.." தயாளன் தனது ஆதங்கத்தைப் படபடவென்று கொட்டி விட்டார்..

"சரி, நீங்க வர வேண்டாம்.. நானும் சின்னக் குட்டியும் சேர்ந்து போய்ப் பார்த்துட்டு வர்றோம்.."

"சக்திக்குப் பரீட்சை இருக்கே.."

"நாளையோட முடியுது.. இல்லைன்னாலும் உங்க மகள் பரீட்சையை எழுதி கிழிச்சிட்டாலும்.." என்று அங்கலாய்த்தபடியே காபி தம்பளரை எடுத்துக் கொண்டு அங்கிருந்து அகன்றார் ராணி..

மனைவி சென்றதும் தயாளன் பெரிய மகளைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்து போனார்.. பெரியவள் சங்கீதா சின்னவள் மாதிரி கிடையாது.. நல்ல புத்திசாலி.. திறமைசாலி.. பொறியியலில் கணினி பிரிவு எடுத்து படித்தவளுக்குப் படிப்பு முடிந்தவுடனே பெரிய கணினி நிறுவனத்தில் வேலை கிடைத்தது.. சென்னைக்கு வேலை கிடைத்து சென்றவள் அங்குக் காதல் வயப்பட்டாள்.. அவளது காதல், உடன் வேலை செய்பவர் மீது வராது அந்த நிறுவனத்தின் முதலாளி மீது வந்து தொலைத்தது தான் இங்குத் தவறாகி போனது.. அவளைச் சொல்லியும் குற்றமில்லை.. நிறுவனத்தின் முதலாளி சரண் அவளிடம் வலிய பழகி, காதலை சொல்லியிருக்கிறான்.. முதலில் தயங்கியவள் பின்பு அவனது காதலுக்குச் செவிசாய்த்து இருக்கிறாள்.. வாழ்க்கை காதலிலேயே நின்றிருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும்.. ஆனால் அது அடுத்தக் கட்டத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லும் போது தான் பிரச்சனை ஆரம்பமானது..

சங்கீதாவின் காதல் அறியாது இவர்கள் அவளுக்கு மணமகன் தேட ஆரம்பித்த போது தான் அவள் தனது காதலை வீட்டில் தெரிவித்தாள். சரண் பெரிய இடத்து பையன் என்றதும் தயாளன் அதிர்ந்து போனார்.. மகளது காதல் கை கூடுமோ..? என்று மிகவும் கலங்கி போனார்.. அந்தக் கலக்கம் காதலர்களுக்கு இல்லை போலும்.. சரண் தனது வீட்டில் என்ன பேசினான்..? என்று தெரியவில்லை.. அடுத்த ஒரு மாதத்தில் சரண், சங்கீதா திருமணம் நடந்து முடிந்துவிட்டது..

ஆனால் சரண் வீட்டார் முகத்தில் இருந்த திருப்தியின்மை கண்டு தயாளனுக்குச் சற்று நெருடலாகத்தான் இருந்தது.. இதோ இப்போது வரை அவரது அந்த நெருடல் தொடர்கின்றது.. ஏனென்று தெரியவில்லை அவரது மனம் கிடந்து அடித்துக் கொண்டது.. அவர் தனது நெஞ்சை நீவி விட்டுக் கொண்ட போதும் அவரது மனதின் படபடப்பு அடங்க மறுத்தது..

மும்பை மாநகரத்தின் மையத்தில் இருந்த அந்த அலுவலகம் பரபரவென்று காட்சி அளித்தது.. அதன் உரிமையாளன் சிவகுரு இன்று தான் இலண்டனில் இருந்து திரும்பி வருகின்றான்.. அவனுக்கு எல்லாமே நேர்த்தியாக இருக்க வேண்டும்.. அப்படி இல்லையென்றால் கோபத்தில் காச்மூச்சென்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்துவிடுவான்.. எந்தளவிற்கு அவன் நல்லவனோ அந்தளவிற்கு அவன் கோபத்தில் துர்வாசரின் வாரிசு..

அலுவலகத்தின் முன் நின்ற காரிலிருந்து இறங்கிய சிவகுரு கம்பீரமான நடையுடன் உள்ளே நுழைந்தான்.. எல்லோரும் எழுந்து அவனுக்கு மரியாதையுடன் வணக்கம் கூற.. அவன் சிறு தலையசைப்பால் கூட அவர்களது வணக்கத்துக்கான அங்கீகாரத்தை அளிக்காது செருக்குடன் உள்ளே சென்றான்.. சம்பளம் கொடுக்கும் முதலாளியின் வணக்கத்தைவிட அவன் கொடுக்கும் பணம் தானே அங்கே வேலை செய்கிறது.. அதனால் யாரும் அவனது அகந்தையைக் கண்டு கொள்ளாது தங்களது வேலைகளில் ஆழ்ந்தனர்..

“சார், அடுத்து மீடியா மீட்டிங் இருக்கு சார்..” அவனது செயலாளர் நந்தீஷ் சொல்லவும் அவன் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான்..

“மீட்டிங் ஹால்ல அவங்களை வெயிட் பண்ண சொல்லுங்க..” என்றவன் இடையில் கிடைத்த பத்து நிமிடங்களில் தனக்கு வந்த மின்னஞ்சலை திறந்து பார்த்தான்.. பதில் அனுப்ப வேண்டியதை நந்தீஷிடம் குறிப்பு எடுத்துக் கொள்ளச் சொன்னான். அவனது வேகத்திற்கு ஏற்றார் போன்று நந்தீஷும் வேக வேகமாய்க் குறிப்புகள் எடுத்துக் கொண்டான்..

“தட்ஸ் இட்..” என்று எழுந்தவன் புயல் போல் அறையை விட்டு வெளியேறி இருந்தான்..

கூட்டம் நடக்கும் அந்தப் பெரிய கூடத்திற்கு வந்த சிவகுரு அங்கு இருந்த ஊடகவியலாளர்களைக் கூர்ந்து பார்த்தபடி வந்தமர்ந்தான்.. அடுத்து அவனை நோக்கி படையெடுத்து வந்த தொழில் சார்ந்த கேள்விகள் அனைத்திற்கும் டக்டக்கென்று பதில் கூறியவன் அடுத்து அவனது வாழ்க்கை பற்றிய கேள்விகளுக்கு மட்டும் சற்று நிதானித்தான்..

“சார்.. உங்களுக்கு வர போகும் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு இருக்கிறதா..?” என்று கேட்கப்பட்ட கேள்வி அவனுள் பலவித உணர்வுகளைத் தோற்றுவித்தது.. ஆனால் அவன் சாமர்த்தியமாகத் தனது உணர்வினை வெளிக்காட்டாது மிகுந்த எச்சரிக்கையுடன் தனக்குள் புதைத்துக் கொண்டு வெளிப்பார்வைக்கு வசீகரமாகப் புன்னகைத்தவன்,

“நிச்சயம் எனக்கு ஏற்றார் போன்று எல்லாவித தகுதிகளுடன் தான் அவங்க இருப்பாங்க.. அப்படிப்பட்ட ஒரு பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்வேன்..” என்று கூற.

“அப்போ பெண் யாரென்று முடிவு செய்யப்பட்டு விட்டதா சார்..?” ஒருவன் ஆர்வம் தாங்காது கேட்க..

தனது வலக்கை ஆட்காட்டி விரலை மறுப்பாக அசைத்த சிவகுரு.. “நீங்கள் இல்லாது என் திருமணம் நடக்காது.. அப்போது யாரென்று தெரிந்து கொள்ளுங்கள்..” என்றவன் பேட்டி முடிந்தது என்பதற்கு அர்த்தமாய் நாற்காலியில் இருந்து எழுந்து கொண்டான்.

அந்த அறையை விட்டு வெளியில் வந்தவன், “சென்னைக்கு ப்ளைட் எப்போ..?” என்று கேட்க..

“இன்னும் ஒன் அவர்ல சார்..” என்று நந்தீஷ் பதிலளித்தான்..

“ம், ம்..” என்றவன், “டோன்ட் டிஸ்டர்ப் மீ..” என்றபடி தனது அலுவலக அறையினுள் நுழைந்து கொண்டான்..

நாற்காலியில் விழிகளை மூடி சாய்ந்தமர்ந்த சிவகுருவின் முகத்தில் அப்படியொரு களைப்புத் தெரிந்தது.. கடந்த இரு மாதங்களாக அவன் சிறிதும் ஓய்வின்றி உலகம் முழுவதும் ஓடி கொண்டிருக்கிறான்.. அவனை ஓய்வெடு என்று கூறுபவர்களும் யாருமில்லை.. அப்படி யாரையும் அவன் தன்னருகே நெருங்க விட்டதும் இல்லை.. அவனும் தனக்கு ஓய்வு வேண்டும் என்று நினைத்ததும் இல்லை.. ஒரு சில நொடிகள் தான் அவன் தனக்குள் உழன்று கொண்டிருந்தது.. அடுத்த நொடி தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் நேராக அமர்ந்து தன் முன்னிருந்த கோப்பை எடுத்துப் புரட்டலானான்..

‘நாம் ஓய்வெடுக்கும் ஒவ்வொரு நொடியும் எங்கோ நம்மைத் தாக்கும் பிரம்மாஸ்திரம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் கொள்.. அதை முறியடிக்க நாம் இருபத்தினான்கு மணி நேரமும் விழிப்புடன் இயங்கி கொண்டிருக்க வேண்டும்.. நம்மைப் போன்ற தொழிலதிபர்களுக்கு ஓய்வு என்பதே கிடையாது..’ என்று அவனது தாத்தா நாராயணன் கூறிய வார்த்தைகளே அவனுக்கு வேதவாக்கு..

அடுத்தச் சில மணித்துளிகளில் விமானத்தின் மூலம் சென்னையை வந்தடைந்த சிவகுரு நேரே தனது வீட்டிற்கு வந்து

சேர்ந்தான்.. வாயிலில் வந்து நின்ற காரிலிருந்து வேகமாய்க் கீழே இறங்கியவன் வீட்டிற்குள் நுழையும் போது எங்கிருந்தோ பறந்து வந்த பெண்கள் கைப்பை ஒன்று அவன் முகத்தில் பட்டு கீழே விழுந்தது..

## 2

**வீ**ட்டிற்குள் நுழைந்த சிவகுருவை வரவேற்க வார்த்தைகள் அற்றவர்களாய் வீட்டினர் அனைவரும் திகைப்புடன் அவனைப் பார்த்தனர்.. அவனோ தனது தம்பி சரணை முறைத்துப் பார்த்திருந்தான்.. சரண் அண்ணனை பார்க்க இயலாது தனது தலையைக் குனிந்து கொண்டான்.. தம்பியின் அருகில் நின்றிருந்த அவனது மனைவி சங்கீதாவை சிவகுரு கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.. அவளைச் சிறிதும் கண்டு கொள்ளாது தனது சிம்ம குரலில்,

"சரண்.." என்று அவன் தனது தம்பியை அழைத்தான்.. சரண் பயந்து கொண்டே அண்ணன் அருகில் சென்றான்.. அடுத்த நொடி அருகில் வந்த சரணின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான் சிவகுரு.. சரண் கன்னத்தைப் பிடித்தபடி திகைத்து போய் அப்படியே நின்றுவிட... அவனது செயலில் அங்கு நின்றிருந்த அவர்களது மாமா குணசேகரன் மற்றும் அத்தை சுந்தரி இருவரும் பேச வார்த்தைகளற்று அதிர்ந்து போயிருந்தனர்..

"இப்போ சரணை எதுக்கு அடிச்சீங்க..?" சங்கீதா மட்டும் சிவகுருவுக்கு எதிராகக் குரலை உயர்த்தினாள்..

"சரண், உன் பொண்டாட்டியை வாயை மூடிட்டு இருக்கச் சொல்லு.." சிவகுரு அழுத்தமான குரலில் தம்பியிடம் எச்சரிக்கை விடுத்தான்.. சரண் விழிகளால் மனைவியிடம் கெஞ்சினான்..

"இப்படி அடிவாங்கிட்டு நிற்க உங்களுக்கு வெட்கமா இல்லையா சரண்..? ஆனால் எனக்கு வெட்கமாக இருக்கிறது.." என்று கோபத்தில் கத்தியவளை கண்டு சிவகுருவின் உதடுகள் ஏளனமாய் வளைந்தது..

"அப்படி என்றால் உன் பொண்டாட்டி மான, அவமானத்துக்கு அஞ்சி வீட்டை விட்டுப் போகப் போகிறாளா சரண்..?" பதிலுக்கு அவனது வார்த்தைகள் ஏளனமாய் வந்தது..

"நான் எதுக்குப் போகணும்..? இந்த வீட்டில் உங்களுக்கு எந்தளவுக்கு ரைட்ஸ் இருக்கிறதோ..? அதே அளவு சரணுக்கும் இந்த வீட்டில் ரைட்ஸ் இருக்கு.. அவருடைய மனைவி நான் எதுக்கு வீட்டை விட்டு போகணும்..?" என்று தன்னைப் பார்த்து அலட்சியமாகப் பேசிய சங்கீதாவை கண்டு அவனுக்கு ஆத்திரம் வந்தது..

"சரண், உனக்கு ஒரு நிமிசம் தான் டைம்.. அதுக்குள்ள உன் பொண்டாட்டியை இங்கே இருந்து கூட்டிட்டு போயிரு.." சிவகுரு அடக்கப்பட்ட கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்..

"சங்கிம்மா, ப்ளீஸ்.." சரண் மனைவியிடம் கெஞ்சினான்..

"என்கிட்ட கெஞ்சுறதை விட்டுட்டு.. உங்க அண்ணனை எதிர்த்து பேச பழகுங்க.." சங்கீதா கறார் குரலில் கூற.. சரண் செய்வதறியாது விழித்தான்..

சிவகுரு இருவரையும் கோபத்துடன் பார்த்தவன், "இதுக்குத் தான் சொல்றது சரண்.. தராதரம் பார்த்து பொண்ணு எடுக்கணும்ன்னு.. நம்ம ஸ்டேட்ஸ்க்கு ஏத்த மாதிரி பொண்ணு எடுத்திருந்தால் எந்த இடத்தில், எப்படி நடந்துக்கணும்ங்கிற நாசுக்குத் தெரிந்திருக்கும்.. ஆனால் இங்கே..??" சங்கீதா மீது இகழ்ச்சியான பார்வையை வீசியவன்,

"பிச்சைக்காரியை கல்யாணம் பண்ணினால் இப்படித்தான் நடக்கும்.. தினமும் ஒரு சண்டை..." என்றவனது பார்வை கீழே கிடந்த கைப்பையை நோக்கியது..

"மைண்ட் யுவர் வேர்ட்ஸ் மிஸ்டர்.." சிவகுருவை கண்டு கையை நீட்டி ஆங்காரமாய்ப் பேசிய சங்கீதா மேலே வார்த்தை வராது அவமானத்தில் சிவந்த முகத்துடன் அவனைப் பார்த்தாள்.. சரணோ இருவருக்கும் இடையில் மாட்டி கொண்ட முழித்தான்..

"என்னைக் கை நீட்டி பேசும் தகுதி உனக்கில்லை.." மேலே பேச போன சிவகுருவை அவனது தாத்தா நாராயணனின் குரல் தடுத்து நிறுத்தியது..

"சிவா.." அவரது கர்ஜனை குரலில் சிவகுரு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்..

"இங்கே என்ன வேடிக்கை போங்க எல்லோரும்.. உனக்குத் தனியா சொல்லணுமா சரண்..? உன் மனைவியை அழைத்துக் கொண்டு போ.." என்று அவர் சரணுக்கு உத்தரவிட...

குணசேகரன் மற்றும் சுந்தரி இருவரும் உள்ளே சென்றுவிட.. சரண் கெஞ்சுதலாய் மனைவியைப் பார்த்தான்.. வேறுவழியின்றிச் சங்கீதா கோபத்தில் முணுமுணுத்துக் கொண்டே கணவனுடன் சென்றாள்.

"சிவா.. என்னோட ரூமுக்கு வா.." என்றழைத்த தாத்தா பேரனின் பதிலை எதிர்பார்க்காது முன்னால் நடக்க.. அவருடைய பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்காது பேரனும் அவரின் பின்னே சென்றான்..

அறைக்குள் நுழைந்ததும்.. "உட்கார் சிவா.." என்றவர் அவன் அமர்ந்ததும் தொழிலை பற்றிக் கேட்டார்..

அவர் அவனது உடல்நிலையைப் பற்றியோ, அவனது பயணக் களைப்பை பற்றியோ எதுவும் கேட்கவில்லை.. அதற்காக அவருக்கு அக்கறை இல்லை என்று சொல்ல முடியாது.. அவர் வளர்ந்தவிதம் அப்படி.. அதே போல் அவர் தனது பேரனையும் வளர்த்திருந்தார்.. பேச்சு மணிக்கணக்கில் நீண்டு கொண்டே போனது.. அவை எல்லாம் தொழிலை எப்படி விஸ்தரிப்பது என்பது பற்றிய பேச்சாக இருந்தது..

"ஓகே தாத்தா.. எனக்கு நேரமாகிறது..." என்றபடி சிவகுருவை கண்டு அப்போது தான் ஞாபகம் வந்தவராய் நாராயணன்,

"லன்ச் முடித்துவிட்டு போப்பா.." என்க..

"இது பிசினஸ் லன்ச் தான் தாத்தா.." என்றவன் அங்கிருந்து செல்ல முயன்றான்..

"சிவா.." அவரது குரலில் அப்படியே தேங்கி நின்றவன் கேள்வியாய் அவரைத் திரும்பி பார்த்தான்..

"நாளை சாருலதா இங்கே வருகிறாள்.." என்றவரை கண்டு அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கி கொண்டவன்,

"வரட்டும்.." என்க..

தாத்தாவின் விழிகள் பேரனை உறுத்து விழித்தது.. அவனோ முகம் மாறாது அவரைப் பதிலுக்குப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனது உணர்வற்ற, பாறை போன்று இறுகிய முகத்தில் இருந்து அவரால் எதுவுமே கண்டுபிடிக்க முடியவில்லை..

“சீக்கிரமே கல்யாணம் பண்ணி கொள் சிவா..”

“இப்போது அதற்கு என்ன அவசியம் வந்தது..?” அவனது பார்வை அவரைத் துளைத்தெடுத்தது..

“கல்யாணமானால் தானே உன் தம்பி படும் பாடு உனக்குப் புரியும்.. அதற்குச் சொன்னேன்..” தாத்தா உள்குத்தோடு கூறியதை கேட்டு பேரனின் உதடுகளில் விசம புன்னகை தவழ்ந்தது..

“ஓ.. அதற்காகச் சொன்னீர்களா தாத்தா..?” என்றவன் பின்பு கேலி குரலில்,

“அவன் படும் பாட்டைக் கண்டு தான் எனக்குக் கல்யாணம் மீதிருந்த ஆசையே போய்விட்டது.. ஒருவன் ஒருத்தி கழுத்தில் மஞ்சள் கயிற்றால் மூன்று முடிச்சு போட்டு, தனது கழுத்தை சுற்றி சுருக்கு கயிறு மாட்டி, அதற்கும் சேர்த்து முடிச்சு போட்டுத் தனக்குத் தானே இறுதி உரை எழுதி கொள்கிறான்.. எனக்கு இது செட்டாகாது தாத்தா..” என்றவன் அவரது பதிலை எதிர்பார்க்காது அங்கிருந்து அகன்று விட்டான்.

தாத்தா பேரனது பேச்சுச் சாமர்த்தியத்தில் அயர்ந்து தான் போனார்..

அங்கே சரணின் அறையில் சங்கீதா கோபத்தில் கத்தி கொண்டிருந்தாள்.. சரணோ பெரும் அவஸ்தையுடன் அவளை அடக்கும் வழி தெரியாது தவித்திருந்தான்.. அவனும் பதிலுக்குக் கோபம் கொண்டு அவளைத் திட்டி இருக்கலாம், அடித்து இருக்கலாம்.. ஆனால் அவனால் அதை எல்லாம் செய்ய முடியவில்லை.. ஏனெனில் அவன் சங்கீதாவை உயிருக்கு உயிராய்க் காதலிக்கின்றான்..

“இன்னும் எத்தனை நாளைக்குத் தான் இந்தப் பிச்சைக்கார பிழைப்பு.. இதில் உங்கண்ணா என்னடான்னா என்னைப் பார்த்து பிச்சைக்காரின்னு சொல்றாரு.. சொந்த தம்பியை பிச்சைக்காரன் மாதிரி வச்சியிருக்கிறதுக்கு அவர் தான் வெட்கப்படணும்.. நான் எதுக்கு வெட்கப்படணும்..? வசதி இல்லாதவங்க, பிச்சைக்காரங்கன்னு தெரிஞ்சு தானே உங்க வீட்டில் இருந்து பெண் கேட்டு வந்தீங்க..?” அவள் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க கத்தி கொண்டிருந்தாள்..

“ப்ளீஸ், சங்கி.. நீ பேசுறது எல்லோர் காதிலும் விழ போகுது..”

"கையாலாகாத ஒரு கோழையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நான் படும் அவஸ்தை இருக்கே.. ச்சே.." என்று கையை உதறியபடி படுக்கையில் தொப்பென்று குப்புற படுத்தவளின் உடல் அழுகையில் குலுங்கியது.

சரண் அவள் அருகில் வந்தமர்ந்து அவளது தோளை தொட்டான். திருமணமான ஒரு மாதத்தில் புத்தம் புதுக் காதல் மனைவி அழுவதைக் கண்டால் எந்தக் கணவனால் தான் தாங்கி கொள்ள முடியும்..?

"அழாதே சங்கிம்மா.. நான் என்ன செய்யணும்ன்னு சொல்லு..?"

"நமக்குக் கல்யாணமாகி எவ்வளவு நாளாச்சு..?"

"ஒரு மாசம்.."

"இந்த ஒரு மாசத்தில் என்னை வெளிநாடு எங்கேயாவது கூட்டிட்டு போயிருக்கீங்களா..?"

"அது வந்து சங்கி.. வெளிநாட்டில் இருக்கும் தொழிலை எல்லாம் அண்ணன் தான் பார்த்துக்கிறார்.." அவன் சங்கடமான குரலில் தயங்கியபடி கூறினான்..

"தொழிலுக்கும், ஹனிமூன் போவதற்கும் என்ன சம்பந்தம் சரண்..?" அழுது கொண்டே கேட்டவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது..

"ப்பூ.. ஹனிமூன்தானே.. கட்டாயம் போவோம் சங்கி.. இவ்வளவு நாள் அண்ணன் இல்லாததால் நான் இங்கே இருந்து தொழிலை கவனிக்க வேண்டியதாய் போயிற்று.. இப்போது தான் அண்ணன் வந்துவிட்டாரே.. இனி அவர் தொழிலை பார்த்து கொள்வார்.. நான் உன்னைப் பார்த்து கொள்கிறேன்.." என்று சரண் கண்சிமிட்டியபடி மனைவியை அணைத்தான்.. அவனது வார்த்தைகளில் அவளும் அழுகையைக் கைவிட்டவளாய் சந்தோசமாய்ப் புன்னகையுடன் கணவனது கைகளுக்குள் பாந்தமாய் அடங்கினாள்..

**ச**ங்கீதா வீட்டிற்குப் போக வேண்டும் என்றதும் சக்திப்ரியா வர மாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தாள்..

"போம்மா, அங்கே எல்லாம் எனக்குச் செட்டாகாது.. ஒரே இடத்தில் பொம்மை போல் உட்கார்ந்து இருக்கணும்.. சத்தமா பேச கூடாது, சத்தமா சிரிக்கக் கூடாது.. தேவைப்பட்டா தான் பேசணும், தேவைப்பட்டா தான் சிரிக்கணும், இதை எல்லாம் விடப் பெரிய கொடுமை என்ன தெரியுமா..?" என்று அன்னையைப் பார்த்து கூறியவள் பின்பு பாட்டியிடம் திரும்பி,

"உனக்காவது தெரியுமா ப்ரைனி..?" என்று கேட்க..

"நீ என்ன சொல்ல வர்றங்கிறது எனக்கு எப்படிடி தெரியும்..?" ஞானம் சலித்துக் கொண்டார்..

"அப்பா, உங்களுக்காவது தெரியுமா..?" உணவு அருந்தி கொண்டிருந்த தந்தையைக் கண்டு அவள் கேட்க..

"நீயே சொல்லுடாம்மா.." தயாளன் வாஞ்சையுடன் கூறினார்.

"நம்ம இஷ்டத்துக்குச் சாப்பிட முடியாதுப்பா.. அவங்க எல்லாம் அளவா சாப்பிட்டு உடம்பை மெயின்டையின் பண்றாங்களாம்.. ஆனா நான் வஞ்சனை இல்லாது சாப்பிட்டு வளர்ந்தவள்.. என்னைப் போய் வாயை கண்ட்ரோல் பண்ணுன்னு சொல்றது அபத்தமா இல்லையாப்பா..?" செதுக்கி வைத்தார் போன்று ஒல்லி உடல்வாகுடைய சக்திப்ரியா சிலிர்த்துக் கொண்டு கூற.. அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்..

"நான் உனக்குத் தனியே பணம் தருகிறேன் சக்தி.. அதில் ஏதாவது வாங்கிச் சாப்பிடு.. நீ அம்மா கூடத் துணைக்குப் போயிட்டு வாம்மா.." தயாளன் மகளைச் சமாதானம் செய்தார்.

"நீங்க சொன்னதுக்காக அம்மா கூடப் போறேன்ப்பா.. அங்கே அந்த லேடி.. அதான் அந்த அல்டாப்பு சுந்தரி.. ரொம்பத்தான் அலட்டிக்குது.. இந்தத் தடவை அதுக்கு வேட்டு வைக்கிறேன்.." என்று நம்பியார் போன்று இரு கைகளையும் பிசைந்தபடி வில்லி போல் கூறியவளை கண்டு எல்லோருக்கும் சிரிப்பு தான் வந்தது..

"பெரியவங்களை அப்படி எல்லாம் பேச கூடாது சக்தி.." என்ற தயாளன் எழுந்து கை கழுவ சென்றார்..

"ப்ரைனி, நீ என் கூட வா.. ட்ரெஸ் எல்லாம் எடுத்து வைக்கணும்.." என்றவள் ஞானத்தை உடன் அழைத்துக் கொண்டு சென்று விட்டாள்.

மகள் செல்வதைப் புன்னகையுடன் பார்த்தபடி வந்த தயாளனை கண்டு, "இன்னும் சின்னப் பிள்ளையாவே இருக்கிறாள்.. இவளை பார்த்தால் என்ஜினியருக்கு படிக்கிறவள் மாதிரியா இருக்கு..?" மகளைச் செல்லமாய் வைத்தார் ராணி..

"குழந்தை மனம் கொண்டு இருப்பதும் வரம் தான் ராணி.. சக்தி இப்படி இருப்பது தான் நன்றாக இருக்கிறது.."

"நாம பெத்தவங்க அவளை அனுசரித்துப் போவோம்.. இதே போல் வர்றவனும் அனுசரித்துப் போகணுமே..?" ராணிக்குப் பெருத்த கவலையாக இருந்தது..

"எல்லாம் நல்லதே நடக்கும்.."

"சக்திக்கும் படிப்பு முடிய போகுது.. மாப்பிள்ளை பார்க்கலாமே.."

"எதுக்கு இவ்வளவு அவசரம்..?" தயாளன் மனைவியைப் புரியாது பார்த்தார்..

"இவளும் சங்கீதாவை போல் காதல்ன்னு யாரையாவது இழுத்துக் கொண்டு வந்து நின்றால்..? அதான் பயமாயிருக்கு.. சக்தியையாவது நம்ம இனத்தில் கொடுத்துரணும்ங்க.." ராணி தனது மனத்தாங்கலை கணவரிடம் கொட்டினார்..

என்ன தான் சங்கீதா பெரிய இடத்தில் வாக்கப்பட்டுப் போயிருந்தாலும் அவர்கள் தங்களது இனம் இல்லையே என்கிற சிறு குறை அவரது மனதை உறுத்தி கொண்டு தான் இருக்கிறது.. அதைவிட, தங்கள் மகளுக்குத் தாங்களே மணமகன் பார்த்துத் திருமணம் பேசி முடிக்கவில்லை என்கிற குறை பெரும் மனக்குறையாக அவருக்கு இருக்கிறது..

"சக்தி சின்னப் பெண் ராணி.. இன்னும் இரண்டு வருடங்கள் போகட்டும்.." தயாளன் கண்டிப்பான குரலில் கூற.. ராணி அரைமனதாகத் தலையசைத்தார்..

"அப்புறம் முக்கியமான விசயம் சொல்லணும்ன்னு நினைச்சேன் ராணி.. மாப்பிள்ளையின் அண்ணன் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்து விட்டாராம்.."

"அவர் வந்தது உங்களுக்கு எப்படிங்க தெரியும்..?"

“நியூஸ் சேனலில் அவரைக் காட்டினாங்களே.. நீ பார்க்கலையா..?”

“எங்கே..? சக்தி நாள் முழுவதும் டிவி சீரியலை பார்த்துட்டு இருக்கிறாள்.. அவள் கையிலிருந்து அவ்வளவு லேசில் ரிமோட்டை வாங்கிவிட முடியுமா..? அதான் நியூஸ் எதுவும் பார்க்கலை..”

“அந்தத் தம்பியோட நடவடிக்கை எனக்கு என்னமோ நெருடலாமே இருக்கு..”

“ஏங்க அப்படிச் சொல்றீங்க..?”

“யாராவது சொந்த தம்பி கல்யாணத்துக்குக் கூட வராம தொழிலை பார்ப்பாங்களா..?”

“அதான் எனக்கும் புரியலை..” என்ற ராணி அத்தோடு அந்தப் பேச்சை விட்டு விட்டார்..

“ராணி, சக்தியிடம் அங்கே பார்த்து கவனமா நடந்துக்கச் சொல்லு.. அவங்க வாழ்க்கை முறை வேறு.. நம் வாழ்க்கை முறை வேறு..” எச்சரிக்கும் குரலில் கூறினார் தயாளன்..

“அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்ங்க.. நீங்க கவலைப்படாதீங்க..” ராணி சமாதானம் கூறவும் தான் தயாளன் சற்று நிம்மதியுற்றவராய் அங்கிருந்து அகன்றார்..

மறுநாள் ராணி, சக்திப்ரியா இருவரும் மதுரையில் இருந்து சென்னையை நோக்கி பயணமானர்.. ராணி வழியெங்கும் மகளுக்கு அறிவுரை கூறிக் கொண்டே வந்தார்..

“ம்மா, தூக்கம் வருதும்மா..” என்றவள் கண்களை மூடி கொண்டாள்.. மகள் கூறியதை உண்மை என்று நம்பிய ராணியும் விழிகளை மூடி உறங்க ஆரம்பித்தார்..

சக்திப்ரியா மெல்ல அரை விழி திறந்து அன்னை உறங்கியதை உறுதி செய்தவள் பின்பு ஜன்னலில் சாய்ந்தபடி வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.. அவளது மனம் சரணின் அண்ணன், அந்தப் பெயர் தெரியாதவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தது..

‘இவன் அலட்டல் நம்பர் ஒன்னாக இருப்பான் போலிருக்கே.. ஷ்.. ஷப்பா.. இப்பவே கண்ணைக் கட்டுதே..’ என்று அவள் மனதிற்குள் சலித்துக் கொண்டாள்..

அம்மா, மகள் இருவரும் சென்னை வந்து இறங்கியதும் சரண் அவர்களை வரவேற்க பேருந்து நிலையத்திற்கே வந்துவிட்டான்..

"மாப்பிள்ளை நல்லா இருக்கீங்களா..?" ராணி பவ்யமாய் நலம் விசாரிக்க..

"வாங்கத்தை.. நல்லா இருக்கேன்.." என்று சரணும் பணிவாய் பதில் கூறினான்..

"மாமா, எப்படி இருக்கீங்க..?" சக்திப்ரியா அக்காள் கணவனைக் கண்டதும் வாயெல்லாம் பல்லானாள்..

"இந்த நொடி வரை நல்லா தான் இருக்கேன் சக்தி.. இனி தான் நான் எந்தக் கதியாகப் போகிறேனோன்னு நினைச்சா லைட்டா பயம் வருது.." என்று அவன் சிரிக்காமல் கூற..

"மாமா.." என்று அவள் செல்லமாய்ச் சிணுங்கினாள்..

"சரி வாங்க.. காரில் போகும் போது பேசலாம்.." என்றவன் இருவரையும் காரை நோக்கி அழைத்துச் சென்றான்.. இருவரும் ஏறியதும் காரை கிளப்பிச் சாலை போக்குவரத்தில் கலந்தவன்,

"அப்புறம் சக்தி, படிப்பு முடிஞ்சிருச்சு.. இனி என்ன பண்றதா இருக்க..?" என்று கேட்க..

"கல்யாணம் பண்ணிக்கிட்டு, டிவி சீரியல் பார்த்துட்டு சொகுசா வீட்டிலேயே இருக்கப் போறேன்.." என்றவளை கண்டு ஒருநொடி திகைத்தவன் பின்பு வாய்விட்டுச் சிரித்தான்..

"நல்ல லட்சியம்.." என்று அவன் மச்சினிச்சியைப் பாராட்ட..

"ம், அதே அதே.." என்று அவள் பெருமைப்பட்டுக் கொண்டாள்..

"சக்தி, வாயை வச்சிக்கிட்டு சும்மாயிரு.." மகளை அதட்டிய ராணி மருமகனிடம்,

"சங்கீதா எப்படி இருக்கிறாள் மாப்பிள்ளை..?"

"நல்லா இருக்கிறாள்.."

"எங்களை வந்து கூப்பிடறதை விட அவளுக்கு வேறென்ன வேலை வெட்டி மாமா..? ஏன் சங்கி வரலை..?"

சக்திப்ரியாவின் கேள்விக்குப் பதில் கூற முடியாது சரண் முழித்தான்.. நேற்று இரவு கேளிக்கை விருந்து ஒன்றிற்குச் சென்றுவிட்டு நள்ளிரவில் வீட்டிற்குத் திரும்பிய சங்கீதா இன்னமும் விழிக்காது தூங்குவதை அவன் எப்படி அவர்களிடம் கூறுவான்..? அதற்காகச் சிவகுரு அவனைக் காய்ச்சி எடுத்து விட்டதை அவன் எப்படிக் கூறுவான்..?

“ஹை சொசைட்டியில் இருக்கும் நல்ல பழக்கவழக்கங்களைப் பழகத் தெரியலை... ஆனால் அதில் இருக்கும் கெட்ட பழக்கங்கள் அனைத்தும் அத்துப்படி போலிருக்கு.. நேற்று உன் பொண்டாட்டி குடித்துவிட்டு ஆடின ஆட்டத்தை என் பிரெண்ட் ஒருத்தன் வீடியோ எடுத்து எனக்கு வாட்ஸ் அப் பண்றான்.. உன் தம்பி மனைவியின் லட்சணத்தைப் பார்ன்னு.. எனக்கு ரொம்ப அவமானமா போயிருச்சு.. உன் பொண்டாட்டி கிட்ட சொல்லி வை.. நாளையில் இருந்து அவள் உன் கூட ஐடி கம்பெனிக்கு வரணும்ன்னு.. அவள் அதுக்கான படிப்பை படிச்சிட்டு வேலை பார்க்காம ஊரை சுத்திக்கிட்டு இருக்கிறாள்.. நீயும் தலையாட்டி பொம்மை மாதிரி அவள் சொல்றதுக்கு எல்லாம் தலையை ஆட்டிக்கிட்டு இருக்க.. முதல்ல ஆம்பிளையா லட்சணமா நடந்துக்கோ..” என்று படபடவெனப் பொரிந்தவன் வெளியில் சென்றுவிட்டான்..

சரண் தான் தலையில் கை வைத்தபடி அமர்ந்துவிட்டான்.

## 3

“ம்மா..” அன்னையைக் கண்டதும் விழிகள் கலங்க ஓடிவந்து அணைத்து கொண்டாள் சங்கீதா.. சரண் வரும் வழியில் மனைவிக்குக் குறுஞ்செய்தி அனுப்பி அவளைத் தயாராக இருக்கச் சொல்லியிருந்தான்.. அதன்படி அவளும் குளித்து முடித்துப் புத்துணர்வோடு தயாராகி இருந்தாள்.

“எப்படிம்மா இருக்க..?” மகளைக் கண்டதும் ராணியின் விழிகளும் கலங்கி போனது..

“போதும் போதும்.. உங்க பாசத்தைக் கொஞ்சம் நிப்பாட்டுங்க.. சங்கி, நான் ஒருத்தி இங்கே இருக்கிறதை நீ கவனிக்கவே இல்லை..” என்று சக்திப்ரியா அக்காவிடம் குறைப்பட்டுக் கொண்டாள்..

“சக்தி, ஐ மிஸ் யூடி..” என்ற சங்கீதா தங்கையை அணைத்துக் கொள்ள..

“அங்கே மாமாவை பாரு.. பொறாமையில் பொசுங்கிறதை..” என்று சக்திப்ரியா அக்காவின் காதில் கிசுகிசுத்தாள்..

“பொறாமையா..? எதுக்குடி..?” சங்கீதா புரியாது தங்கையைப் பார்க்க..

“நீ என்னைக் கட்டிப்பிடிச்சிட்டு இருக்கியே.. அதுக்குத் தான்..” என்று கண்சிமிட்டி சிரித்த தங்கையைக் கண்டு,

“போடி அரட்டை..” என்று செல்லமாய் அவளது தோளில் அடித்தாள் சங்கீதா..

“சாப்பிட்டீங்களாம்மா..?”

“நீ வந்தால் தான் சாப்பிடுவேன்னு சொல்லிட்டாங்க..” சரண் கூறவும்..

“வாங்கம்மா, வா சக்தி..” என்ற சங்கீதா இருவரையும் அழைத்துக் கொண்டு உணவு மேசை நோக்கி நடந்தாள்..

உணவு மேசையில் ஏற்கெனவே தாத்தா, குணசேகரன், சுந்தரி மூவரும் அமர்ந்திருந்தனர்.. ராணி பெரியவரை கண்டு,

“வணக்கம்..” என்று இரு கரங்களைக் கூப்பி வணக்கம் தெரிவிக்க.. அதைத் தலையசைத்து ஆமோதித்த நாராயணன்,

“எப்படியிருக்கம்மா..?” என்று கேட்டார்..

“நல்லாயிருக்கேன்ங்க..”

“என்னம்மா சக்தி, படிப்பு எல்லாம் முடிஞ்சிருச்சுப் போலிருக்கு.. அடுத்து என்ன செய்யப் போகிற..?” என்று அவர் சக்திப்ரியாவை பார்த்து கேட்டார்..

“அது வந்து தாத்தா.. கல்...” அவள் வழக்கமாய்க் கூறும் வசனத்தைத் திருப்பிப் படிக்க நினைத்த போது ராணி அவளது கையில் நறுக்கென்று கிள்ளி பேச விடாது தடுத்தார்..

“ஆ..ஆ..ஆ..” என்று அவள் வலியில் அலற..

அவளது அலறல் சத்தம் கேட்டு நாராயணன், குணசேகரன், சுந்தரி மூவரும் முகத்தைச் சுளித்தனர்.. இது மாதிரியான சிறு

பிள்ளை செயல்களை அவர்கள் ஒரு போதும் ஊக்குவிப்பது இல்லை.. பிடிக்கவும் பிடிக்காது..

"சாப்பிடுங்க.." என்ற நாராயணன் எழுந்து கை கழுவ சென்றுவிட.. உடன் குணசேகரன், சுந்தரி இருவரும் எழுந்து சென்று விட்டனர்..

ராணி திகைப்புடன் பெரியவர் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.. சக்திப்ரியா தவறு செய்துவிட்ட குழந்தை போல் விழித்துக் கொண்டிருந்தாள்..

"அம்மா, நீங்க உட்காருங்க.. சக்தி, நீயும் உட்காரு.." சங்கீதா எதுவும் நடவாதது போல் இருவரையும் அமர்த்தி உணவு பரிமாறினாள்.. பின்பு சரணை கண்டு,

"உங்களுக்குத் தனியா சொல்லணுமா..?" என்று கேட்க.. சரண் சத்தம் இல்லாது அமர்ந்து விட்டான்..

"ஏன்டி இப்படிக் கத்தி மானத்தை வாங்கின..?" ராணி சிறு குரலில் சின்ன மகளைக் கண்டித்தார்..

"நீங்க தானம்மா கையில் கிள்ளினீங்க.. கிள்ளினால் வலிக்காதா..?" சக்திப்ரியா கையைத் தடவியபடி பாவமாய்க் கூற..

"நீ தத்து பித்துன்னு உளறி மானத்தை வாங்காம இருக்கணுமேன்னு தான் கிள்ளினேன்.. ஆனாலும் நீ எங்க மானத்தை வாங்கிட்ட... உன்னை எல்லாம்.. இருக்கிற இரண்டு நாளும் உன் வாலை சுருட்டி வச்சிட்டு சும்மாயிருக்கணும்.." ராணி மிரட்டலாய் மகளை எச்சரித்தார்..

உணவு உண்டு முடிந்ததும் சரண் அலுவலகத்திற்குக் கிளம்பி சென்றுவிட... மூவரும் தோட்டத்தில் வந்து அமர்ந்தனர்.. சக்திப்ரியா ஒரு இடத்தில் அமராது அங்கிருந்த செடிகள் அருகே சென்று ஆராய்ந்து கொண்டிருந்தாள்.. ராணியும், சங்கீதாவும் தனித்து அமர்ந்திருந்தனர்..

"உண்மையைச் சொல்லு சங்கி.. நீ சந்தோசமா இருக்கியா..?" ராணி மூத்த மகளைக் கண்டு வாத்சல்யத்துடன் கேட்டார்..

"மூணுவேளை சாப்பாடு.. உடுத்த துணி இதெல்லாம் தான் வாழ்க்கைன்னா நான் சந்தோசமா தான் இருக்கேன்.." சங்கீதாவின் பதிலில் ராணியின் மனம் துணுக்குற்றது..

“என்ன சொல்ற சங்கி..?”

“பச், லவ் மேரேஜ் பண்ணிக்கிட்ட ஃபீலே வர மாட்டேங்குதும்மா.. சரண் எப்போ பார்த்தாலும் கம்பெனி, கம்பெனின்னு அதையே கட்டிட்டு அழறாரு.. என் கூட டைம் ஸ்பெண்ட் பண்றது கம்மி.. சரி, நான் தனியா வெளியில் போகலாம்ன்னு பார்த்தால் அதுக்கும் ஆயிரத்தெட்டுக் கட்டுப்பாடுகள்.. மூச்சு முட்டுதும்மா..” என்றவளுக்குக் கண்களில் கண்ணீர் கரை கட்டி நின்றது..

“கல்யாணமான புதுசில் எல்லாப் பெண்களுக்கும் இப்படித்தான் இருக்கும்மா.. போகப் போகச் சரியாகிரும்..” மகளின் இன்னொரு பக்கத்தை அறியாத அப்பாவி அன்னையாய் ராணி அறிவுரை கூறினார்..

“பார்க்கலாம்..” என்று சலிப்பாகக் கூறியவள்,

“சக்தி அடுத்து என்ன செய்யப் போகிறாள்ம்மா..?” என்று தங்கை பற்றிய அக்கறையுடன் கேட்க..

“கல்யாணம் பண்ணிட்டு வீட்டில் இருக்கப் போகிறாளாம்..” ராணி சக்திப்ரியாவை திரும்பி பார்த்தபடி புன்னகையுடன் கூறினார்..

“இப்போ எதுக்குக் கல்யாணம்..? வேலைக்குப் போகச் சொல்லுங்க..”

“அதைத் தான் அப்பாவும் சொன்னாங்க.. சங்கி, நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே..?” ராணி பீடிகை போட..

“சொல்லுங்கம்மா..”

“உங்க கம்பெனி எதாவது ஒன்றில் அவளுக்கு வேலை போட்டு கொடுக்க முடியுமா..?” அன்னையின் வார்த்தையில் சங்கீதாவின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது.. அதை அவர் வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டார்..

“சக்தியை இங்கே எல்லாம் தங்க வைக்க வேண்டாம்.. அவள் வெளியில் ஹாஸ்டலில் தங்கி கொள்வாள்..” என்று அவர் அவசரமாகச் சொல்ல.. அதில் தன் நினைவு கலைந்த சங்கீதா,

“ஐயோ, நான் அதுக்குச் சொல்லலைம்மா.. இங்கே என் நிலைமையே வேறு..” என்று மட்டும் கூற..

"என்னடி ஆச்சு..?" ராணிக்குப் பயம் பிடித்துக் கொண்டது..

"எனக்கு இங்கே நடப்பது ஒண்ணுமே புரியலைம்மா.. சரண் இந்த வீட்டு வாரிசு மாதிரியே நடத்தப்படலை.. ஏதோ அடிமை மாதிரி, டம்மி பீஸ் மாதரி அவரை வச்சியிருக்காங்க.."

"யார் அப்படி வச்சிருப்பது..?" ராணியினுள் கலவரம் ஏற்பட ஆரம்பித்தது..

"வேறு யார்..? எல்லாம் அவரோட அண்ணன் சிவகுரு தான்.. அவர் தான் தொழிலை முன்னே இருந்து நடத்துகிறார்.. சரண், அவங்க மாமா குணசேகரன் இருவரையும் மேனேஜர் மாதிரி வச்சியிருக்காங்க.."

"பெரியவருக்கு இது தெரியாதா..?"

"தாத்தாவுக்கு இது எல்லாம் தெரியும்.. தாத்தா சொன்னால் மட்டுமே சிவகுரு கேட்டு கொள்வார்.. ஆனா அவர் எதுவும் சொல்ல மாட்டேங்கிறார்.."

"கொஞ்சம் பொறுமையா போ சங்கி.." ராணி மகளுக்கு எடுத்து கூற..

"என்னுடைய பொறுமை எப்போ வெடிக்கப் போகுதுன்னு எனக்கே தெரியலை.." எரிச்சலுடன் மொழிந்தாள் சங்கீதா.. மகளின் கலக்கத்திற்கான காரணம் அறிந்த ராணிக்கு மகளை நினைத்துக் கவலையாக இருந்தது..

**வ**ரவேற்பறையில் அமர்ந்திருந்த சுந்தரியை பார்த்தவாறே சக்திப்ரியா தோட்டத்தில் இருந்தபடி தனது அலைப்பேசியில் இருந்து அவரது அலைப்பேசிக்கு அழைப்பு விடுத்தாள்.. அவள் சங்கீதாவிடம் இருந்து சுந்தரியின் அலைப்பேசி எண்ணை வாங்கியிருந்தாள்.. மறுமுனையில் சுந்தரி அழைப்பை எடுத்ததும்,

"சுந்தரி கண்ணால் ஒரு சேதி.. சொல்லடி இந்நாள் நல்ல சேதி.." என்று சக்திப்ரியா கர்ண கொடூரமான குரலில் பாட்டு பாடி அவரைக் கடுப்பேத்தினாள்..

"ஏய் யாருடி இது..? நீ நேர்ல மட்டும் இருந்த.." என்று காய்ந்த சுந்தரி அடுத்துச் சொன்ன தமிழில் படுகேவலமாகத் திட்ட துவங்க.. அங்கே ஒரு கூவம் ஆறே ஓட துவங்கியது..

சக்திப்ரியா சிரித்தபடி அலைப்பேசியை அணைத்தாள்.. அழைப்பு துண்டிக்கப்பட்டதை அறிந்து அலைப்பேசியைக் காதில் இருந்து எடுத்த சுந்தரி கடுப்புடன் தனது அறையை நோக்கி சென்றார்.. அவர் சென்றதும் சக்திப்ரியா குடுகுடுவென்று உள்ளே ஓடிவந்தாள்..

"தொலைஞ்சது சனி.." என்று குதூகலத்துடன் அங்கு மேசை மீதிருந்த தொலையியக்கியை எடுத்து தொலைக்காட்சியை உயிர்ப்பித்தாள்.. தொலைக்காட்சி தொடர் பார்ப்பதற்காகத் தான் அவள் அங்கு அமர்ந்திருந்த சுந்தரியை விரட்டி இருந்தாள்..

"இவ்வளவு பெரிய வீட்டில், இவ்வளவு பெரிய டிவி இருந்து என்ன பிரயோஜனம்..? டிவி பார்க்க ஒத்த ஆளு இல்லை.. அதுவும் ஒரு விதத்தில் நல்லது தான்.. நாம தனியா, ஜாலியா, அனுபவிச்சு டிவி பார்க்கலாம்.." என்று வாய்விட்டு கூறியவள் அடுத்த நொடி நாடகத்தில் மூழ்கி போனாள்..

இரவு உணவு முடிந்து எல்லோரும் அவரவர் அறைக்குச் சென்றிருந்தனர்.. இவள் மட்டும் தனியே தோட்டத்தில் உலவி விட்டு வருகிறேன் என்று அன்னையிடம் கூறிவிட்டு இப்போது தொலைக்காட்சியில் ஐக்கியமாகி இருந்தாள்..

அதே நேரம் சிவகுரு தனது அலுவலக அறையில் தனியே அமர்ந்திருந்தான்.. அலுவலகத்தில் இருந்த அனைவரும் வேலை முடிந்து சென்றிருந்தனர்.. அவன் மட்டும் அங்கு இருந்தான்.. நேற்று தாத்தா அவனிடம் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது..

'நாளை சாருலதா இங்கே வருகிறாள்..'

தாத்தா கூறியதும் அந்த நேரம் அவன் அலட்சியமாகப் பதில் கூறியது என்னவோ உண்மை தான்.. ஆனால் இப்போது சாருலதாவை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் துணிச்சல் அவனுக்கு இருக்கிறதா..? என்றால்.. அது அவனுக்கே தெரியவில்லை.. பொல்லாத இரு மாதங்களுக்குப் பிறகு இன்று தான் அவளை நேருக்கு நேர் சந்திக்க இருக்கிறான்.. அவளைக் காணவே அவனுக்குப் பிடிக்கவில்லை.. ஆனாலும் ஒரே வீட்டில் இருந்து கொண்டு அத்தை மகளான அவளைச் சந்திக்காமல் தவிர்க்கவும் இயலாது.. மனதில் வெறுப்பைச் சுமந்து கொண்டு வெளியில்

இன்முகமாய் நடிக்க.. அதுவும் சாருலதாவிடம் நடிக்க அவனுக்குச் சுத்தமாய் விருப்பம் இல்லை..

"சார்.." நந்தீஷின் குரலில் அவனை ஏறிட்டு நோக்கிய சிவகுரு அப்போது தான் நேரத்தை பார்த்தான்.. மணி பதினொன்றாகி இருந்தது..

"நீங்க இன்னும் கிளம்பலையா..?" என்றபடி சிவகுரு நாற்காலியில் இருந்து எழுந்தான்..

"நீங்க கிளம்பாம.." நந்தீஷ் இழுக்கவும்..

"உங்களுக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு நந்தீஷ்.."

"எனக்கு நீங்க தான் முக்கியம் சார்.." சிறிதும் யோசிக்காது கூறியவனை அமைதியாய் ஏறிட்ட சிவகுரு அறையை விட்டு வெளியில் வந்தான்.. சிவகுரு காரை கிளப்பிக் கொண்டு போகும் வரை அங்கேயே நின்றிருந்த நந்தீஷ் அதன் பிறகே தனது காரை நோக்கி நடந்தான்..

வீட்டின் முன் காரை நிறுத்திய சிவகுரு பெரும் யோசனையுடன் வீட்டினுள் நுழைந்தான்.. அவன் எதிர்பார்த்து வந்தது சாருலதாவை.. ஆனால் அங்கு அவன் கண்ட காட்சியோ வேறு.. ஆம், அங்கே சக்திப்ரியா அமர்ந்து கொண்டு தொலைக்காட்சியைப் பார்த்தபடி பிழிய பிழிய அழுது கொண்டிருந்தாள்.. யாரோ ஒருத்தியை தன் வீட்டு வரவேற்பறையில் கண்டதும் அவனுக்குத் தூக்கிவாரி போட்டது.. அடுத்த நொடி,

"ஹேய், ஹூ ஆர் யூ..?" என்று கத்தியபடி அவன் சொடக்கிட்டு அவளை அழைத்தான்..

அவனது காட்டு கத்தலுக்கு மெல்லமாய்த் திரும்பி பார்த்த சக்திப்ரியா அவன் 'யார் நீ..?' என்று கேட்டதைக் காதில் வாங்காது,

"அங்கிள், நீங்களே பாருங்களேன் இந்த அநியாயத்தை.." என்று தொலைக்காட்சியை நோக்கி கையை நீட்டினாள்..

அங்கே மௌனராகம் படம் ஓடி கொண்டிருந்தது.. அதில் நாயகன் கார்த்திக்கை காவல்துறையினர் சுட்டு கொன்றுவிட..

நாயகி ரேவதி அதிர்ச்சியில் உறைந்து நின்றவள் பின்பு அவனை நோக்கி ஓடிவருகிறாள்.. அதைக் கண்டு தான் சக்திப்ரியா சோகம் தாங்காது தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தாள்..

“வாட்..? அங்கிள்..? நானா..?” அவள் தன்னை விளித்த முறை கண்டு அவனது கோபம் எல்லையைக் கடந்தது.. ஏற்கெனவே சாருலதா நினைவில் கோபத்துடன் இருந்தவனை சக்திப்ரியா வேறு ‘அங்கிள்’ என்றழைத்து அவனுள் கனன்ற நெருப்பிற்கு எண்ணெய் வார்த்து விட்டாள்..

“இங்கே நீங்களும், நானும் மட்டும் தானே இருக்கிறோம்.. என்னைப் பார்த்தால் அங்கிள் மாதிரியா இருக்கு..? இல்லைல்ல.. அப்போ மீதம் இருப்பது நீங்க ஒருத்தர் தான்.. அதனால் நான் அங்கிள்ன்னு சொன்னது உங்களை மட்டும் தான்..” தொலைக்காட்சியைப் பார்த்தபடி கூறியவளை கண்டு அவனது இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது.. நேரே அவள் முன் வந்து நின்றவன் மீண்டும் அவளைச் சொடக்கிட்டு அழைத்து,

“ஏய் எழுந்திருடி..” என்க..

“அங்கிள், டி போட்டு பேசுற வேலை எல்லாம் என் கிட்ட வேண்டாம்..” ஒற்றை விரல் நீட்டி அவனை எச்சரித்தவள் எழவில்லை.. மாறாகக் கால்கள் இரண்டையும் தூக்கி சோபாவின் மீது வைத்துச் சட்டமாகச் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டாள்..

“என் வீட்டில் இருந்து கொண்டு என்னையவே அதிகாரம் பண்ணுவியா..?” அவன் கூறியதை கேட்டதும் அவளுள் சிறு அச்சம் எழுந்தது.. இவன் அவனாக இருக்குமோ..? என்கிற சந்தேகம் வேறு அவளுள் முளைத்ததில் அவளது வாய் தானாக,

“நீங்க தான் அந்தச் சீனாகுனாவா..?” என்று கேட்டே விட்டது..

“வாட் சீனாகுனாவா..?”

‘அச்சச்சோ மைன்ட் வாய்ஸ்ன்னு நினைச்சு நிஜத்தில் உளறி கொட்டிட்டியே சக்தி.. எதையாவது சொல்லி சமாளி..’ என்று தனக்குத் தானே கூறி கொண்டவள் அவனைப் பார்த்து ஈயென்று இளித்து வைத்தாள்.. அதைக் கண்டவன் அருவருப்பாய் முகத்தைச் சுளித்தபடி,

“பார்க்க சகிக்கலை..” என்றான் எரிச்சல் மிகுந்த குரலில்..

“அங்கிள், நீங்க தான் சிவகுருவா..?” அவள் இங்கு வந்து தான் அக்காவின் வாயிலாகச் சிவகுருவின் பெயரை தெரிந்து கொண்டாள்..

“ஹேய் எவ்வளவு தைரியம் இருந்தால் என் பெயரை சொல்லுவ..?” அதற்கும் அவன் எகிற..

“பெயர் சொல்றதுக்கு எல்லாம் தைரியம் வேணுமா அங்கிள்..?” அவள் இமைச்சிமிட்டியபடி அறியாப்பிள்ளையாய் வெகுளியாய் கேட்க..

தான் இத்தனை கூறியும் அவள் அடங்காது தன்னை வம்பிழுப்பது கண்டு அவனது கோபம் எகிறியது.. ஆனால் அவளது குண இயல்பே அது தான் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.. அவன் அவளுக்குப் பதில் கூறாது அவளது முழங்கையைப் பற்றி வாசலை நோக்கி தரதரவென்று இழுத்து சென்றவன் வெளிவாயில் வந்ததும் சட்டென்று அவளை உதறித் தள்ளினான்.. அவனது செய்கையில் நிலைத்தடுமாறி கீழே விழுந்தவள் என்ன செய்வது என்று தெரியாது மூளை மரத்து போனவளாய் அவனைப் பார்த்தாள்.. இதுவரை அவளிடம் யாரும் இப்படி மோசமாய் நடந்து கொண்டது இல்லை.. முதன்முறையாக இப்படி நடந்து கொண்டவனை அவள் திகைப்புடன் பார்த்திருந்தாள்..

சிவகுரு அவள் முன் குனிந்து சொடக்கு போட்டவன், “இன்னொரு தடவை என்னை அங்கிள்ன்னு கூப்பிட்ட.. அடுத்த நொடி கூப்பிட உனக்கு வாய் இருக்காது..” என்று அவளது வாயை சுட்டிக்காட்டி கூற..

அவளோ பயத்துடன் தனது இருகைகளையும் தனது வாயின் மீது வைத்தபடி சரியென்று தலையாட்டினாள்.. அவளது செய்கையைக் கோபத்துடன் உறுத்து விழித்தவன் மறுநொடி விறுவிறுவென்று அங்கிருந்து சென்றுவிட்டான்.. மறக்காது வாயிற்கதவை வேறு சாற்றிவிட்டு சென்றுவிட்டான்..

சக்திப்ரியா எழுந்து நின்று மூடிய கதவுகளைச் சிறிது நேரம் பார்த்திருந்தவள் பின்பு என்ன நினைத்தாளோ அங்கிருந்த வராந்தாவின் மூளையில் சுருண்டு படுத்து கொண்டாள்..

அறைக்குள் நுழைந்த சிவகுருவுக்கு மனதின் கொதிப்பு அடங்கவில்லை.. நேரே குளியலறைக்குள் சென்று குளித்து விட்டு

வந்த பின்பும் அவனது மனதின் வெம்மை அகலவில்லை.. அறையில் இருந்த கண்ணாடி முன் வந்து நின்றவன் தனது தோற்றத்தினை நன்கு ஆராய்ந்து பார்த்தான்.. அவன் சற்றுக் கருமை நிறம் என்றாலும் நல்ல ஆரோக்கியமான, கட்டுக்கோப்பான உடலமைப்பு கொண்டவன்.. ஆனால் அவனது இந்த முகம், அவனின் வயதைவிட அதிக மூப்பு காட்டுகின்றதே.. அவனுக்கு வயது என்னவோ முப்பது தான்.. ஆனால் அவனது முகத்தில் இருந்த இறுக்கம், கடினம் அவனைச் சற்று வயதானவன் போன்று காட்டியது..

"நானா சிரிக்க மாட்டேன் என்கிறேன்.. என்னால் சிரிக்க முடியவில்லையே.." அவன் தனக்குத் தானே துயரத்துடன் கூறிக்கொண்டான்.. மற்றவர்களுக்காக அவன் சிரிக்கும் ஆயத்த புன்னகை என்றுமே அவனது மனதினை தொட்டதில்லை.. அதனால் தான் அவனது புன்னகை அவனது கண்களை எட்டியதும் இல்லை.. அப்படிப் புன்னகைக்கும் வண்ணம் அவன் உள்ளார்ந்த மகிழ்ச்சியை இதுவரை அடைந்தது இல்லை..

படுக்கையில் படுத்தவனுக்கு உறக்கம் வரவில்லை.. எரிச்சலுடன் எழுந்தவன் மடிகணினியை எடுத்து வைத்துக் கொண்டு வேலையில் ஆழ்ந்தான்.. வேலை தான் அவனது தியானம்.. அவனது மனதினை வழிக்குக் கொண்டு வரும் ஒரே ஆயுதம்.. அவன் நினைத்தது போல் அவனது மனதின் எரிச்சல் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து அவன் தனது வேலையில் மூழ்கி போனான்.. அதே போல் அவன் சக்திப்பிரியாவை பற்றி எண்ணவும் மறந்து போனான்.. அவள் இரவெல்லாம் குளிரில் நடுங்கியபடி வராந்தாவில் படுத்திருந்தாள்..

## 4

அதிகாலையில் எப்போதும் போல் எழுந்த சிவகுரு நடைப்பயிற்சிக்கு ஏற்றவாறு உடை அணிந்து கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்.. இன்னமும் வீட்டில் இருந்தவர்கள் யாரும் எழவில்லை.. வீட்டின் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்த போதுகூட அவனுக்கு சக்திப்ரியாவின் ஞாபகம் வரவே இல்லை.. அப்படி ஒருத்தியை பற்றி அவன் மறந்தே போனான்.. அப்போது ஒரு கார் வந்து வாயிலின் முன் நின்றது.. அதிலிருந்து நவநாகரீக

மங்கை ஒருத்தி இறங்கினாள்.. அவளைக் கண்டதும் சிவகுருவின் முகம் இறுகி, அவனது பார்வை கூர்மையானது.. அவளும் இவனைக் கண்டதும் திகைத்தவள் பின்பு முகத்தின் உணர்வுகளைக் கவனமாய் மறைத்தபடி பதிலுக்கு அவனைப் பார்த்து உறுத்து விழித்தாள்.. இருவரும் சண்டை கோழி போல் சீறி பாயத் தயாராக இருந்தனர்..

அப்போது, “மாமா..” என்கிற கீச் குரல் இடையிட்டது.. யாரென்று யோசித்தபடி திரும்பிய சிவகுரு அங்கே தூக்க கலக்கத்தில் விழிகளைக் கசக்கியபடி நின்றிருந்த சக்திப்ரியாவை கண்டு திடுக்கிட்டான்.. அவன் அவளைப் பற்றிய நினைவுகளே நேற்று இரவே மறந்து போயிருந்தான்..

“நான் உங்களை அங்கிள்ன்னு கூப்பிட்டிருக்கக் கூடாது தான்.. சாரி.. சரண் மாமாவுக்கு நீங்க அண்ணன் தானே.. அதனால் இனி நீங்களும் எனக்கு மாமா தான்.. ஓகே வா..? அதுக்காக நீங்க இப்படி எல்லாம் தண்டனை தர கூடாது மாமா.. நைட் எல்லாம் ஒரே குளிர்.. அது கூடப் பரவாயில்லை சமாளிச்சிட்டேன்.. ஆனா ஒரே கொசுக்கடி.. இங்கே பாருங்க..” என்று தன்னுடைய வலக்கையை அவன் முன் நீட்டியவள்,

“எப்படிக் கடிச்சு வச்சிருக்குன்னு.. அதே மாதிரி முகத்திலும்..” சிவப்பு புள்ளிகளாய் தெரிந்த கொசுக்கடியை அவனிடத்தில் காட்டி அனுதாபத்தைத் தேடி கொண்டிருந்தாள் அவள்..

சாருலதாவோ நக்கல் வழியும் விழிகளுடன், எள்ளல் புன்னகையோடு சிவகுருவை பார்த்திருந்தாள்.. அதைக் கண்டதும் சிவகுருவின் கோபம் அதிகரித்தது..

“சரண்..” அவன் வீடே அதிரும்படி கத்தினான்..

“சிவா எதுக்கு இந்தக் கோபம்..? கோபத்தைக் கொஞ்சம் குறைங்க..” என்ற சாருலதாவின் குரலில் அத்தனை கேலி இருந்தது.

“ஆமா மாமா, கொஞ்சம் கோபத்தைக் குறைத்தால் நல்லது.. நேத்து ராத்திரி நீங்க என் கையைப் பிடிச்சு..” மேலே அவள் கூறும் முன் சிவகுரு அவள் முன் ஆத்திரத்துடன் வந்து நின்றவன்,

“இப்போ நீ வாயை மூடலை.. என் வீட்டில் திருட வந்தவள்ன்னு போலீசில் பிடிச்சு கொடுத்திருவேன்.. நேத்தே

அதைச் செய்திருக்கணும்.. செய்யாமல் போனது என் தவறு.. ஏதோ டென்சனில் உன்னை இத்தோடு விட்டது நல்லதுன்னு நினைச்சுக்கோ.." என்று மிரட்டும் தொனியில் கூற..

அவனது வார்த்தைகளில் சக்திப்ரியா கப்பென்று வாயை மூடி கொண்டாள்.. அவள் குறும்பு பெண், கலகலப்பான பெண் தான்.. அதே சமயம் கொஞ்சம் அதட்டி பேசினாலும் பயந்து விடும் பிள்ளை மனம் படைத்த குழந்தை குமரி பெண்ணவள்.. அவளின் நல்ல நேரம் நேற்று சிவகுரு சாருலதா நினைவில் உழன்று கொண்டிருந்ததால் அவளை வீட்டை விட்டு வெளியேற்றியதோடு விட்டு விட்டான்.. இல்லையென்றால் நடந்திருப்பதே வேறு..

"என்ன அண்ணா.." தூக்கம் கலையாத குரலில் கேட்டபடி அங்கு ஓடி வந்தான் சரண்..

"யாரிது சரண்..? உன்னை மாமா என்கிறாள்..?" சிவகுரு எரிச்சலுடன் தம்பியை பார்த்து கேட்டான்..

"சங்கீதாவோட தங்கை சக்திப்ரியா.." தம்பி கூறியதை கேட்டு சிவகுரு மனதிற்குள் துணுக்குற்றான்..

அதற்குள் சங்கீதா மற்றும் ராணி இருவரும் அங்கு வந்துவிட்டனர்.. தனது தங்கையைக் குற்றவாளி கூண்டில் நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்கும் சிவகுருவை கண்டு சங்கீதாவுக்குக் கோபம் வந்தது..

"சக்தி, என்னடி நடந்தது..?" சங்கீதா தங்கையை அதட்டினாள்

"அது வந்து.." சிவகுருவின் செயலை எப்படிச் சொல்வது..? என்று தெரியாது விழித்தாள் சக்திப்ரியா.. சொன்னால், நிச்சயம் ஒரு பிரளயம் இங்கு வெடிக்கும்.. அவள் ஒரு இடத்தில் இருந்தால் அங்குச் சந்தோசம் மட்டுமே நிறைந்து இருக்க வேண்டும்.. அவளால் யாரும் கஷ்டப்படக் கூடாது என்று நினைப்பவள் அவள்.. அதனால் அவள் அமைதி காத்தாள்..

"அப்பா மேல் ப்ராமிசா என்ன நடந்ததுன்னு சொல்..?" சங்கீதா தங்கையின் பலவீனத்தில் கை வைத்தாள்.. தந்தை என்றால் தங்கைக்கு மிகவும் உயிர்.. அவரது வார்த்தையை அவள் என்றுமே தட்டியது இல்லை.. அதனால் தான் சங்கீதா இப்படிக் கேட்டது..

“சங்கி, நீ சொல்லுன்னு சொன்னால் சொல்லிட்டு போறேன்.. அதுக்கு எதுக்கு அப்பா மேல் சத்தியம் பண்ணி கேட்கிற..?” என்ற சக்திப்ரியா அடுத்த நொடி மடை திறந்த வெள்ளம் போல் நடந்ததைக் கொட்டி முடித்தாள்.. புயல் அடித்து ஓய்ந்தார் போன்று அங்குக் கனத்த அமைதி நிலவியது..

“என்னைப் பார்க்க இங்கு வந்த என் தங்கையை நீங்க எப்படி அவமதிக்கலாம்..?” சங்கீதா கிடைத்தது வாய்ப்பு என்று சிவகுருவிடம் எகிறினாள்..

“சங்கி, அமைதியா இரும்மா.. சக்தி ஏதாவது சேட்டை பண்ணி இருப்பாள்.. அதான் தம்பி தண்டனை கொடுத்திருப்பார்..” ராணி பெரிய மகளைச் சமாதானப்படுத்தினார்..

“ம்மா, நான் டிவியில் படம் தான் பார்த்துட்டு இருந்தேன்.. சேட்டை எதுவும் பண்ணலை..” அந்த ரணகளத்திலும் அன்னையோடு மல்லுகட்ட தவறவில்லை சக்திப்ரியா..

“ம்மா, சக்தி சேட்டை பண்ணியிருந்தால் ஒண்ணு சரணை கூப்பிட்டு சொல்லியிருக்கணும்.. இல்லை, என்னைக் கூப்பிட்டு கண்டிச்சிருக்கணும்.. இரண்டுமே செய்யாம வயசு பொண்ணு கையைப் பிடிச்சு இழுத்துட்டு போய் வெளியில் தள்ளி கதவை சாத்துறது நல்ல ஆண்மகனுக்கு அழகா..?” என்று எகிறிய சங்கீதாவின் பார்வை ‘நீயெல்லாம் ஆண்மகனா..?’ என்பது போல் சிவகுருவை ஏளனமாய்ப் பார்த்து வைத்தது..

இந்த லட்சணத்தில் சாருலதா வேறு கிண்டலாய் நடப்பதை பார்த்தபடி நமட்டு சிரிப்புடன் நின்றிருந்தாள்.. எல்லாவற்றையும் கண்ட சிவகுருவின் ஆத்திரம் எல்லையைக் கடந்தது..

“ஆமாம், நான் தான் அப்படிச் செய்தது..? இப்போ அதுக்கு என்ன பண்ணணும்னு நினைக்கிற..?” அவன் தனது இரு கைகளையும் கட்டி கொண்டு தனது முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றான்..

“நீங்க என் தங்கை கிட்ட மன்னிப்பு கேட்கணும்..” சங்கீதா தனது வாதத்தைச் சிறிதும் விட்டு கொடுக்க விரும்பவில்லை..

“சங்கி..” ராணி மகளைச் சமாதானம் செய்ய முயன்றார்.. சரண் எதுவும் பேசவில்லை.. அண்ணன் செய்தது சற்று அதிகப்படி என்றே அவனுக்கும் தோன்றியது..

“மன்னிப்பா..? நானா..? தொழில் வட்டாரத்தில் என்னைப் பற்றிக் கேட்டுப் பார்.. தப்பே செய்தாலும், அதைத் தெரிந்தே செய்தாலும் நான் மன்னிப்பு கேட்டது கிடையாது.. அப்படிப்பட்ட நான் போயும் போயும் உன் அரைவேக்காடு தங்கையிடம் மன்னிப்பு கேட்பேன் என்று நினைத்தாயா..? நெவர்..” என்றவன் காற்றைப் போல் வேகமாய் அவர்கள் எல்லோரையும் கடந்து சென்றான்... நடைப்பயிற்சி செல்லும் எண்ணமே அவனுக்கு இல்லாது போயிற்று.. அவ்வளவு கோபம் அவனுக்கு..

சங்கீதா தனது அன்னை, தங்கையுடன் உள்ளே சென்றுவிட.. சரண் மட்டுமே எஞ்சியிருந்தான்.. அப்போது தான் அவன் சாருலதாவை கவனித்தான்.. நடந்த கலவரத்தில் ஓரமாய் நின்றிருந்த அவளை அவன் கவனிக்கவே இல்லை..

“வா சாரு.. எப்போ வந்த..?” அவன் சங்கடமான புன்னகையுடன் அவளை வரவேற்றான்..

“இப்போது தான்.. கொஞ்ச நேரத்திற்கு முன்பு அத்தான்..” என்றவள் தனது பையை எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்..

“என் கல்யாணத்துக்கு ஏன் வரலை சாரு..? நான் உன்னை ரொம்ப எதிர்பார்த்தேன்..”

“நானுமே ரொம்பவே எதிர்பார்த்திருந்தேன்..” என்று பூடகமாகக் கூறியவளின் பேச்சு அவனுக்குப் புரியவில்லை போலும்..

“பரவாயில்லை விடு.. இப்போதாவது வந்தாயே..”

குணசேகரன், சுந்தரி இருவரும் அங்கே வந்தனர்.. திடுமென மகள் அங்கு நிற்பதை கண்டு அவர்கள் நம்ப முடியாது விழிகளைக் கசக்கி கொண்டனர்..

“நானே தான் மாம்..” என்ற சாருலதா புன்னகையுடன் வந்து அன்னையை அணைத்து கொண்டாள்.. அவர்கள் பேசுவதற்குத் தனிமையைக் கொடுத்து விட்டுச் சரண் அங்கிருந்து அகன்றான்..

ராணி அறைக்கு வந்ததும் சக்திப்ரியாவை வறுத்தெடுத்து விட்டார்.. அதே போல் சங்கீதாவும்,

"இப்போ கூட உங்களுக்கு உங்கண்ணாவை தட்டி கேட்க தோணலை இல்லையா..?" என்று சரண் அறைக்குள் நுழைந்ததும் அவனைப் பிடித்துக் கொண்டாள்..

"நிச்சயம் கேட்கிறேன் சங்கி.. சக்தி விசயத்தில் அவர் செஞ்சது ரொம்பத் தவறு.." என்ற கணவனை அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள்..

"அதிசயமா இருக்கு.."

"நாம இந்த வீட்டாளுங்க.. அண்ணா காட்டும் அதிகாரத்துக்குக் கட்டுப்படலாம்.. ஆனால் சக்தி..? அவள் பாவம் சங்கி.. அவள் சின்னக் குழந்தை மாதிரி.. அப்படியே அவள் தவறே செய்திருந்தாலும் சொல்லி திருத்தி இருக்கலாம்.. ஆனால் அவள் தவறே செய்யாத பட்சத்தில் அண்ணா அவளிடம் இப்படி நடந்து கொண்டது எனக்குமே பிடிக்கவில்லை.." கணவனது பேச்சு அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது.. திருமணமான பின்பு இன்று தான் அவள் அதீத சந்தோசப்பட்டாள்..

காலை உணவு நேரத்தில் சரண் தாத்தாவிடம் தனது அண்ணனை பற்றிப் புகார் வாசித்தான்.. அவரும் அமைதியாகக் கேட்டு கொண்டவர்,

"நான் சிவாவிடம் பேசுகிறேன்.." என்று கூறியதோடு முடித்துக் கொண்டார்.. அவர் சொன்னால் செய்வார் என்கிற நம்பிக்கை சங்கீதாவிற்கு இருந்தது.. அதனால் அவள் மிகவும் சந்தோசமாக இருந்தாள்.. எதிரியாகக் கருதும் சிவகுருவை வீழ்த்த ஒரு சின்ன வாய்ப்புக் கிடைத்தாலும் அதைப் பலமாக பற்றிக் கொள்ளும் மனநிலையில் அவள் இருந்தாள்..

சொன்னது போல் தாத்தா சிவகுருவிடம் இது பற்றிக் கேட்டார்.. அவனோ கடுப்புடன் அவரிடம் கத்தினான்..

"நான் அவளை முன்னே பின்னே பார்த்தது இல்லை.. நேத்து நம்ம வீட்டில் அவளைத் திடுமெனப் பார்த்தால் நான் என்ன நினைப்பேன்..? அதான் 'யார் நீ..?'ன்னு அவளிடம் கேட்டேன்.. அதுக்கு அவள் பதில் சொல்லாம அங்கிள், அது இதுன்னு பேசினால் கோபம் வருமா..? வராதா..? அதான் அவளை வெளியில் தள்ளி கதவை சாத்திவிட்டேன்.." அவனது கொதிப்பு இன்னமும் அடங்கவில்லை.. அக்கா, தங்கை இருவரின் பேச்சு

அவனது ஆத்திரத்தை கிளப்பி இருந்தது.. அதைவிடச் சாருலதாவின் கேலி பார்வை வேறு அவனைக் கொதிகலனாக உருமாற்றி இருந்தது.

"என்னது..? உன்னைப் பார்த்து அங்கிள் என்றாளா..?" திகைப்புடன் கேட்பது போல் கேட்ட தாத்தாவின் உதட்டோரம் கேலி சிரிப்பில் துடித்தது..

"தாத்தா.. அந்த லூசு தான் அப்படிச் சொல்லியது என்றால்.. நீங்களுமா..?" அவனுக்கு அத்தனை தலையிறக்கமாகப் போய்விட்டது..

"சரி விடு சிவா.. நான் பார்த்தவரை சக்தி நல்ல பெண், குறும்பு பெண்.. அவ்வளவே.. அவளுக்கு மற்ற பெண்களைப் போன்று சூதுவாது தெரியாது.."

"அவள் எப்படிப்பட்டவளாக வேண்டுமானாலும் இருந்துட்டு போகட்டும்.. எனக்கென்ன..?"

"இனியொரு முறை நீ அவளிடம் இப்படி நடந்து கொள்ளக் கூடாது.." சற்று எச்சரிக்கும் குரலில் அவர் கூற..

"நான் பெண்களை வெறுப்பவன்.. அவள் என்றில்லை, எந்தப் பெண்ணிடமும் எந்த மாதிரியும் நடந்து கொள்ள மாட்டேன்.." என்றவன் அவரது அறையை விட்டு வெளியேறி விட்டான்..

வாயிலை நோக்கி வேகமாய் நடந்து கொண்டிருந்த சிவகுருவின் முன் சொல்லாமல் கொள்ளாமல் வந்து நின்றாள் சக்திப்ரியா.. அவன் மட்டும் தனது நடையை நிறுத்தவில்லை என்றால் இருவரும் சேர்ந்து படியில் உருண்டு இருந்திருப்பார்கள்..

"ஏய், அறிவுகெட்ட.." அடுத்து என்ன சொல்லியிருப்பானோ.. தாத்தா கூறியது நினைவில் எழுந்து அவனைச் சிறிது கட்டுப்படுத்தியது..

"உனக்குக் கண் இல்லையா..? இப்படித் தான் எருமை மாடு மாதிரி இடையில் வந்து நிற்பியா..?" அவன் காச்மூச்சென்று கத்தி கொண்டிருக்க.. சக்திப்ரியா தான் பேச வந்ததை மறந்து விழிகள் அகல அவனை ஆவென்று பார்த்திருந்தாள்..

"ச்சே.." என்றவன் அவளைச் சுற்றிக் கொண்டு போக முயல.. அதில் சுதாரித்தவள் மீண்டும் அவன் முன் வந்து நின்றாள்..

“ப்ச், என்ன..?” அவன் அதட்டலாய் அவளிடம் கேட்க..

“உங்க கிட்ட ஒண்ணு சொல்லலாமா மாமா..?”

“முதலில் இந்த மாமாவை கட் பண்ணு..” ஏனோ அந்தச் சொல் அவனுக்கு எரிச்சலை அளித்தது..

“மாமாவை மாமான்னு தான் கூப்பிட முடியும்.. சித்தப்பான்னா கூப்பிட முடியும்..” அவள் வாயை மூடி கொண்டு களுக்கென்று சிரிக்க.. பதிலுக்கு அவன் முறைத்த முறைப்பில் அவள் சட்டென்ற வாயை மூடி கொண்டாள்..

“என்ன சொல்லணுமோ அதைச் சொல்லிட்டு இடத்தைக் காலி பண்ணு..” அவன் கறார் குரலில் கூற..

சக்திப்ரியா சுற்றும் முற்றும் பார்த்தபடி அவன் அருகில் வந்தவள் அவனது கைகளைப் பற்றியபடி, “நான் உங்ககிட்ட சாரி கேட்டுக்கிறேன்.. எல்லாம் என்னால் தான்.. மன்னிச்சிருங்க..” என்றவள் அங்கிருந்து ஓடி சென்று தள்ளி நின்று கொண்டாள்.. அவன் புரியாமல் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்...

“மாமான்னு கூப்பிடாம அங்கிள்ன்னு கூப்பிட்டது என் தப்பு தானே மாமா.. அதுக்குத்தான் மன்னிப்பு கேட்டேன்..” அவள் அவனைப் பார்த்துகூற..

“இவளை..” அவன் பல்லை கடித்தபடி கையை இறுக மூடி கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்ற போது தான் தன் கையில் எதையோ உணர்ந்தான்.. அவன் அவசரமாய்த் தனது வலக்கை உள்ளங்கையை விரித்துப் பார்த்தான்.. அதில் அழகாய் சாக்லேட் ஒன்று வீற்றிருந்தது.. அவன் சாக்லேட்டை பார்ப்பதை உணர்ந்து அவள்,

“மாமா, உங்களுக்குச் சுகர் இல்லைல்ல..” என்று பொங்கி வந்த சிரிப்பை கட்டுப்படுத்திக் கொண்டு கேட்க..

“நீ மட்டும் பக்கத்தில் இருந்திருந்த கொன்னு இருப்பேன்..”

“அதான் பத்தடி இல்லையில்லை.. நூறடி துரத்தில் தள்ளி நிற்கிறேன்..” என்றவள் கலகலத்து சிரித்தாள்..

அவளது சிரிப்பை எரிச்சலுடன் பார்த்தவன் தனது காரை நோக்கி நடந்தான்.. காருக்குள் ஏறி காரை கிளப்பும் போது தான்

இன்னமும் தான் அந்தச் சாக்லேட்டை தூர வீசாது கையில் வைத்திருப்பதைக் கண்டான்..

“இது வேறு..” என்று எரிச்சலுடன் அதை வெளியில் தூக்கி எறிந்தவன் காரை கிளப்பிக் கொண்டு சென்றான்..

அவனது செய்கையைக் கண்டு முகம் வாடியவள் அங்கே ஓடி வந்து கீழே கிடந்த சாக்லேட்டை கையில் எடுத்தாள்.. பின்பு முகம் மலர,

“நல்லவேளை சாக்லேட் நமக்கே திரும்பக் கிடைச்சிருச்சு..” என்றவள் அதைப் பிரித்து உண்ண ஆரம்பித்தாள்..

“**சா**ரு, உனக்கு ஒரு வரன் வந்திருக்கு.. நீ ஃபோட்டோ பார்த்துட்டு ஓகே சொன்னால் நல்லா இருக்கும்..” சுந்தரி மகளின் முன் புகைப்படம் ஒன்றை நீட்டினார்..

“மாம், இப்போ கல்யாணத்துக்கு என்ன அவசரம்..?” அவள் சலிப்பான குரலில் கூற..

“ஆனா இந்த மாப்பிள்ளையை விட எனக்கு மனசு இல்லை.. மாப்பிள்ளை பெரிய இடம்.. ஒரே பையனாம்.. எக்கச்சக்க சொத்துக்கள், தொழில்கள் இருக்கு.. இதைவிட வேறு என்ன வேண்டும்..?” குணசேகரன் மகளிடம் மணமகனின் பெருமையை அடுக்கி கொண்டே போனார்..

“எனக்குப் பிடிக்க வேண்டாமா டாட்..?”

“ஃபோட்டோவை பார்த்துவிட்டு சொல்லு..” குணசேகரனின் கறார் குரலில் மனமே இல்லாது புகைப்படத்தை வாங்கிப் பார்த்தவள் மறுகணம் இமைக்க மறந்து அதையே பார்த்திருந்தாள்..

“வாவ், வாட் அ ஹேண்ட்சம் மேன்.. எனக்கு ரொம்ப பிடிச்சியிருக்கு டாட்.. நான் எதிர்பார்த்தது இந்த மாதிரியான ஒருவனைத் தான்..” என்றவளது முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது.

“அப்போ பேசி முடித்து விடவா..?” குணசேகரன் கேட்ட கேள்விக்கு,

“ம்..” என்று அவள் வெட்கத்துடன் தலையசைத்தாள்.. மகளின் வெட்கம் கண்டு பெற்றோரின் மனம் நிறைந்தது..

பெற்றோரிடம் பேசிவிட்டு வெளியில் வந்த சாருலதாவின் விழிகளில் கணவனை வழியனுப்பி வைத்துக் கொண்டிருந்த சங்கீதா தென்பட்டாள்.. சங்கீதாவை கண்டதும் அவளது விழிகளில் குரோதம் கொப்பளித்தது.. அவள் நேரே சங்கீதாவை நோக்கி சென்றாள்..

"ஹாய் சங்கீதா.. ஐயம் சாருலதா.. சரணோட அத்தை மகள்."

"ஹாய்.. சரண் சொல்லியிருக்கிறார்.."

சிறிது நேரம் இருவரும் பொதுவாகப் பேசி கொண்டிருந்தனர்.. பின்பு மெல்ல சாருலதா ஆரம்பித்தாள்..

"நம்ம வீட்டு ஹிட்லர் என்ன சொல்றாரு..?"

"ஹிட்லரா..? யாரது..?" புரியாமல் பார்த்த சங்கீதாவை கண்டு புரிதலுடன் புன்னகைத்த சாருலதா,

"என்ன சங்கீதா புரியாத மாதிரி கேட்கிறீங்க..? நான் வேறு யாரை சொல்வேன்.. எல்லாம் அந்தச் சிவகுருவை தான்.."

சிவகுரு பெயரை கேட்டதும் சங்கீதாவின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.. இது தான் சமயம் என்று சாருலதா அவளிடம் சிவகுருவை பற்றிச் சொல்லி அவளை ஏற்றிவிட்டாள்..

"சிவாவுக்குச் சின்ன வயசில் இருந்தே தான் என்கிற அகம்பாவம் அதிகம்.. விட்டால் இந்த உலகமே அவனை நம்பித்தான் சுத்துதுன்னு சொல்வான்.. எல்லோரையும் தனக்குக் கீழே அடக்கி வைக்கணும்ன்னு நினைப்பான்.. ஒரு சர்வாதிகாரி மாதிரி நடந்துப்பான்.. அதான் அவனை ஹிட்லர்ன்னு சொன்னேன்..."

"ஆமா, நீங்க சொல்றது உண்மை தான்.. அவர் சரணை ஒரு அடிமை மாதிரி தான் நடத்துறாரு.. எனக்குச் செலவுக்குப் பணம் வேணும்ன்னா கூடச் சிவகுரு கிட்ட பெர்மிசன் கேட்டு தான் எடுக்கணும்.. சிலசமயம் இந்த அடிமை வாழ்க்கை எனக்குப் பிடிக்கலை.. எங்கேயாவது ஓடி போயிரலாமான்னு இருக்கு.." என்ற சங்கீதா தலையைப் பிடித்துக் கொண்டாள்..

"தனியா எதுக்கு ஓடுறீங்க சங்கீதா.. கூடச் சரணையும் கூட்டிட்டு போங்க.."

"எப்படி..?"

"சொத்துக்களைப் பிரிச்சுக் கொடுக்கச் சொல்லுங்க.. பிரிச்சுக் கொடுத்ததும், சரணை கூட்டிட்டுத் தனியா போயிருங்க.."

"ம்ஹூம், இதுக்குச் சரண் ஒத்துக்க மாட்டார்.." சங்கீதாவின் முகம் வாடியது..

"அப்போ ஒண்ணு செய்ங்க.. நான் சொன்ன மாதிரி சரணிடம் பேசி பாருங்க.. வெற்றி உங்களுக்கே.."

"நான் என்ன செய்யணும்..?" சங்கீதாவின் குரலில் ஆர்வம் வழிந்தோடியது..

சாருலதா தனது மன அழுக்குகளைச் சங்கீதாவின் மனதில் இறக்கி வைக்கலானாள்.. ஒரு துளி போதும் பாலின் தூய்மையைக் கெடுப்பதற்கு.. அதே போல் சாருலதாவின் விச வார்த்தைகள் சங்கீதாவின் மனதில் நஞ்சை விதைத்தது..

## 5

அலுவலகத்தில் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்த சிவகுருவின் அறை கதவு தட்டப்பட்டது, கோப்பில் இருந்து பார்வையை எடுக்காது அவன்,

"எஸ் கம்மின்.." என்று குரல் கொடுக்க.. கதவை திறந்து கொண்டு சரண் உள்ளே நுழைந்தான்..

"டேய் சரண், என்னடா இது புதுசா பெர்மிசன் எல்லாம் கேட்டுக்கிட்டு.." தம்பியை கண்டதும் சிவகுரு அவனைப் புன்னகையுடன் வரவேற்றான்..

சிவகுருவிற்குத் தம்பியிடம் எந்தக் கோபமும் கிடையாது.. அவனது கோபம் எல்லாம தம்பி மனைவி சங்கீதா மீது தான்.. அவர்களது அந்தஸ்திற்கு ஏற்ற பெண்ணாக அவள் இல்லை என்றாலும் கூடப் பரவாயில்லை.. சரண் காதலித்து விட்டான் என்பதற்காக அதைக் கூட விட்டு விடலாம்.. ஆனால் அவள் பணப் பேயாக இருந்தது கண்டு தான் அவனுக்கு எரிச்சலாக இருந்தது.. அவள் பணத்திற்காகத்தான் சரணை காதலித்துத் திருமணம் செய்து கொண்டாளோ என்று இப்போதும் அவனுக்குச் சந்தேகமாக இருக்கிறது.. ஆனால் அதை அவன் வாய்விட்டுத் தம்பியிடம் கேட்கவில்லை, அவ்வளவே..

தன்னிடம் எதுவும் பேசாது மௌனமாக இருக்கும் சரணை கண்டு சிவகுருவின் புருவங்கள் கேள்வியாய் உயர்ந்தது..

"என்ன விசயம் சரண்..?" சிவகுருவின் குரல் சற்றுக் கடுமையாக ஒலித்தது.. சரணின் அமைதிக்குப் பின்னால் அவனது மனைவி இருக்கக் கூடுமோ என்கிற எண்ணத்தில் வந்த கடுமை இது..

"அண்ணா, நான் உங்க கிட்ட ஒரு விசயம் பேசணும்.."

"சொல்லு.."

"நீங்க சக்தி கிட்ட நடந்துக்கிட்ட முறை ரொம்ப ரொம்பத் தப்புண்ணா.." என்றவனைக் கண்டு அவனது மனம் துணுக்குற்றாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது,

"அதுக்கு நான் என்ன செய்யணும்ன்னு நினைக்கிற..?" என்று புயலை அடக்கிய குரலில் அமைதியாய் கேட்க.. சரண் என்ன பதில் அளிப்பது..? என்று தெரியாது விழித்தான்..

"நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம்.. இனி இப்படி நடக்காம பார்த்துக்கோங்க.." என்று மட்டும் கூறிவிட்டு அவன் அமைதியாகி விட்டான்..

"அவ்வளவு தானே.." என்ற சிவகுரு தனது வேலைகளில் ஆழ்ந்தான்..

"அண்ணா, இன்னொரு விசயம்.." என்றவனைக் கண்டு என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தான் சிவகுரு..

"நான்.. நாங்க ஹனிமூன் போகலாம்ன்னு இருக்கோம்.." என்று தயங்கியபடி கூற..

"அதுக்கு இப்போ என்ன அவசரம் சரண்..? இப்போ முக்கியமான ப்ராஜெக்ட் போய்க்கிட்டு இருக்கு.. அதை முடிச்சிட்டு போ.."

"அது முடிய ஆறு மாசமாகும்.."

"அதற்குள் உலகம் ஒண்ணும் அழிந்து விடாது.. சொன்னதைச் செய்.." என்று கடுமையுடன் கூறியவன் தனது வேலைகளைப் பார்க்கலானான்..

சரண் பதில் பேச தெரியாது எழுந்து சென்றுவிட்டான்.. ஆனால் அவன் உள்ளுக்குள் கோபத்தில் கனன்று கொண்டிருந்தான்..

அன்றிரவே ராணி, சக்திப்ரியா இருவரும் மதுரைக்குக் கிளம்பி சென்றுவிட்டனர்.. பேருந்தில் வைத்து ராணி மகளை வறுத்து எடுத்து விட்டார்..

"எல்லாம் உன்னால் தான்டி.. நீ ஆரம்பிச்சு வச்சது இன்னும் முடிய மாட்டேங்குது.. பாரு, எல்லாரும் தனித்தீவு மாதிரி ஒருத்தருக்கு ஒருத்தர் பேசாம இருக்கிறதை.." அவர் மகளைக் கடிந்து கொண்டார்..

"ம்மா, அவங்க எல்லாரும் எப்போதுமே அப்படித்தான்ம்மா.. என்னால் இல்லை.." என்று அவள் அன்னையிடம் கோபித்துக் கொண்டாள்..

"என்னமோ போ.. போன இடத்தில் கையைக் காலை வச்சிட்டு இருக்காம ஏழரையைக் கூட்டிட்டு.." என்று அவர் மீண்டும் திட்ட ஆரம்பித்தார்.. சக்திப்ரியாவோ அதைக் காதில் வாங்காதவளாய் எதையோ நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டாள்..

சிவகுரு இரவு வீட்டிற்கு வந்தவன் தனது அறைக்குள் நுழைந்த போது ஏதோ வித்தியாசமாக உணர்ந்தான்.. நன்றாக மூச்சை இழுத்து மோப்பம் பிடித்த போது தான் அவனது நாசி அந்தச் சுகந்தமான வாசனையை நுகர்ந்தது.. அந்த நறுமணம் அவனது நுரையீரல் எங்கு நிரம்பி அவனுக்குச் சற்று இதத்தை அளித்தது.. 'என்னவாக இருக்கும்..?' என்று அவன் யோசித்தபடி அறையை நோட்டமிட்ட போது அங்கிருந்த ஒப்பனை கண்ணாடி மேசை மீதிருந்த பூங்கொத்தை கண்டான்.. அதன் அருகே சென்றவன் அதைக் கையில் எடுத்தபடி நிமிர்ந்து பார்த்தான்.. அவன் முன்னிருந்த கண்ணாடியில் 'சாரி' என்று எழுதபட்டு இருந்தது..

"லூசு.." என்றபடி கையிலிருந்த பூங்கொத்தை குப்பைத் தொட்டியில் போட போனவன் பிறகு என்ன நினைத்தானோ அதை அப்படியே வைத்துவிட்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டான்..

இரவு உணவின் போது குணசேகரன் மகளின் திருமணப் பேச்சை ஆரம்பித்தார்..

"அப்பா, நம்ம சாருவுக்கு நல்ல வரன் வந்திருக்கு.." என்று மணமகனின் விபரத்தை கூறியவர்,

“உங்க சம்மதத்துக்காகத் தான் காத்திருந்தேன்ப்பா.. நாளைக்கே மாப்பிள்ளை வீட்டில் பேசுகிறேன்..”

இது எதையும் காதில் வாங்காது உண்டு முடித்த சிவகுரு கை கழுவ எழுந்து சென்றுவிட்டான்.. அவனின் பின்னேயே சாருலதாவும் எழுந்து சென்றாள்..

“பார்த்தியா சிவா.. நான் நினைச்ச மாதிரி மாப்பிள்ளை அமைந்து விட்டது.. ஆனால் நீ தான் பாவம்.. ச்சுச்சுச்சு..” என்று போலியாக உச் கொட்டி பரிதாபப்பட்டவளை கண்டு கொள்ளாது தனது கையை நிதானமாகக் கழுவி விட்டு திரும்பிய சிவகுரு,

“இவன் உனக்கு எத்தனையாவது ஆள்..? எண்ணிக்கை இவனோடு நின்று விடுமா..? இல்லை தொடருமா..?” என்று நக்கல் குரலில் கேட்க.. அதைக் கேட்டு அவளது முகம் கருத்துப் போனது.. அதைக் கண்டு அவனது முகம் திருப்தியை பிரதிபலித்தது.

“உன் லட்சணத்தை மாப்பிள்ளை வீட்டினரிடம் சொன்னேன்னு வையி.. அவன் துண்டை காணோம், துணியைக் காணோம்ன்னு ஓடிருவான்..”

“ஏய் சிவா..” அவள் அடக்கப்பட்ட குரலில் சீற..

“என் பெயரை சொல்ல கூட உனக்கு அருகதை இல்லை..” பதிலுக்குச் சீறியவன் அங்கிருந்து அகன்று விட்டான்..

அவன் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்த சாருலதாவின் மனம் கொதித்துக் கொண்டிருந்தது.. என்றாவது ஒருநாள் அவளுக்குச் சந்தர்ப்பம் வராமலா போய்விடும்.. அப்போது அவள் சிவகுருவை நன்றாக வைத்து செய்வாள்..

இரவு உணவு முடிந்து அறைக்கு வந்ததும் சங்கீதா கணவனிடம், “சரண், ஒரு முக்கியமான விசயம் பேச வேண்டும்..” என்க..

“என்ன சொல்லு சங்கி..?” என்றவன் பால்கனியில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.. அவள் அவன் அருகில் அமர்ந்து அவனது தோளில் தலைசாய்ந்து கொண்டு,

“நான் சொல்றதை கேட்டு நீங்க என்னைத் தப்பா நினைக்கக் கூடாது..” பெரும் பீடிகை போட..

“அதெல்லாம் நினைக்க மாட்டேன்..” என்றவன் அவளை அணைத்துக் கொண்டு அவளது தலையை வருடி கொடுக்க ஆரம்பித்தான்..

“நாம சொந்தமா பிசினஸ் ஆரம்பித்தால் என்ன..?” அவன் வருடலை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்..

“திடீர்ன்னு என்ன..?”

“இல்ல.. நம்ம செலவுக்கு எப்பவும் உங்கண்ணா கையை எதிர்பார்த்து இருக்க வேண்டியிருக்கு.. நாளைக்கு நமக்குக் குழந்தை பிறந்தால் அதுக்குத் தேவையானது வாங்கித் தருவதற்கும் உங்கண்ணா கையை எதிர்பார்த்து இருக்க முடியுமா..? இப்போ ஓகே.. உங்கண்ணாவுக்குக் கல்யாணம் ஆகலை.. நாளைக்கு அவருக்குக் கல்யாணமாகி அவருக்கு வரும் மனைவி நம்மைக் கேவலமா பார்க்க மாட்டாளா..? அப்படி ஒரு அவமானம் நேர்ந்தால் நான் தற்கொலை பண்ணி செத்து போயிருவேன் சரண்..” அவள் வராத கண்ணீரை வரவழைத்துக் கொண்டு அழுதாள்..

காலையில் நடந்த நிகழ்வுகளை அசை போட்ட சரண் சிறிது நேரம் யோசித்திருந்து விட்டு, “சரி சங்கி.. நீ சொல்வது போல் நாம் செய்யலாம்..” என்று கூற..

“தேங்க்யூ சரண்..” என்றவள் சந்தோச மிகுதியில் கணவனது கன்னத்தில் முத்தமிட்டாள்..

“தேங்க்ஸ் முத்தம் இங்கே கொடுக்கக் கூடாது சங்கி..” என்றவன் அவளது இதழ்கள் நோக்கி குனிய..

“இப்போ இது வேண்டாமே..” என்று அவனைத் தடுத்தவள்,

“நாம என்ன பிசினஸ் பண்ணலாம் சரண்..?” என்று ஆர்வத்துடன் கேட்டாள்..

“எனக்குத் தெரிஞ்ச ஒரே ஃபீல்ட் ஐடி தான்..”

“அப்போ நாம பேசாம ஐடி கம்பெனி ஆரம்பிக்கலாமா..?” அவள் அவனுக்கு யோசனை வழங்கினாள்..

“நல்ல யோசனை தான்.. ஆனால்..??”

“முதலீடே இல்லாது நான் யோசனை சொல்லவா..?”

“சொல்லு..”

“இப்போ ஐடி கம்பெனி நீங்க தானே நடத்திட்டு இருக்கீங்க.. இதில் உங்கண்ணா தலையிட மாட்டார் இல்லையா..?”

“இல்லை..”

“அப்போ ரொம்ப சரி.. அந்தக் கம்பெனிக்கு வரும் ப்ராஜெக்ட்டை நம்ம கம்பெனிக்கு மாற்றி நாம் செய்து தருவோம்.. உங்களுக்கு நான் உதவி பண்றேன்..”

“இது ரிஸ்க் சங்கி.. அண்ணாவுக்குத் தெரிஞ்சா அவர் ரொம்ப வருத்தப்படுவார்..”

“ம்ஹூம், இங்கே தான் நீங்க தப்பு பண்றீங்க சரண்.. நீங்க தனியே பிசினஸ் பண்ணி பணம் சம்பாதிப்பது தெரிந்தால் அவர் சந்தோசம் தான் படுவார்..” என்று அவள் பேசி பேசியே கணவனைக் கரைத்தாள்..

“சரண், நான் உன்கிட்ட பேசணும்..” இறுக்கமான முகத்துடன் சிவகுரு தம்பியை அழைத்தான்.. சரண் பயந்து கொண்டே அண்ணனின் பின்னேயே சென்றான்..

அலுவலக அறைக்குள் நுழைந்ததும் சிவகுரு கற்றைக் காகிதங்களை எடுத்து தம்பியின் முகத்தில் விசிறியடித்தான்..

“ஊரெல்லாம் கடன் வாங்கி வச்சியிருக்க.. எல்லாவனும் கம்பெனிக்கு நோட்டீஸ் விட்டு இருக்கான்.. என்னடா பண்ணி வச்சியிருக்க..?”

“அது வந்துண்ணா..” சரண் விட்டால் அழுதுவிடுவான் போலும்..

“எதுவாக இருந்தாலும் சொல்லி தொலைடா..”

“உங்களுக்குத் தெரியாமல் நான் பிசினஸ் ஆரம்பித்தேன்..”

“என்னது..?” சிவகுரு அதிர்ச்சியுடன் தம்பியை பார்த்தான்..

“இப்போ எதுக்குடா தனிப் பிசினஸ்..?”

“எனக்குன்னு தனி வருமானம் இல்லை.. அதான் சங்கி தனியே பிசினஸ் ஆரம்பிக்கச் சொன்னாள்.. அவளை நம்பி, அவள் உதவுவாள்ன்னு பிசினஸ் ஆரம்பித்தேன்.. ஆனா அவள் உதவலை..

அதனால் பத்து பேரை தனியே வேலைக்கு அமர்த்தினேன்.. நம்ம ஐடி கம்பெனிக்கு வரும் ப்ராஜெக்ட்டை நான் எடுத்து பண்ண ஆரம்பித்தேன்.. ஆரம்பித்ததில் சின்னச் சின்ன ப்ராஜெக்ட் பண்ணினேன்.. நல்ல லாபம் வந்தது.. பிறகு பெரிய பெரிய ப்ராஜெக்ட் எடுத்து பண்ணும் போது முடிக்க வேண்டிய நேரத்தில் முடிக்காது நிறைய டீலிங் முறிஞ்சு போனது.. அதுவும் லாஸ் ஆஃப் பேமெண்ட்டோடு.. சில கம்பெனி வேலையை வாங்கிட்டுப் பணம் கொடுக்காம ஏமாத்திட்டாங்க.. இப்படி நிறையக் குளறுபடி.. இதை எல்லாம் சரி செய்யக் கடன் வாங்கினேன்.. அந்தக் கடனை அடைக்க மேலும் கடன்.. இப்படியே எல்லாக் கடனும் வட்டி குட்டி போட்டு இப்போ நான் கடனாளி ஆகிவிட்டேன்..” சொல்லும் போதே சரணின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது..

“உன்னைச் சின்னப் பையன் என்றே நினைச்சேனேடா.. ஆனால் நீ பண்ணிய வேலை..?” சிவகுரு தலையில் கையை வைத்தபடி அமர்ந்துவிட்டான்..

“அண்ணா, என்னை எப்படியாவது இந்த இக்கட்டில் இருந்து என்னைக் காப்பாற்றுங்கள்..” சரண் கெஞ்சும் குரலில் இறைஞ்சினான்..

“அது மட்டும் முடியாது சரண்.. இப்போது நான் உதவலாம்.. பிறகும் நீ இதையே தொடர மாட்டாய் என்று என்ன நிச்சயம்..? ஒருவேளை நீ திருந்தினாலும் உன் மனைவி சும்மா இருக்க மாட்டாள்.. அவள் உன்னை ஏற்றிவிட்டுக் கொண்டே இருப்பாள்.. எப்படித் தனியே தைரியாம தொழிலை தொடங்கினாயோ அப்படியே இந்தக் கடனையும் தைரியமாக அடைத்து விடு.. நான் உனக்குச் சல்லிப்பைசா தர மாட்டேன்..” இரும்பு குரலில் உறுதியாய் கூறிய சிவகுரு இளகாது நிமிர்ந்து நின்றான்.. சரண் தலையைக் குனிந்தபடி அங்கிருந்து சென்றுவிட்டான்..

சரண் சென்ற இரண்டு மணி நேரத்தில் அவன் தற்கொலைக்கு முயன்று மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாகத் தகவல் சிவகுருவிற்குக் கிடைத்தது.. அதைக் கேட்டதும் அவனது உள்ளம் நடுநடுங்கி போனது.. அவன் உடனே மருத்துவமனைக்கு ஓடினான்.. அங்கு நின்றிருந்த தாத்தாவிடம் அவன்.

“என்னாச்சு தாத்தா..?” என்று கேட்க..

"என்னத்தைச் சொல்றது சிவா.. சரண் வீட்டுக்கு வந்ததும் அவனது மனைவி அவனிடம் ஒரே சண்டை... எப்போதும் நடக்கும் சண்டை தானே என்று நானும் சும்மா இருந்து விட்டேன்.. ஆனால் சங்கீதா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு போய்விட்டாள்.. அதன் பிறகு தான் சரண் தூக்க மாத்திரைகளை.." மேலே சொல்ல முடியாது நிறுத்தியவரின் விழிகள் கலங்கி போனது.. சிவகுரு அவரை அணைத்து ஆறுதல் அளித்தான்..

சுமார் நான்கு மணி நேர போராட்டத்துக்குப் பின் சரணை மருத்துவர்கள் காப்பாற்றி விட்டனர்.. தம்பி கண் விழித்ததும் அவனைப் பார்க்க வந்த சிவகுரு அவனது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்..

"எல்லாத்துக்கும் தற்கொலை தான் தீர்வுன்னு யார் சொன்னது..? நீ செத்து போயிட்டால் உன் மனைவி திருந்தி விடப் போகிறாளா..? இல்லை உன் கடன் தான் அடைப்படப் போகிறதா..?" என்று அவன் கோபத்துடன் உறும..

"கடனா..?" தாத்தா திகைத்தார்.. சிவகுரு அவரிடம் எல்லாவற்றையும் விளக்கி கூறினான்..

தாத்தா சரணின் அருகில் வந்து, "கடனுக்காகவா நீ தற்கொலை செய்ய முயன்றாய்..? நாங்க எல்லாம் எதற்கு இருக்கோம்..?" வாஞ்சையுடன் அவனது தலையை வருடி கொடுத்தவரின் குரல் நடுங்கியது..

"நான் கொடுக்க முடியாதுன்னு சொன்னேன் தாத்தா.." சிவகுரு வார்த்தைகளில் அவர் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தார்..

"ஒரு உயிரை விடப் பணம் முக்கியமாய்ப் போயிற்றா சிவா..?"

"நிச்சயம் இல்லை தாத்தா.. இவர்களைத் திருத்த எனக்கு வேறுவழி தெரியவில்லை.. ஆனால் இவன் கோழை மாதிரி இப்படி ஒரு காரியத்தைப் பண்ணுவான்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கலை.."

"நான் கடனுக்காகத் தற்கொலை பண்ணிக்கலை.." சரண் மெதுவே வார்த்தைகளை உதிர்த்தான்..

“பிறகு வேறு எதற்குடா..?” தாத்தா, சிவகுரு இருவரும் திகைத்து போய் அவனைப் பார்த்து கேட்டனர்..

“இப்படியொரு பணப்பேயை காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டேனே என்று என் மீதே எனக்கு வெறுப்பு..” என்று வார்த்தைகளை வெறுப்புடன் உமிழ்ந்தான் சரண்..

தம்பிக்கு இப்பவாவது புத்தி தெளிந்ததே என்று சிவகுரு சந்தோசம் அடைந்தான்... தாத்தாவிற்குத் தான் பெருத்த யோசனையாக இருந்தது.. தனியே சிவகுருவை அழைத்தவர்,

“இதை இப்படியே விடக் கூடாது சிவா.. சங்கீதா வீட்டில் பேசி இருவரையும் சேர்த்து வைக்க வேண்டும்..” என்று கூற..

“வேண்டாம் தாத்தா.. இப்படி ஒரு பேயுடன் அவன் வாழ வேண்டாம்..”

“ப்ச், அவன் தான் இருபத்திமூணு வயசு, சின்ன வயசு, புரியாமல் பேசுகிறான் என்றால்.. நீயும் அதையே சொல்லிக்கிட்டு..”

“அதனால் தான் அவனது காதலை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.. இருந்தாலும் அவனுக்காக அவனது காதலை அங்கீகரித்து அவன் காதலித்த பெண்ணையே அவனுக்குத் திருமணம் செய்தும் வைத்தாயிற்று.. இன்னும் என்ன பண்ணணும்..? அவள் கையில், காலில் விழுந்து சரணை ஏற்றுக் கொள்ளச் சொல்லி கெஞ்சணுமா..? அட போங்க தாத்தா..” சிவகுருவின் வார்த்தைகள் விட்டேற்றியாய் வந்தது..

“சிவா..”

“இப்படி ஒரு வாழ்க்கை அவன் வாழ்வதற்கு விவாகரத்து பண்ணுவது மேல்..” சிவகுரு திட்டவட்டமாகக் கூற.. பெரியவர் செய்வதறியாது திகைத்து நின்றார்..

அங்கே சங்கீதாவும் விவாகரத்து வேண்டும் என்று பெற்றோரிடம் குதித்துக் கொண்டிருந்தாள்..

“பொண்டாட்டியை வைத்து ஒழுங்கா வாழ தெரியாத கோழை அவன்...அவன் கூட எல்லாம் என்னால் வாழ முடியாது.. நான் அவனிடம் இருந்து டிவோர்ஸ் வாங்க போகிறேன்..” என்று

கோபத்தில் தாம்தூம் என்று கத்திய சங்கீதாவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை அறைந்தார் தயாளன்..

“உன்னை மாதிரி உன் அம்மா முடிவு எடுத்திருந்தால் இன்னைக்கு நீ இப்படி நின்ன பேசிட்டு இருந்திருக்க மாட்ட.. என்னோட ஏற்ற இறக்கத்தில் உன் அம்மா எப்போதும் என்னுடனே இருந்தாள்.. இதோஇப்போது வரை என் கூடவே இருக்கிறாள்.. இது தான் திருமண வாழ்க்கையின் தாத்பரியம்.. அதை விட்டுட்டு புருசன் சம்பாதிக்கலை அப்படி, இப்படின்னு ஓடி வர்றது நல்ல பெண்ணுக்கு அழகல்ல.. அவர் சம்பாதிக்கலைன்னு பொய் சொல்லாதே சங்கி.. அவரது வருமானத்தை விட உன்னுடைய தேவைகள் அதிகமாக இருக்கிறது.. அதுதான் உண்மையும் கூட..” என்ற தந்தையைக் கண்டு சங்கீதா திடுக்கிட்டாள்..

“புருசன் கொண்டு வர்ற வருமானத்தில் கட்டுக்கோப்பா வாழ்றது தான் நல்ல மனைவிக்கு அழகு.. அப்படிக் கஷ்டமான சூழ்நிலை என்றால் நீயும் வேலைக்குப் போ.. கிடைத்ததை இருவரும் பகிர்ந்து உண்ணுங்கள்.. இது தான் உண்மையான சந்தோசம்.. இது தான் உண்மையான காதல்.. பணம் இல்லை..”

தாயளனின் அறிவுரை சங்கீதாவின் காதுகளில் ஏறியதோ இல்லையோ அங்கு நின்றிருந்த சக்திப்ரியாவின் காதுகளில் நன்கு ஏறியது..

## 6

சரண் சோகமாய்த் தோட்டத்தில் அமர்ந்து மனைவி தன்னை விட்டு பிரிந்து சென்ற நாளை நினைத்து பார்த்துக் கொண்டிருந்தான்.. அன்று சிவகுருவிடம் பேசிவிட்டு தோல்வியுடன் வீட்டுக்கு வந்தவனைச் சங்கீதா கோபத்துடன் எதிர் கொண்டாள்..

“இன்னைக்கு ஷாப்பிங் பண்ணிட்டுக் கார்ட் போட்டால் பணம் இல்லைன்னு சொல்றான்.. எனக்கு ரொம்ப அசிங்கமா போயிருச்சு.. ஏன் இப்படிப் பண்ணினீங்க..?” அவள் அவனது சட்டையைப் பிடித்து உலுக்காத குறையாக உலுக்கினாள்..

“பேங்கில் பணம் இல்லை சங்கி..” அவன் சோர்வுடன் கட்டிலில் அமர்ந்தான்..

“என்னது.. பணம் இல்லையா..? அப்போ இவ்வளவு நாள் நீங்க பிசினஸ் பண்ணி என்னத்தைச் சம்பாதித்துக் கிழிச்சீங்க..?” அவளது வார்த்தைகள் ஆண்மகனான அவனைச் சீண்டி விட்டது..

“அந்தப் பிசினஸ்க்கு நீ என்ன உதவி பண்ணின..? விட்டால் இருபத்தினாலு மணி நேரமும் பஃப்பில் தான் குடியிருப்ப, அந்தளவுக்கு உனக்குப் பார்ட்டி மோகம் தலைவிரிச்சு ஆடுது..”

தன்னைக் குறை கூறிய கணவனைக் குதறி விடும் வேகம் அவளிடத்தில்..

“நீ மட்டும் என்ன ஒழுங்கா சரண்..? நேற்று கூட நீ குடிச்சிட்டு தான் வந்த..”

“நான் என் கவலையை மறக்க குடிக்கிறேன்.”

“உனக்கு என்ன கவலை..?”

“ஊரெல்லாம் கந்து வட்டிக்குப் பணம் வாங்கி உனக்குச் செலவுக்குப் பணம் கொடுக்கிறேன்ல.. அந்தக் கவலை தான்..”

“கந்துவட்டியா..?” அவள் அரண்டு போனாள்..

“ஆமாம், பிசினஸ் லாஸ்.. எல்லாப் பக்கமும் கடன்.. அண்ணாவும் விசயம் கேள்விப்பட்டு உதவ மாட்டேன்னு சொல்லிட்டாங்க..”

“அப்போ சொத்தை பிரிச்சு கேளுங்க..” அவள் அசால்ட்டாகக் கூற..

“ஏன் அதையும் குடிச்சு, கூத்தடிச்சு அழிக்கவா..?” அவனது வார்த்தைகள் அவளைக் கோபம் கொள்ள வைக்கப் போதுமானதாக இருந்தது..

“பொண்டாட்டியை உட்கார வச்சு சாப்பாடு போட துப்பில்லை.. என்னைப் பேச வந்துட்ட.. நீ ஊரெல்லாம் கடன் வாங்கியதுக்கு நானா காரணம்..? பிசினஸ் பண்ணும் திறமை உனக்கு இல்லை.. அதை ஒத்து கொள்.. உன்னை மாதிரியான ஒரு கோழையுடன் என்னால் வாழ முடியாது..” என்றவள் பெட்டியை எடுத்து தனது உடைமைகளை எடுத்து அடுக்கி வைக்கத் துவங்கினாள்..

“சங்கி, சின்னப் பிரச்சனைக்கு எதுக்கு இப்போ இப்படி ஆர்ப்பாட்டம் பண்ற..?”

“பணம் இல்லாதது சின்னப் பிரச்சனையா..?”

“பணம் தான் முக்கியமா சங்கி..? என் காதல் முக்கியம் இல்லையா..?”

“பணம் இருந்தால் தான் காதலும் பண்ண முடியும்.. இல்லை என்றால் கவலைப்பட்டுக் கொண்டே வாழ வேண்டியது தான்.. இதோ இப்போது நீ இருப்பது போல்..” என்றவளை கண்டு அவன் உள்ளுக்குள் செத்து போய் விட்டான்.. நடைபிணமான அவன் அதன் பின்பு அவளைத் தடுத்து நிறுத்தவில்லை..

மீண்டும் மீண்டும் அவளது வார்த்தைகள் அவனது காதுகளில் ஒலித்து அவனது காதல் மனதினை வலிக்கச் செய்தது.. இப்படி ஒரு அரக்கியையா தான் காதலித்துத் திருமணம் செய்தோம் என்று அவன் தனக்குள் நொந்து போனான்.. அதனாலேயே அவன் மனம் வெறுத்தவனாய் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்து தூக்க மாத்திரைகளை விழுங்கி கொண்டான்.. ஆனால் தாத்தா அவனது உயிரை காப்பாற்றி விட்டார்..

“சரண்..” அண்ணனின் குரலில் அவன் திரும்பி பார்த்தான்..

“கம்பெனிக்கு போகலையா..?”

“ம், போகணும்ண்ணா..”

“வேலையில் கவனத்தைச் செலுத்து.. இப்போது ஓய்வில்லாத வேலை தான் உனக்கான மருந்து..” என்ற சிவகுரு வேறு ஒன்றும் பேசாது சென்றுவிட்டான்..

சரணும் அண்ணனின் வார்த்தைகளை மனதில் நிறுத்தி வேலையில் கவனத்தைச் செலுத்தினான்.. கொஞ்சம் கொஞ்சமாக அவனைக் கொல்லும் மனைவியின் காதல் நினைவுகளில் இருந்து அவன் மீள ஆரம்பித்தான்..

சரணின் தற்கொலை செய்தி கேட்டதில் இருந்து சங்கீதாவின் நடவடிக்கையில் சற்று மாற்றம் வந்திருந்தது.. அவள் எப்போதும் கணவனது புகைப்படத்தைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தாள்.. ஆனால் அவளாக வாய்விட்டு கணவன் வீட்டிற்குச் செல்கிறேன் என்று கூறவில்லை.. சரண் அவளுக்கு உயிர் பயத்தையும், உயிர் வலியையும் ஒருங்கே காட்டி இருந்தான்.. அவளது நிலையைக் கண்ட தயாளன் தான் மகளுக்காகப் பரிதாபப்பட்டு அவளது புகுந்த வீட்டினருடன் பேச வேண்டும் என்று முடிவு எடுத்தார்..

அதன்படி சென்னைக்குக் கிளம்பி சென்ற தயாளன் திரும்பி வரும் போது பிணமாகத் தான் வந்தார்.. சாலை விபத்து என்றார்கள்.. அவர் இறந்த செய்தியை கேட்டு யாருமே நம்பவில்லை..

“இல்லை இது பொய்.. அப்பா சாகலை..” என்று கதறி துடித்த சக்திப்ரியாவை கண்டு எல்லோரும் கதறி அழுதனர்..

ஆயிற்று, தயாளன் இறந்து மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது.. சங்கீதாவின் பிரச்சனை கிணற்றில் போட்ட கல்லை போன்று அப்படியே இருந்தது.. இப்போது அவள் ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வந்தாள்.. சக்திப்ரியாவும் குடும்பச் சூழ்நிலை காரணமாகப் பல்பொருள் அங்காடி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தாள்.. தயாளன் இறந்த சோகத்துடன் ஒருவித இறுக்கத்துடன் அவர்களது நாட்கள் கடந்து சென்றது..

அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த சங்கீதாவிற்கு ராணி அழைத்து உடனே வீட்டிற்கு வரும்படி கூறினார்.. என்னவோ ஏதோவென்று அவள் பதறியடித்துக் கொண்டு வீட்டிற்குச் சென்ற போது அங்குத் தாத்தா நாராயணன் வந்திருந்தார்..

“வாங்க தாத்தா..” என்று பணிவோடு வரவேற்ற சங்கீதாவை அவரது விழிகள் கூர்மையுடன் அளவிட்டது.. காலம் எல்லாவற்றையும் மாற்றும் என்பது எத்தனை சத்தியமான வார்த்தைகள்.. முன்பு பார்த்த சங்கீதா இவள் இல்லை என்றே அவருக்குத் தோன்றியது..

“அவர் எப்படி இருக்கிறார் தாத்தா..?” தயக்கத்துடன் கேட்டவளை கண்டு புன்னகைத்தவர்,

“அவன் உன் புருசன்ம்மா... நீ நேரில் வந்து அவனிடமே இதைக் கேட்கலாமே..” என்று அவர் கேட்க..

“அதுக்கான அருகதை எனக்கு இல்லை தாத்தா..” தரையைப் பார்த்தபடி தலைகுனிந்து கொண்டு கூறியவளை கண்டு அவருக்குப் பாவமாக இருந்தது.. அவராலும் அவளுக்கு ஆறுதல் கூற முடியவில்லை..

“நான் இங்கு வந்ததற்கான காரணத்தைச் சொல்லிர்றேன்.. என் பேரன் சிவகுருவுக்கு உங்க இரண்டாவது பொண்ணு

சக்திப்ரியாவை பெண் கேட்டு வந்திருக்கேன்..” அவர் கூறியதை கேட்டதும் சங்கீதா மகிழ்ந்து போனாள்.. ஆனால் ராணி, ஞானம் இருவரும் யோசனையாய் தங்களுக்குள் பார்வையைப் பரிமாறி கொண்டனர்.. அதை உணர்ந்த நாராயணன் சங்கீதாவிடம்,

“காபி போட்டுக் கொண்டு வாம்மா..” என்று கேட்க.. அவள் புரிந்தார் போன்று அங்கிருந்து சென்றுவிட்டாள்..

“நீங்க எல்லாம் ஏன் தயங்குறீங்கன்னு எனக்குப் புரியுது.. இந்தக் கல்யாணத்தால் சரண், சங்கீதா மீண்டும் இணைந்து வாழ வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.. அதற்காகத்தான் இந்தத் திருமண ஏற்பாடே...” அவர் கூறியதும் இருவரது முகமும் மலர்ந்து போனது..

“வீட்டில் ஒரு பொண்ணு வாழாமல் இருக்கும் போது இன்னொரு பொண்ணுக்கு எப்படிக் கல்யாணம் பண்றது..? அதுவும் அதே வீட்டில்ன்னு எங்களுக்கு யோசனையா இருந்தது.. ஆனால் இந்தக் கல்யாணத்தால் சங்கி வாழ்க்கை சரியாகும்ன்னா எங்களுக்குச் சம்மதம்..” என்று ராணி தனது சம்மதத்தைத் தெரிவித்தார்..

“ஐயா, உங்க பெரிய பேரனுக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதமா..? எங்க சக்தி கொஞ்சம் துடுக்குத்தனம் நிறைந்த குறும்பு பெண்.. அதான் தயக்கமா இருக்கு..”

“அவனிடம் கேட்காது நான் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டேன்.. இதில் அவனுக்குப் பரிபூரணச் சம்மதம்..” என்றார் அவர்.

சக்திப்ரியாவை கேட்காது அவளது திருமணத்தை எல்லோரும் சேர்ந்து முடிவு செய்தனர்.. மாலையில் வீட்டிற்கு வந்த சக்திப்ரியாவிடம் அவளது திருமணச் செய்தியை சொன்னார்கள்..

“யார் மாப்பிள்ளை..? எங்க தல விஜய் தேவரகொண்டா மாதிரி இருப்பானா..?” என்று அவள் ஜொள்ளு விட்டுக் கொண்டு கேட்க.. அவளது தலையில் வலிக்காது கொட்டிய சங்கீதா,

“எங்க பெரிய மாமா அவனை விட அழகு..” என்று கூற..

“பெரிய மாமாவா..? அது யாரு சங்கி..?”

“சிவகுரு மாமா..”

“ஆ.. அந்த அங்கிளா..?” சக்திப்ரியா அதிர்ச்சியில் வாய்விட்டுக் கூவி விட்டாள்..

“வாயிலேயே ஒண்ணு போடுவேன்.. அங்கிளாம் அங்கிள்.. அழகா மாமான்னு சொல்லி பழகு..” ராணி சின்ன மகளைக் கடிந்தார்..

“என்னை விட அவங்க ஒன்பது வயசு பெரியவங்க.. அப்போ அவங்க எனக்கு அங்கிள் தானே.. இந்தக் கல்யாணம் எப்படிச் சரிவரும்.. அதை விட நான் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னா ஒரு முக்கியமான கண்டிசன் இருக்கு..”

“என்னதுடி..?” மூவரும் கோரசாகக் கேட்டனர்..

“அதெல்லாம் உங்க கிட்ட சொல்ல முடியாது.. என் வருங்காலத்து கிட்ட தான் சொல்ல முடியும்..” கெத்தாகக் கூறியவளை கண்டு பக்கென்று சிரித்தனர் மூவரும்..

தயாளன் இல்லை என்கிற குறையைத் தவிரச் சீரும், சிறப்புமாய்ச் சிவகுரு, சக்திப்ரியா திருமணம் நடந்து முடிந்தது.. இவர்களது திருமணத்தில் வன்மத்துடன் கலந்து கொண்டது சாருலதா மட்டுமே.. ஏனெனில் இந்தத் திருமணத்தோடு அவளது திருமணத்தையும் வைக்க வேண்டும் என்று கூறிய போது சிவகுரு உறுதியாய் மறுத்து விட்டான்.. அவனது திருமணம் தனியே நடைபெற வேண்டும் என்பதில் அவன் உறுதியாக இருந்தான்..

சிவகுரு தனது கழுத்தில் தாலி கட்டிய நொடியில் இருந்து சக்திப்ரியாவின் மனதில் ஏனோ இனம் புரியாத பயம் இருந்து கொண்டே இருந்தது.. நொடிக்கு ஒரு தடவை அவள் அவனைத் திரும்பி திரும்பி பார்த்து கொண்டிருந்தாள்..

“இங்கே என்ன படமா ஓடிக்கிட்டு இருக்கு..? என்னையே பார்க்காம வந்திருக்கும் விருந்தினரை கவனி..” அவன் அவளைத் திரும்பாது அடக்கப்பட்ட குரலில் சீறினான்.. அவனது கோபத்தில் அவள் அரண்டு போய் ஒழுங்காய் திரும்பி நின்று கொண்டாள்..

சங்கீதாவின் விழிகள் சரணையே சுற்றி வந்தது.. அவனோ இவளை சிறிதும் கண்டு கொள்ளாது வந்தவர்களை இன்முகத்துடன் உபசரித்துக் கொண்டிருந்தான்.. திருமணத்தைச் சாக்கிட்டுப் பெரியவர்கள் அவளை இங்கு அழைத்து வந்து

விட்டனர்.. இருவரும் ஒரே அறையில் தங்கியிருந்த போதும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.. சின்னப் புன்னகைக்குக் கூட அங்குப் பஞ்சமாகி போனது..

அன்றிரவு சங்கீதா தனது தங்கைக்குப் பார்த்து பார்த்து அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.. சக்திப்ரியாவோ கலவரத்துடன் பொம்மை போல் அமர்ந்திருந்தாள்..

"சங்கி.."

"என்னடி..?" தங்கையின் தலையில் பூவை சூடி கொண்டே சங்கீதா கேட்க..

"உங்க மாமா என்னை எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு..?"

"தெரியலையே.. இன்னும் கொஞ்ச நேரத்தில் இதே கேள்வியை நீயே அவரிடம் நேரில் கேளு.."

"அவங்க கிட்டயா..? ம்ஹூம் நான் மாட்டேன்பா.." அவள் தனது வாயை இரு கைகளைக் கொண்டு மூடி கொண்டாள்.. அவளது பாவனையில் சங்கீதாவிற்குச் சிரிப்பு வந்தது..

"நீ மாமாவோட மனைவி.. உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க.. அவங்க கோபக்காரங்க தான்.. ஆனால் தப்பு செஞ்சால் மட்டுமே கோபப்படுவாங்க.. மற்றபடி நல்லவங்க தான்.."

"அப்படின்னு சொல்ற..?"

"அப்படியே தான்.." என்ற சங்கீதா தங்கையை எழுப்பிச் சிவகுருவின் அறைக்கு அழைத்துச் சென்றாள்..

"பார்த்து நடந்துக்கோ.." அறையின் முன்னே நின்று கொண்டு மீண்டும் சங்கீதா அறிவுரை கூற..

"ஐயாவோட பெர்மான்சை நாளைக்குத் தெரிஞ்சுக்குவ சங்கி.." என்ற சக்திப்ரியா இல்லாத காலரை தூக்கி விட்டு கொண்டாள்.. அவளது பேச்சில் சங்கீதாவின் முகம் தான் வெட்கத்தில் சிவந்து போனது..

"உள்ளே போடி அரட்டை.."

அவள் தங்கையை அனுப்பி வைத்துவிட்டு தனது அறைக்கு வந்தாள்.. அங்கு அவளுக்கு முன்னேயே வந்து சரண் படுத்திருந்தான்.. அவனைக் கண்டு பெருமூச்சு விட்டபடி அவள் மறுபக்கம் வந்து படுத்தாள்.. அவன் உறங்கவில்லை.. உறங்குவது போல் நடித்தான்.. இருவரின் மனதிலும் அவர்களது முதலிரவு நினைவுகளே வலம் வந்தது.. தாபம் மனதினை வாட்டி வதைத்த போது இருவரும் ஒருவரை ஒருவர் திரும்பி பார்த்து கொள்ளவில்லை..

சக்திப்ரியா கையில் பால் சொம்புடன் திருவிழாவில் தொலைந்த குழந்தை போல் சிவகுருவின் அறையில் தனித்து நின்றிருந்தாள்.. சிவகுருவை எங்குத் தேடியும் காணவில்லை.. அவள் பால் சொம்பை மேசை மீது வைத்து விட்டு கணவனைத் தேட துவங்கினாள்..

"மாமா, மாமா.." என்று கத்தியபடி அவள் அவனைத் தேட துவங்க..

"ஷ்.. சத்தத்தைக் குறை.." என்றபடி அவன் பால்கனியில் இருந்து உள்ளே வந்தான்..

"இங்கே தான் இருக்கீங்களா..?" என்று நிம்மதி பெருமூச்சு விட்டவள் கட்டிலில் போய் அமர்ந்தாள்..

"மாமா, இங்கே வாங்க.." தனக்குப் பக்கத்தில் இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டி அவனை அமர சொன்னாள்..

'நான் சொல்ல வேண்டிய டயலாக்கை இவள் பேசுகிறாளே..' என்று அவன தான் அயர்ந்து போனான்..

"மாமா.."

"ப்ச், எனக்குக் காது கேட்குது.. என்னை ஏலம் போடாம நீ சொல்ல வந்ததைச் சொல்லு.."

"நீங்க உம் கொட்டினால் தான் எனக்குப் பேச வரும்.."

"இது வேறையா..? சொல்லி தொலை.." என்றான் அவன் கடுப்பாக..

"என்னை மன்னிச்சிட்டீங்களா..?" அவள் கேட்ட முதல் கேள்வியில் அவன் அசந்து போய்விட்டான்..

“எதுக்கு..?” என்று அவன் வாய் கேட்ட போதும், அவள் அவனிடம் மன்னிப்பு கேட்டது, பின்பு கண்ணாடியில் எழுதி வைத்து, பூங்கொத்து கொடுத்து மன்னிப்பு கேட்டது எல்லாம் அவனது ஞாபகத்தில் எழுந்தது..

“அன்னைக்கு என்னால் தானே எல்லோரும் உங்களைத் திட்டினாங்க.. அதுக்காகத் தான்..”

“அதை நீ இன்னும் மறக்கலையா..?” அவனது குரல் கரகரத்து ஒலித்தது..

“ம்ஹூம், இல்லவே இல்லை.. ஏன்னா நீங்க என்னை மன்னிக்கவே இல்லையே..” சிறுபிள்ளையாய் உதட்டை பிதுக்கியவளை உற்று நோக்கியவன்,

“அப்படின்னா நான் உன்னை மன்னிக்கவே போவதில்லை..” என்று கூற, அதைக் கேட்டு அவளது முகம் வாடி போனது.. ஆனாலும் தனது குறும்புத்தனத்தை விடாது,

“நீங்க என்னை மன்னிக்கும் வரை நானும் உங்களை விடப் போவதில்லை..” என்று சிரித்தபடி கூற..

“நீ பேசி முடித்தாயிற்றா..? இனி நான் பேசலாமா..?”

“ம், எல்லாம் முடிஞ்சது.. நீங்க பேசுங்க..” என்றவள் அவன் பக்கம் திரும்பி சம்மணமிட்டு நன்றாக அமர்ந்து கொண்டாள்..

“இந்தக் கல்யாணம் நான் விரும்பி பண்ணிக்கிட்டது இல்லை.. உங்கக்கா, என் தம்பி வாழ்க்கையை சீராக்க பண்ணியது..” என்றவன் அவளது முகத்தைப் பார்க்க.. அவளோ புன்னகை மாறாது,

“அதனால் என்ன மாமா..? இப்போ நீங்க என்னுடைய கணவன், நான் உங்க மனைவி.. இதில் ஏதும் மாற்றம் வந்துவிடப் போகிறதா..?” வாழ்க்கை தத்துவத்தை மிக எளிதாக எடுத்து கூறிய சின்னப் பெண்ணைக் கண்டு அவன் இமைக்க மறந்து பார்த்தான்..

“அதே போல் நீ என்னுடைய அந்தஸ்திற்கு ஏற்ற பெண் இல்லை.. எனக்கு மனைவியாக வர வேண்டும் என்று நான் நினைத்த பெண் வேறு.. அது நீயில்லை.. நீயே நினைத்தாலும் அது போல் வர முடியாது..” என்று கூறும் போதே அவனிடத்தில் இருந்து சிறு பெருமூச்சு எழுந்தது..

“ஓ.. காதல் தோல்வியா மாமா..?” என்று வெகுளியாகக் கேட்டவளை ஒரு கணம் ஆழ்ந்து பார்த்தவன் பதில் ஏதும் கூறவில்லை.. அதை அவள் கண்டு கொள்ளவும் இல்லை..

“நமக்கு எல்லாம் எந்தக் காதல் தோல்வியும் கிடையாது.. ஏன்னா நான் யாரையும் காதலித்தது இல்லை..”

‘உனக்குக் காதல் வந்துட்டாலும்..’ அவன் மனதிற்குள் நொடித்துக் கொண்டாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை..

“மாமா, மாமா..”

“முதல்ல மாமான்னு கூப்பிடுறதை நிறுத்து..” அவன் எரிச்சலுடன் மொழிய..

“அப்போ அங்கிள்ன்னு கூப்பிடவா..?” கண்களில் குறும்பு மின்ன கேட்டவளை கண்டு,

“ஏய்..” என்று கர்ஜித்தவன், “பேசாம படுக்கப் போறியா இல்லையா..?” என்று கத்த..

சிவகுருவின் கோபத்தில் அவள் கட்டிலின் ஒரு பகுதியில் சுருண்டு படுத்துக் கொண்டு கண்களை இறுகமூடி கொண்டாள்.. அவன் பெருமூச்சு விட்டபடி மறுபக்கம் வந்து படுத்துக் கொண்டான்.. சிறிது நேரம் அமைதியாகச் சென்றது..

“மாமா, உங்க கிட்ட ஒண்ணு கேட்கவா..?” அவளது கேள்விக்கு அவனிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை..

“மாமா, கேட்கவா..?”

“கேட்டு தொலை..” அவனது வார்த்தையில் எரிச்சலே மிகுந்திருந்தது..

“உங்களுக்கு ஹோட்டல் இருக்கா..?” என்று திடுமெனக் கேட்டவளை கண்டு அவன் திகைப்புடன் திரும்பி பார்த்தான்.. அவளும் அவனைத் தான் பார்த்து கொண்டிருந்தாள்..

“எதுக்குக் கேட்கிற..?”

“முதல்ல கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்க..”

“இல்லை..”

"அப்போ நீங்க ரிஜெக்டட்.."

"எதுக்கு..?"

"எனக்கு வர போற கணவனோட முதல் தகுதியே ஹோட்டல் முதலாளியா இருக்கணும்ங்கிறது தான்.." என்றவளை கண்டு அவன் 'ஙே' என்று விழித்தான்..

அவள் முதல் ஃபாலில்லேயே அவனை அவுட்டாக்கி விட்டாள்..!!!

## 7

சிவகுரு அவலுவலகம் செல்வதற்கான உடை அணிந்து கண்ணாடி முன் நின்றபடி கழுத்தில் டை கட்டி கொண்டே கண்ணாடி வழியே கட்டிலை பார்த்தான்.. அவனது அருமை மனைவி சக்திப்ரியா இன்னமும் உறங்கி கொண்டிருந்தாள்.. அந்தக் கணம் இவளை திருமணம் செய்தது தவறோ..? என்கிற எண்ணம் அவனுள் எழ ஆரம்பித்தது.. எண்ணம் எழ ஆரம்பித்த வேகத்திலேயே அவன் அதை இரப்பர் போட்டு அழித்து விட்டான்..

'எது எப்படி இருந்தாலும் சக்திப்ரியா எனது மனைவி.. நான் அவளுடைய கணவன்..' நேற்று அவள் அவனுக்குச் சொன்ன பாடத்தை இப்போது அவன் தனக்குத் தானே சொல்லி கொண்டான்..

டைகட்டி முடித்தவன் நேரே கட்டில் அருகில் வந்து நின்று மனைவியைப் பார்த்தான்.. அவள் கை, கால்களைக் கட்டில் முழுவதும் பரப்பிக் கொண்டு சுகமான நித்திரையில் ஆழ்ந்திருந்தாள்.. அவளால் அவனது வாழ்க்கை முறைக்கு ஈடு கொடுத்து போக முடியுமா..? என்கிற சந்தேகம் அவனுள் தோன்றியது..

'நீ எதுக்கு இருக்கிற..? அவளுக்குப் புரியும்படி எல்லாத்தையும் நிதானமா சொல்லி கொடு.. கொஞ்சம் கொஞ்சமாக உன்னுடைய வாழ்க்கை முறைக்கு ஏற்றார் போன்று அவளை மாற்றிக் கொள்..' அவனது மனசாட்சி அவனுக்கே அறிவுரை கூறியது..

திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு முறை தான்.. அது இவளுடன் என்று கடவுள் முடிச்சு போட்டுவிட்டான்.. அதை

மாற்ற இயலாது.. சக்திப்ரியாவை தான் மாற்ற வேண்டும் என்று அவன் எண்ணி கொண்டான்.. ஆனால் அவள் மாறுவாளா..? என்று அவனுக்குப் பெருத்தச் சந்தேகமாக இருந்தது..

நேற்று அவள் ஒற்றைக் கேள்வி அவனை அரண்டு போக வைத்ததை நினைத்தவனுக்கு இப்போதும் சிரிப்பு வந்தது.. 'ஹோட்டல் இல்லை என்றால் நீங்க ரிஜெக்டட்..' என்று கூறியவளை கண்டு அப்போது அவனுக்குக் கோபம் வந்தது..

"அப்போ எதுக்கு நீ என்னைக் கல்யாணம் பண்ணின..?" அவன் கோபத்துடன் கேட்டே விட்டான்..

"தெரியாத பேயை விடத் தெரிந்த பிசாசு மேல் அல்லவா.." அவள் கூறிய பதிலில் அவனுக்குத் தான் புரை ஏறியது..

"என்னைப் பிசாசுன்னு சொல்லுறியா..?"

"ஐயோ, இல்லை மாமா.." என்றவளை அவன் முறைத்துப் பார்த்தான்..

"சரி, நான் கேட்கிறதுக்கு உண்மையா பதில் சொல்லு.. நீ எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ண சம்மதிச்ச..?"

"நீங்க ஏன் என்னை.." அவள் முடிக்கும் முன் கை நீட்டி தடுத்தவன்,

"முதலில் நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு.." என்று கூற..

"விஜய் தேவரகொண்டா மாதிரி மாப்பிள்ளை வேணும்ன்னு சொன்னேன்னா.." அதைக் கேட்டதும் அவனது முகம் விழுந்தே போனது.. அதை அறியாது அவள் பேசி கொண்டே போனாள்..

"ஆனா நீங்க தான் மாப்பிள்ளைன்னு தெரிஞ்சதும் விஜய் தேவரகொண்டாவை அழிச்சிட்டு அதில் விஜய் சேதுபதியை பிக்ஸ் பண்ணிட்டேன்.. ஏன்னா விஜய் சேதுபதிக்கும் உங்களுக்கும் பத்து பொருத்தமும் பக்காவா பொருந்தி இருக்குது.." கண்சிமிட்டி சிரித்தவளை கண்டு அதிசயமாய் அவனுக்கும் சிரிப்பு வந்தது.. இருந்தாலும் அவன் அதைக் காட்டி கொள்ளாது உம்மென்று அவளைப் பார்த்திருந்தான்..

"இதை எல்லாம் விட முக்கியமான ஒண்ணு இருக்கு.." என்றவளை கண்டு அவன் என்ன என்பது போல் பார்க்க..

“கிட்ட வாங்க மாமா..” என்று அவள் அழைத்தாள்.. அவனோ அருகே செல்லாது அமைதியாகப் படுத்திருந்தான்..

“நீங்க வரலைன்னா என்ன..? நான் வர்றேன்..” என்றவள் ஒரே உருளலில் அவன் அருகே வந்து அவன்மீது மோதி நின்றாள்..

“பச், என்ன பண்ற..?” அவன் எரிச்சலுடன் அவளைப் பிடித்துத் தள்ளி நிறுத்தினாலும் பெண்ணவளின் அருகாமை அவனை ஏதோ செய்தது உண்மையே..

“என்னை வேலைக்குப் போன்னு சொல்ல கூடாது.. நான் வீட்டில் ஜாலியா இருப்பேன்.. முக்கியமா நான் டிவி சீரியல் பார்ப்பதற்குத் தடை சொல்ல கூடாது.. இதுக்கு எல்லாம் நீங்க ஒத்துக்கிட்டால் நீங்க தான் என் மனம் கவர்ந்த கணவன்.. ரொம்பச் சிம்பிள்..” என்று இரு கைகளையும் விரித்துப் புன்னகைத்தவளை கண்டு அவன் தான் மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான்..

“சரி, இதுக்கும் ஹோட்டலுக்கும் என்ன சம்பந்தம்..?” அவன் புரியாது கேட்டான்..

“என்ன மாமா, இப்படிச் சொல்லிட்டீங்க..? நான் டிவி சீரியல் பார்த்துட்டு இருந்தால் யார் உங்களுக்குச் சமைச்சுத் தர்றது..? எல்லாம் உங்க நல்லதுக்காகத்தான்..”

“ஓ.. தாலி கட்டிய புருசன் மேல் அக்கறைன்னு சொல்வாங்களே.. அது இது தானா..?”

“ஹிஹி.. ஆமா மாமா..”

“அடச்சீ, கம்முன்னு படு.. நீயும், உன் லட்சியமும்..” அவன் கோபத்துடன் திரும்பி படுத்துக் கொண்டான்..

“நீங்க என்னை என்ன வேணா சொல்லிக்கோங்க.. என் லட்சியத்தை மட்டும் குறை சொன்னீங்க.. அப்புறம்.. அப்புறம்..?” மேலே பேச தெரியாது அவள் தனது நகத்தைக் கடித்துத் துப்பினாள்..

“பேசாம படுக்கப் போறியா இல்லையா..?” என்று அவன் அதட்டல் போடவும் தான் அவள் அடங்கிப் போய்ப் படுத்தாள்.

அதை எல்லாம் நினைத்து பார்த்தவனுக்கு இப்போது கண்களைக் கட்டி கொண்டு வந்தது.. ‘கடவுளே..! இவளை

சமாளிக்கும் பொறுமையை எனக்குக் கொடு..' என்று அவன் அவசரமாய்க் கடவுளிடம் விண்ணப்பத்தை நீட்டினான்..

காலத்தின் கட்டாயத்தில் நடந்த திருமணம் என்றாலும் அது நிலைத்திருக்க வேண்டியே அவன் வேண்டி கொண்டான்..

"சக்தி, சக்தி.." உறங்கி கொண்டிருந்த மனைவியை அவன் எழுப்பினான்..

"ம்மா, ப்ளீஸ்.. இன்னும் கொஞ்ச நேரம்.." என்றவள் புரண்டு படுத்து கொண்டாள்.. அவளை எப்படி எழுப்புவது என்று தெரியாது திகைத்தவன் வேறுவழியின்றி அவளை எழுப்பாது அறையை விட்டு வெளியில் வந்தான்..

வரவேற்பறையில் அமர்ந்திருந்த தாத்தாவின் முகம் காண சங்கடப்பட்டவனாய் சிவகுரு அவரைக் காணாதவாறு தாண்டி செல்ல..

"சிவா, நில்லு.." தாத்தாவின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது..

"என்ன தாத்தா..?"

"நேத்து தான் கல்யாணம் முடிஞ்சிருக்கு.. இன்னைக்கு ஆபிஸ் போனால் என்ன அர்த்தம்..?"

"வேலை இருக்குன்னு அர்த்தம்.." என்றவன் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. நேரமாகி விட்டது என்று அவன் சொல்லாமல் சொல்கின்றானாக்கும்..

"வேலை எப்போதும் இருக்கும் தான்.. இன்னைக்கு ஒரு நாள் வீட்டில் இரு சிவா.."

"இல்லை தாத்தா.." அவன் பதில் அளிக்கும் முன் சாருலதா குறுக்கிட்டாள்..

"மனசுக்கு பிடிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டால் தானே அது மாதிரி எல்லாம் தோணும்.. இதுவே பிடிக்காத கல்யாணம்.. ஆனாலும் அத்தான் யாரையோ காயப்படுத்த இவ்வளவு அவசரமாக ஒரு அரைவேக்காட்டைக் கல்யாணம் பண்ணியிருக்க வேண்டாம்.." சாருலதா தனது மனதின் குரோதத்தை அப்பட்டமாய் வெளிப்படுத்தினாள்.. நல்லவேளை அங்கே தாத்தா, சிவகுரு, அவளைத் தவிர வேறு யாருமில்லை..

“சாரு, தேவையில்லாம பேசாதே.. சிவா சக்தியை பிடிச்சு தான் கல்யாணம் பண்ணிக்கிட்டான்..”

“இது நம்பும்படியாக இல்லையே..” சாருலதாவின் பார்வை சிவகுருவை துளைத்தெடுத்தது..

“உன்னை நம்ப வைக்க என்ன செய்யலாம்..?” என்று தாடையைத் தடவியபடி யோசித்தவன் பின்பு முகம் மலர்ந்தவனாய்,

“இன்னும் சக்தி எழுந்திருக்கவில்லை..” என்று நிறுத்திவிட்டு அவளது முகத்தைப் பார்த்தான்.. அதைக் கேட்டு அவளது முகம் கருத்துப் போய்விட்டது.. அதைக் கண்ட சிவகுருவின் முகம் திருப்தியை காட்டியது..

“நீ ஒண்ணும் சின்னப் பெண் கிடையாது.. நான் சொன்னதற்கான அர்த்தம் உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்..” என்றவன் அப்போது அங்கு வந்த சங்கீதாவிடம்,

“சக்தி அவளாக எழும் வரை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்..” என்று கூறியவன் அலுவலகத்திற்குச் சென்று விட்டான்..

தாத்தா கூடப் பேரனின் பதிலில் சற்று அயர்ந்து தான் போனார்.. பேரன் மனைவியுடன் மகிழ்ச்சியாக இருப்பது தெரிந்து அவர் சந்தோசம் அடைந்தார்.. அவர் விரும்பியதும் அதுதானே..

திருமணக் களைப்பில் அயர்ந்து உறங்கிய சக்திப்ரியா பதினொரு மணிக்கு தான் எழுந்தாள்.. எழுந்தவளுக்குத் தான் எங்கே இருக்கிறோம் என்று முதலில் புரியவில்லை.. பின்பு யோசித்துப் பார்த்தவளுக்குத் தனக்குக் கல்யாணமானது ஞாபகத்தில் வந்தது..

“ஐயோ, மாமா..” என்று அலறியபடி பக்கத்தில் பார்க்க.. அங்கே சிவகுரு படுத்திருந்த இடம் காலியாக இருந்தது.. ஏதோ தோன்ற அங்கிருந்த கடிகாரத்தைப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்..

“போச்சு, இன்னைக்கு அம்மா கிட்ட திட்டு வாங்க போறேன்..” என்றபடி வேகமாய் எழுந்தவள் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்..

சக்திப்ரியா குளித்து உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வரும் போது ராணியும், ஞானமும் அவளைப் பார்க்க வந்திருந்தனர்.. அவர்கள் மதுரை வீட்டை காலி செய்து விட்டு சென்னைக்குக் குடி வந்துவிட்டனர்.. பெரியவர் தான் இந்த ஏற்பாட்டைச் செய்தது.. அதற்கு ராணி நன்றி தெரிவித்த போது அவர்,

“ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதில் தப்பில்லையேம்மா..” என்று கூற,

“சங்கி அப்பாவுக்கு உங்க எல்லோரிடமும் பயம் இருந்தது.. ஆனால் பழகி பார்த்தால் நீங்க யாரும் அப்படி இல்லை..” ராணி மனதை மறையாமல் கூற..

“அவர்களுடையது காதல் திருமணம் அல்லவா.. அதனால் குடும்பத்தில் சிறு குழப்பம்.. அந்த நேரம் எல்லோருக்கும் மனசு சரியில்லை..” என்றவரிடம் ராணியும் எதுவும் கேட்கவில்லை..

அந்த நினைவில் மனம் நெகிழ அமர்ந்திருந்த ராணியின் முன் குளித்து முடித்து, உச்சிவகிட்டில் குங்குமம் வைத்து, தழைய தழைய புடவை கட்டி கொண்டு அழகாய் அம்சமாய் வந்து நின்றாள் சக்திப்ரியா.. அவளைக் கண்டதும் அந்தத் தாயின் உள்ளம் குளிர்ந்து போனது..

“சக்தி இங்கே வா..” என்று அவர் அழைக்க..

“அம்மா, இன்னைக்கு ஒருநாள் லேட்டாகிருச்சு.. நாளையில் இருந்து சீக்கிரம் எழுந்திருவேன்..” தவளை தன் வாயால் கெட்டது..

“என்ன இது சக்தி..? கொஞ்சம் பொறுப்பு இல்லாமல்..” என்று ராணி தனது பஜனையை ஆரம்பிக்க..

“ப்ரைனி என்னைக் காப்பாத்து..” என்று அவள் தனது பாட்டியிடம் சரணடைந்தாள்..

“விடு ராணி.. சின்னப் பெண் தானே..”

“என்ன சின்னப் பெண் அத்தை.. இவளை நம்பி ஒரு ஜீவன் இருக்குதே.. அவரையாவது இவள் கவனித்தாளா என்னன்னு கேளுங்க..?”

“யாரும்மா அது..?” என்று வேறு கேட்டு ராணியின் கோபத்தை அதிகரித்தாள் சக்திப்ரியா..

“பாருங்கத்தை, உங்க பேத்தியோட லட்சணத்தை..”

“சிவாவை கவனிச்சியான்னு உங்கம்மா கேட்கிறாள்.. அவர் சாப்பிட்டாரா..?”

“தெரியலை ப்ரைனி..” அவள் உதட்டினை பிதுக்கினாள்..

“உன்னை..” ராணி கோபத்தில் கடிய போக..

“ம்மா, பெரிய மாமா தான் அவளை எழுப்ப வேண்டாம்ன்னு சொல்லிட்டுப் போனார்.. அவங்க ரெண்டு பேருக்கும் இடையில் நல்ல அண்டர்ஸ்டாண்டிங் இருக்கு.. நீங்க கவலைப்பட வேண்டாம்..” என்றபடி அங்கே வந்து சேர்ந்தாள் சங்கீதா..

“சங்கி, மாமாவா அப்படிச் சொன்னது..?” சக்திப்ரியா வியப்பில் விழிகளை விரித்தாள்..

“ஆமா, உன்னருமை மாமா தான் அப்படிச் சொன்னாங்க..”

“ஐய், சூப்பர்.. நான் போய் மாமாவுக்கு ஃபோன் போட்டு பேசிட்டு வர்றேன்..” என்றவள் துள்ளி குதித்துக் கொண்டு ஓடினாள்..

“நீ எப்படியிருக்கச் சங்கி..?” என்ற அன்னையைக் கண்டு சிரித்து மழுப்பினாள் சங்கீதா..

“ஒரே நாளில் சரி செய்துவிடும் தவறை நான் செய்யலைம்மா.. அவர் என்னை மன்னிச்சு ஏத்துக்க டைம் எடுக்கும்..”

“மன்னிக்கவே இல்லைன்னா..?” ராணியின் குரல் கலக்கத்துடன் ஒலித்தது..

“இந்த வாழ்க்கையே போதுமானது..” என்று அவள் முடித்துக் கொண்டாள்.. அந்தப் பக்கமாக வந்த சரணின் காதுகளில் மனைவியின் வார்த்தைகள் விழுந்தாலும் அவன் அசட்டையாகத் தோள்களைக் குலுக்கி கொண்டு நகர்ந்து விட்டான்..

சக்திப்ரியா கணவனுக்கு அழைப்பு மேல் அழைப்பு எடுத்து சோர்ந்து போய்விட்டாள்.. பிறகு கோபத்துடன் அலைப்பேசியை அணைத்து விட்டாள்..

ராணியும், ஞானமும் தங்களது வீட்டிற்குக் கிளம்பி சென்றுவிட.. சங்கீதாவும் வேலைக்குச் சென்றுவிட்டாள்.. ஆம், அவர்களது நிறுவனத்தில் அவள் முதலில் பார்த்த அதே வேலையைத் தான் பார்க்கிறாள்.. உழைத்து சாப்பிட வேண்டும் என்கிற எண்ணம் தான் அதற்குக் காரணம் என்றாலும், கணவன் அருகிலேயே இருக்கலாமே என்கிற நினைவும் அவளை அவர்களது நிறுவனத்தில் வேலை பார்க்க வைத்தது.. தாத்தா அவரது அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.. அதனால் சக்திப்ரியா மட்டும் தனித்து வீட்டை சுற்றி வந்து கொண்டிருந்தாள்.. இது தான் சமயம் என்று சாருலதா அவளை நோக்கி வந்தாள்..

"ஹாய் சக்தி.." என்ற சாருலதாவை கண்டு முகம் மலர்ந்தாள் சக்திப்ரியா..

"அப்பாடா, நீங்க ஒரு ஆளாவது வீட்டில் இருக்கீங்களே.. பேச்சு துணைக்கு ஆள் இல்லாம தவிச்சு போயிட்டேன்.."

"அதுக்கு என்ன..? பேசிட்டா போச்சு.." என்றபடி சாருலதா அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தாள்.. அவள் மருந்துக்கும் சக்திப்ரியாவை அமர சொல்லவில்லை..

"அப்புறம்.. எப்படியிருக்க..?"

"நல்லாயிருக்கேன்.."

"சிவா அத்தான் உன்னைச் சந்தோசமா வச்சிருக்காங்களா..?"

"காலையில் என்னை எழுப்ப வேண்டாம்ன்னு மாமா சொல்லியிருக்காரே.. அப்போ அவர் என்னைச் சந்தோசமா வச்சியிருக்காருன்னு தானே அர்த்தம்.."

'புருசனும், பொஞ்சாதியும் ஒரே மாதிரி பேசுதுங்க..' அதைக் கேட்டுச் சாருலதா பல்லை கடித்தாள்..

"ரொம்ப டயர்டா இருந்தியோ..?"

"டயர்டு எல்லாம் ஒண்ணும் இல்லைக்கா.. பொதுவா நான் லேட்டா தான் எழும்புவேன்.." சாருலதாவிற்கு வேண்டிய விசயத்தை சக்திப்ரியா அவளே கூறினாள்..

'சிவா இதுக்குத் தானா அம்புட்டு பில்டப் பண்ணினானா..?' அவளது இதழ்கள் இகழ்ச்சியாய் வளைந்தது..

"சிவா அத்தானை உனக்குப் பிடிக்குமா..?"

"பிடிக்குமான்னு தெரியலை.. ஆனா போகப் போகப் பிடிக்க ஆரம்பிச்சிரும்.." என்று வெகுளியாகக் கூறியவளை கண்டு சாருலதாவிற்கு எரிச்சலாக வந்தது..

'அதெப்படி அவன் சந்தோசமாக இருக்க விடுவேன்..?' என்று அவள் மனதில் கங்கணம் கட்டி கொண்டாள்..

"சிவா அத்தானுக்கு மனைவியா வர்றதுன்னா நிறையக் குவாலிபிகேசன் இருக்கணும்.. அது ஒண்ணு கூட உனக்கு இல்லையே.. அத்தான் ரொம்பப் பாவம்.." சாருலதா சிவகுருவுக்காகப் போலியாகப் பரிதாபப்பட்டாள்..

"ஆமாக்கா, ரொம்பப் பாவம்.. அவர் யாரையோ காதலிச்சாராம்.. நேற்று கூட என்னிடம் சொன்னார்.." அதைக் கேட்டதும் சாருலதாவின் விழிகள் பளிச்சிட்டது.. முதலிரவில் கூட ஒருவன் தன் காதலை பற்றிச் சொல்லி இருக்கிறான் என்றால் அந்தக் காதல் அவனது மனதினை எந்தளவிற்குப் பாதித்து இருக்கும்..?

"அது வேறு யாருமில்லை சக்தி.. நான் தான்.." என்றவளது விழிகளில் அத்தனை கர்வம் வழிந்தது..

"நீங்களா..?" சக்திப்ரியா வாயை பிளந்தாள்..

"ஆமாம், உன்னால் நம்ப முடியவில்லையா..? ஆனால் அது தான் உண்மை.. என்னையும், உன்னையும் ஒப்பிட்டு பண்ணி பார்.. உன்னை விட நான் அதீத அழகு.. உன்னை விட நான் அதிகம் படித்து இருக்கிறேன்.. உன்னை விட நான் அதிக வசதி படைத்தவள்.. எல்லா விதத்திலும் நான் உன்னை விடச் சற்று அதிகம் தான்.."

"அப்புறம் ஏன் மாமா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலை..?"

"ஈகோ.. நான் அவனுக்கு அடங்கிப் போகணும்.. அதே சமயம் அவன் என் கிட்ட அடங்கிப் போகக் கூடாதுங்கிற ஈகோ.. அதனால் தான் காதலிச்ச என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டு உன்னைக் கல்யாணம் பண்ணி இருக்கான்.. நீ தானே மக்கு மண்ணாந்தை.. அவன் சொல்வதற்கு எல்லாம் தலையாட்டுவ.. அதுக்குத்தான்.."

“அச்சோ..” என்றவளின் அலைப்பேசி சிணுங்கியது.. சக்திப்ரியா அதை எடுத்து பார்த்தாள்.. அதில் ஒளிர்ந்த பெயரை சாருலதாவும் கண்டாள்.

‘மாமா ஃகாலிங்..’

அதைக் கண்டு சாருலதாவின் உதடுகளில் நமட்டுச் சிரிப்பு ஒன்று வந்தமர்ந்தது..

# 8

“மாமா தான் ஃகால் பண்றாங்க..” என்று சாருலதாவிடம் உரைத்த சக்திப்ரியா அலைப்பேசியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து சிட்டாகப் பறந்திருந்தாள்..

“இதில் எல்லாம் விவரமாகத் தான் இருக்கிறாள்..” சக்திப்ரியா வேகமாய் ஓடியதை கண்டு எரிச்சலுடன் முணுமுணுத்தாள் சாருலதா..

சக்திப்ரியா வேகமாய் அறைக்குள் நுழைந்து கதவை தாழ்ப்பாள் போட்டவள் அடுத்த நொடி அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்..

“மாமா..” வேக வேகமாய் மூச்சு விட்டபடி பேசியவளை கண்டு சிவகுருவின் புருவங்கள் சுருங்கியது..

“என்னாச்சு..?”

“உங்க ஃகால் வந்ததும் ஓடி வந்தேனா.. அதான் மூச்சு வாங்குது..”

“உன்னோட செல்லில் தானே பேசறேன்.. இதுக்கு எதுக்கு ரூமுக்கு ஓடி வந்த..”

“அது.. அங்கே சாருலதாக்கா இருந்தாங்க.. அதான் தனியா வந்துட்டேன்..”

சாருலதா பெயரை கேட்டதும் அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது.. சாருலதா பற்றிக் கேட்க நினைத்தவன் பிறகு மனதை மாற்றிக் கொண்டு,

“எதுக்கு ஃகால் பண்ணின..? அதுவும் இத்தனை அழைப்பு..”

"மாமா என்னுடைய ஃபோன் நம்பர் எப்படி உங்களுக்குத் தெரியும்..?" மனைவியின் வார்த்தையில் விழிகள் மூடி தன்னை நிதானப்படுத்திக் கொண்டவன்,

"என்ன விசயம்ன்னு சொல்றியா..? இல்லை ஃபோனை வைக்கவா..?" குரலில் சற்றுக் கடுமை ஏற்றிக் கொண்டு கேட்க..

"ஐயோ வச்சிராதீங்க.." என்று அவள் மறுபக்கம் அலறினாள்.

"சரி, வைக்கலை.. சொல்லு.."

"அச்சோ, எதுக்கு ஃபோன் பண்ணினேன்னு மறந்து போயிட்டேனே.." என்று அவள் நாக்கை கடித்தபடி விழித்தாள்..

"அப்போ யோசிச்சிட்டு ஃபோன் பண்ணு.."

"மாமா, எனக்குப் போர் அடிக்குது.. ஃபோனை வச்சிராதீங்க.." மறுபக்கம் அவள் சிணுங்கினாள்..

"போர் உன்னை அடிப்பதால் நீ என்னை அடிக்க முடிவு செய்துட்டியா..?"

"ஐய், மாமா ஜோக் எல்லாம் அடிக்கிறீங்க..? வில்லன் உங்களுக்குள்ள வடிவேலு இருக்கிறதை சொல்லவே இல்லை.."

மனைவியின் வார்த்தைகளில் தான் அவன் தான் பேசியதையே உணர்ந்தான்.. அவன் திரும்பி தனக்குப் பக்கவாட்டில் இருந்த கண்ணாடியை பார்த்தான்.. அவனது புன்னகை முகம் அவனுக்கே அந்நியமாய்த் தெரிந்தது..

"மாமா, மாமா.. ஞாபகம் வந்திருச்சு.." அந்தப் பக்கம் அவள் கத்திய கத்தலில் அவன் அலைப்பேசியைக் காதில் இருந்து எடுத்துவிட்டு காதை குடைந்து கொண்டான்.. இருந்தும் காதில் 'ஙொய்' என்று சத்தம் கேட்டது..

"சக்தி.." அவன் அதட்டவும் மறுபுறம் அவள் அமைதியாகி போனாள்..

"நான் சொல்றதை கேட்ப தானே..?" அவன் கேட்டதுக்குப் பதில் எதுவும் வரவில்லை.. மாறாகக் கனத்த மௌனம் நிலவியது.. அழைப்பை துண்டித்து விட்டாளோ..? என்று எண்ணி அவன் அலைப்பேசியை எடுத்துப் பார்த்தான்.. அழைப்பு இன்னமும் தொடர்பில் தான் இருந்தது..

"சக்தி, என் பேச்சு கேட்பியா..? மாட்டியா..?" மீண்டும் அதே மௌனம்..

"சொன்ன பேச்சு கேட்க கூடாதுங்கிற முடிவில் இருக்கிற.. அப்படித்தானே..?" அவனது பொறுமை கொஞ்சம் கொஞ்சமாய்க் காற்றில் பறக்க ஆரம்பித்தது..

"ஐயோ, இல்லை மாமா.. நான் சரின்னு தலையாட்டினேன்.." அவள் சொன்னவிதம் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது..

"அடுத்த முறை வீடியோ ஃகால் பண்ணு.. நீ தலையாட்டியதை லைவ்வா பார்க்கிறேன்.."

"ம்ம்.."

"எனக்கு இப்படிக் கத்தி பேசுறவங்களைப் பிடிக்கவே பிடிக்காது சக்தி.."

"தெரியும் மாமா.."

"தெரியுமா..? யார் சொன்னது..?" என்றவனது மனக்கண்ணில் சாருலதாவின் முகம் மின்ன மறைந்தது..

"நீங்க சாருலதாவை காதலிச்சது.. அவங்க உங்க சொன்ன பேச்சு கேட்காததால் நீங்க அவங்களை வேண்டாம்ன்னு சொன்னது.. உங்க பேச்சு கேட்கும் பொண்ணு வேணும்ன்னு மக்கான என்னைக் கல்யாணம் பண்ணியது.. எல்லாமே எனக்குத் தெரியும் மாமா.."

"இதெல்லாம் யார் சொன்னது..?" அவனது குரல் சீறலாய் ஒலித்தது..

"நீங்க தான்.."

"நானா..?"

"ஆமா, நேத்து நீங்க தானே சொன்னீங்க.."

அவள் சொல்லவும் தான் அவனுக்கு நேற்று தான் கூறியது அனைத்தும் ஞாபகத்தில் வந்தது.. அதை நினைத்த மாத்திரம் அவனுக்கு ஐயோவென்று இருந்தது..

"அப்படி எல்லாம் இல்லை சக்தி.."

“பரவாயில்லை மாமா.. எனக்கு இதெல்லாம் ஒண்ணும் பிரச்சனை இல்லை.. ஆனா எனக்கு ஒரே ஒரு பிரச்சனை தான்..”

“என்னது..?” தான் என்ன பேசியது போதும் தன்னிடம் கோபம் கொள்ளாது அதை மறந்து பேசும் குழந்தை குமரி பெண்ணிடத்தில் அவனையும் அறியாது அவனது மனம் சாய்ந்தது..

“நான் மக்கா இருந்தாலும் உங்க பேச்சு கேட்க மாட்டேனே..”

“ஏன்..?”

“ஹிஹி.. நீங்க சொல்றதை புரிஞ்சிக்கிற அளவுக்கு எனக்கு அறிவு இல்லையே..” அவளது வெகுளியான வார்த்தையில் அவனது மனதில் ஏதோ ஒன்று தடம் புரண்டது..

“உனக்கு அறிவு இல்லைன்னா என்ன..? எனக்கு இருக்குல்ல.. அது போதும்..” என்றவன்,

“கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் உன்னைக் கத்தி பேச கூடாதுன்னு சொன்னேன் தானே.. அது உனக்குப் புரியாம போச்சா..? இல்லைல்ல.. என் பேச்சு கேட்ட தானே.. அது மாதிரி தான்.. சின்னச் விசயங்களில் எனக்காக நீ மாறினால் போதும்.. மற்றது எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..” தன்மையுடன் கூறியவனைக் கண்டு அவள் வியப்புடன் நின்றிருந்தாள்..

“மாமா, இது நீங்க தானா..? எனக்கு ஆச்சரியமா இருக்கு.. என்னைப் பார்த்த முதல் நாளே வீட்டை விட்டு வெளியில் தள்ளி கதவை சாத்துனீங்க.. இப்போ என்னையவே கல்யாணம் பண்ணி, எனக்கு நல்லதும் சொல்றீங்களே.. உங்க நல்ல மனசு யாருக்கு வரும்..” அவள் சிலாகித்துக் கொண்டு கூற..

“அப்போது நீ யாரோ..? இப்போது நீ என் மனைவி.. உன் நலனில் என்னைவிட யாரும் அதிக அக்கறை காட்ட முடியாது.. என்ன புரிஞ்சதா..?”

“ம், ம்..”

“அவ்வளவு தானா..? ஃபோனை வைக்கவா..?”

“மாமா, நான் எதுக்கு ஃகால் பண்ணினேன்னு நீங்க கேட்கவே இல்லையே..” அவள் அதைப் பற்றிச் சொல்ல வரும் போது தான் அவன் வேறு பேசி பேச்சை திசை திருப்பி விட்டானே..

“இப்ப கேட்கிறேன் சொல்லு..”

“சாப்பிட்டீங்களா மாமா..?”

மனைவியின் அக்கறை அவனது அடிநெஞ்சு வரை சென்று தித்தித்தது.. அவளைப் பிடிக்குமா..? என்று கேட்டால், தெரியவில்லை என்பது தான் அவனது பதில்.. அவளைக் காதலிக்கிறாயா..? என்று கேட்டால், அதற்கும் அவனது பதில் தெரியவில்லை என்பது தான்.. ஆனாலும் அவளைக் கைவிட அவனால் என்றுமே முடியாது.. அவனது தனது வலக்கையை விரித்து உள்ளங்கையைப் பார்த்தான்.. அதில் என்ன கண்டானோ..? அவனது முகத்தில் சொல்லொண்ணா துயரம் எழுந்தது..

“மாமா..” தனது பதிலுக்காகக் காத்திருக்கும் மனைவியின் குரலில் நினைவு கலைந்தவன்,

“ம், இப்போ தான்..”

“அப்ப சரி..” என்று சந்தோசமாய் அலைப்பேசியை வைக்கப் போனவளை அவனது குரல் தடுத்து நிறுத்தியது..

“நீ சாப்பிட்டியா..?”

“இனிமேல் தான் மாமா..”

“ஏன் இவ்வளவு நேரம்..?”

“காலையில் லேட்டா தான் சாப்பிட்டேன்..”

“நேரத்துக்குச் சாப்பிடு..” என்றவன் அழைப்பை துண்டிக்க..

அவளோ அலைப்பேசியை நெஞ்சோடு அணைத்தபடி பரவச மனநிலையில் நின்றிருந்தாள்.. பெரியவர்கள் சொன்னதற்காகத் தான் அவள் அவனைத் திருமணம் செய்து கொண்டது.. திருமண வாழ்க்கை அவளுக்கு என்ன வைத்துக் காத்திருக்கிறது என்று அவளுக்குத் தெரியாது.. ஆனாலும் இந்தக் கணம் அவளுக்குத் தனது கணவனை மிகவும் பிடித்திருந்தது..

**ச**ரண் கார் சாவியை எடுத்துக் கொண்டு அலுவலக அறையை விட்டு வெளியில் வந்தவன் அப்போது தான் கவனித்தான் மனைவி மட்டும் வேலை செய்து கொண்டிருப்பதை.. அவளை நோக்கி செல்ல துடித்த கால்களை மிகவும் சிரமப்பட்டு அடக்கியவன் வாயிலை நோக்கி சென்றான்.. சரண் அறையை விட்டு வந்ததில்

இருந்து சங்கீதா அவனைத் தான் கவனித்துக் கொண்டிருந்தாள்.. அவனது உதாசீனத்தில் அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது..

'அன்று காதல் முக்கியம் இல்லை.. பணம் தான் முக்கியம் என்று அவனை விட்டுச் சென்றது நீ தானே.. இப்போது அழுது என்ன பிரயோஜனம்..?' அவளது மனசாட்சி அவளைத் திட்டி தீர்த்தது.. சிறிது நேரத்தில் அவள் வேலையை முடிந்து கணினியை அணைத்து விட்டு வெளியில் வந்தாள்.. அங்கே அவளுக்காக அலுவலகக் கார் ஒன்று காத்திருந்தது..

"இப்போ தான் டியூட்டி முடிச்சிட்டு வந்தேன்.. நீங்க மட்டும் இருக்கிறதா எம்டி சொன்னார்.. உங்களைப் பத்திரமா வீட்டில் விடச் சொல்லி உத்தரவு மேடம்.." அதன் ஓட்டுநர் பணிவாகக் கூற.. கணவனது அக்கறையில் அவளுள் சிலீரென்று ஒரு உணர்வு ஊடுருவியது..

வீட்டிற்கு வந்ததும் சங்கீதா கணவனைத் தேடி அறைக்குப் போனாள்.. அங்குப் பால்கனியில் அமர்ந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்த கணவன் முன்பு வந்து நின்றவள்,

"தேங்க்ஸ்.." என்க.. அவனோ அவளைப் பார்க்காதவன் போல் அமர்ந்திருந்தான்..

"தேங்க்ஸ் இப்படிச் சொல்ல கூடாதுல்ல.." என்றவள் அடுத்த நொடி அவனது உதடுகள் மீது தனது உதட்டினை அழுத்தமாய்ப் பதித்தாள்..

"ச்சே.." என்றபடி ஆக்ரோசமாய் எழுந்த சரண் அவளை உதறித் தள்ளியிருந்தான்..

"சரண்.." அவளது அழைப்பினை காதில் வாங்காதவனாய் அவன் அறையை விட்டு சென்று விட்டான்.. அவனின் மனதினை எப்படி மாற்றுவது..? என்று தெரியாது அவள் மனம் மருகினாள்.

"**மா**மா, வந்துட்டீங்களா..?" சிவகுரு அறை கதவை திறந்ததும் சக்திப்ரியா குரல் கொடுத்தாள்.. அவளை ஆளை காணாது அவன் சுற்றும் முற்றும் தேட..

"இங்கே இருக்கேன் மாமா.." அவள் தொலைக்காட்சி முன்னிருந்த சோபாவினுள் சொகுசாய் புதைந்திருந்தபடி தலையை மட்டும் நீட்டி அவனைப் பார்த்தாள்.. அவளைப் பார்த்தபடி அங்கு வந்தமர்ந்தவன் சோபாவில் அயர்வாகச் சாய்ந்து கொண்டான்.

"காபி கிடைக்குமா சக்தி..?"

'காபி கொண்டு வா' என்று அதிகாரம் காட்டாது.. 'கிடைக்குமா..?' என்று அவன் கேட்டதும் அவளால் மறுத்து பேச இயலவில்லை.. நிச்சயம் அவன் அதிகாரம் பண்ணியிருந்தால் அவள் 'போயிட்டு வா..' என்றிருப்பாள்.. ஆனால் அவனது தன்மையான பேச்சினை அவளால் எதிர்க்க முடியவில்லை..

தன் சொல் பேச்சு கேட்டு அமைதியாகச் செல்லும் மனைவியைக் கண்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.. 'ஆடுற மாட்டை ஆடித்தான் கறக்கணும்..' இந்த வாசகம் தான் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது..

"மாமா, காபி.." தன் முன் காபி கோப்பையை நீட்டிய மனைவியை நன்றியோடு ஏறிட்டு பார்த்தவன் அப்படியே திகைத்து போய் விட்டான்.. அவளது மற்ற கையில் தட்டு நிறைய வெங்காயப் பக்கோடா இருந்தது..

"இது யாருக்கு..?"

"எனக்குத் தான்.. லைட்டா பசி எடுத்த மாதிரி இருந்துச்சு.."

"உனக்காகத் தான் கிச்சனுக்குப் போனியா..?" அவனது குரல் ஒரு மாதிரியாக ஒலித்தது..

"இல்லை.. காபி எடுக்கத்தான் போனேன்.. அப்படியே போனனா இதையும் அள்ளிட்டு வந்துட்டேன்.." என்றவளை கண்டு போலியான மெச்சுதலுடன் பார்த்தவன் காபியை பருக ஆரம்பித்தான்..

மெல்ல மனைவியிடம் பேச்சு கொடுத்து சாருலதா அவளிடம் என்ன பேசினாள்..? என்கிற விசயத்தைக் கறந்து விட்டான்.. அவனுக்குச் சாருலதா மீது கோபம் வந்தது.. அன்று சங்கீதாவிடம் தேவை இல்லாது பேசி அவளது மனதை கரைத்தாள்.. அது பற்றித் தெரிந்ததும் சிவகுரு தம்பியிடம் பேசி பார்த்தான்..

"சாரு சொன்னாலும் இவளுக்கு எங்கே போனது புத்தி..? சங்கி பேச்சை கேட்ட நானும் இதில் குற்றவாளி தான் அண்ணா.. சாருவை விட நாங்க ரெண்டு பேரும் தான் முக்கியக் குற்றவாளிகள்.." என்றவனிடம் மேலே எதுவும் பேச முடியாது போனது..

இதோ இன்று தனது மனைவியிடம் கண்டதையும் பேசி அவளது குழந்தை மனதில் நஞ்சை விதைக்கப் பார்த்திருக்கிறாள்..

'நான் உன்னைக் காதலித்தேனா..? ஆஹா, அப்படியா..? இதற்காகவே உனக்குச் சிறந்த கல்யாணப்பரிசு கொடுத்தாக வேண்டுமே..' அவன் வில்லத்தனமாக யோசிக்க ஆரம்பித்தான்.. அவன் நல்லவனுக்கு நல்லவன்.. கெட்டவனுக்குக் கெட்டவன்..

சாருலதாவின் திருமண நிச்சய விழா அவர்களது வீட்டில் மிகவும் பிரமாண்டமாக நடந்தது.. அந்த விழாவிற்காக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வரவழைக்கப்பட்டு இருந்தனர்.. அத்தனை பேர் இருந்த சபையில் சிவகுரு மாப்பிள்ளை வீட்டாரிடம்,

"மாமா அவரது மகளுக்கு என்னென்ன சீர் வரிசைகள் தர்றதா சொல்லியிருக்காரு.." என்று கேட்க.. அதைக் கண்டு சாருலதாவின் வயிற்றில் புளி கரைக்க ஆரம்பித்தது..

மாப்பிள்ளை வீட்டார் குணசேகரன் செய்வதாகக் கூறிய சீர்வரிசைகளைப் பட்டியலிட.. அதை முகம் மாறாது கேட்ட சிவகுரு,

"சாரி.. இதை எல்லாம் செய்யும் வசதி எங்க மாமாவுக்குக் கிடையாது.. நாங்களாகப் பார்த்து ஏதாவது செய்தால் தான் உண்டு.. ஆனால் இப்போது நாங்கள், அதாவது நான் எதையும் செய்ய முடியாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன்.. பொன்னை வைக்கும் இடத்தில் பூ வைக்க மட்டுமே என் மாமாவால் முடியும்.." என்று உறுதியான குரலில் தீர்க்கமாய், தீர்மானமாய்க் கூறியவனைக் கண்டு அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர்.. நாராயணன் உட்பட..

## 9

வீட்டினுள் எல்லோரும் கூடியிருந்த போதும் அங்கு மயான அமைதி நிலவியது.. சற்று முன்னர் நிச்சய வீட்டிற்கான சோபையுடன் காணப்பட்ட வீடு இப்போது இழவு வீடு போல் காட்சி அளித்தது.. அனைவரது முகத்திலும் ஒருவித இறுக்கம் காணப்பட்டது.. சிவகுருவோ அலட்சியமாக அமர்ந்திருந்தான்.. சக்திப்ரியாவோ அவனைப் பயத்துடன் பார்த்தபடி நின்றிருந்தாள்.. கணவனது

கோபத்தின் அளவை கண்டு அவளது தளிர்மேனி நடுநடுங்கி கொண்டிருந்தது.. அன்று முதல் முறையாக அவளைப் பார்த்த போது கூட அவன் அவளிடம் கடுமையாக நடந்து கொண்டான் தான்.. இல்லை என்பதற்கு இல்லை.. ஆனால் அவனது இந்த வன்மம், குரோதம் எல்லாம் அவள் சற்றும் எதிர்பாராத ஒன்று.. அவள் எப்போதும் பட்டாம்பூச்சி போல் சந்தோசமாய்ச் சிறகடித்துப் பறப்பவள்.. அவளது மனதில் எந்தவித கல்மிசமும் கிடையாது.. ஆனால் அவளது கழுத்தில் தாலி கட்டிய கணவனோ அவளது குணத்திற்கு நேர் எதிர்ப்பதமாக அல்லவா இருக்கின்றான்.

சிவகுரு மனைவியின் மனநிலையைக் கூடக் கவனிக்கவில்லை.. மாறாக அவனது மனதில் பழிவெறி மட்டுமே ஓடி கொண்டிருந்தது.. சாருலதாவை கொன்று புதைத்து விடும் வேகம் அவனுள்..

“சிவா, நாங்க உனக்கு என்ன கெடுதல் பண்ணினோம்..? ஏன் இப்படி என் மகள் வாழ்க்கையில் மண்ணை அள்ளி போட்ட..?” குணசேகரன் மனத்தாங்கலுடன் கேட்டார்..

“நான் மண்ணை அள்ளி போட்டேனா..? நல்ல கதையாக இருக்கிறதே.. நீங்கள் தான் உங்க பெண்ணோட வாழ்க்கையில் மண்ணை அள்ளி போட்டு இருக்கீங்க..”

“நானா..?”

“ஆம், நீங்களே தான்.. இந்த வீட்டில் உங்களது நிலையை நீங்க உணராது போனது உங்களுடைய தவறு.. நீங்க என் கம்பெனியில் மேனேஜர் வேலை தான் பார்க்கிறீங்க.. அதுக்கு ஓனர் இல்லை.. விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும் மாமா.. உங்க வசதிக்கு ஏற்றார் போன்று உங்க பெண்ணிற்கு மணமகன் பார்த்திருக்க வேண்டும்.. அதை விட்டு விட்டு பெரிய இடத்தில் சம்பந்தம் பேசினால் இப்படித் தான் நடக்கும்.. இனியாவது புத்தியோடு நடந்து கொள்ளுங்கள்.. இல்லை நான் இப்படித்தான் நடந்து கொள்வேன் என்றால் இந்தக் கணமே வீட்டை விட்டு வெளியேறுங்கள்..”

குணசேகரன் மிகவும் நல்ல மனிதர்.. தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருப்பவர்.. சுந்தரி கொஞ்சம் அலட்டல் பேர்வழி என்றாலும் மிகவும் நல்ல பெண்மணி தான்.. இருவருக்குமே சிவகுரு பேசியது கண்டு திகைப்பாய் இருந்தது..

"சிவா.." அதட்டலாய் ஒலித்தது தாத்தாவின் குரல்..

"முதலில் மாமாவிடம் மன்னிப்பு கேள் சிவா.. சாருவுக்குச் சீர் செய்வதால் நாம் ஒன்றும் குறைந்து போய்விட மாட்டோம்.."

"அவளுக்கான சீரை நாம் எதற்காகச் செய்ய வேண்டும் தாத்தா..? நாம் இல்லாது அகிலத்தையே ஆட்டிப்படைக்கும் ஆற்றல் அவர்களுக்கு நிறையவே இருக்கிறது.." என்றவன் நேருக்கு நேராய் சாருலதாவை பார்த்தான்.. அவள் மனதிற்குள் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது இறுக்கமாய் நின்றிருந்தாள்..

சிவகுரு சாருலதா முன் நின்றவன், "உன் அழகு, உன் திறமை, உன் படிப்பு எல்லாமே என் பணத்தின் முன்பு மதிப்பிழந்து போய்விட்டது.. பார்த்தாய் அல்லவா.. உனக்குப் பார்த்திருக்கும் மணமகனுக்கு உயிரும் உணர்வுமுள்ள நீ வேண்டாமாம்.. நீ கொண்டு வரும் உயிரற்ற சீர்கள் தான் வேண்டுமாம்.. த்ச்சு, த்ச்சு, கேட்கவே ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது.. உனக்கு இந்த நிலைமை வந்திருக்க வேண்டாம்.." என்று போலியாகப் பரிதாபப்பட்டான்.. அவனது வார்த்தைகளில் சாருலதாவின் முகம் அவமானத்தில் கன்றிப் போய்விட்டது..

"இப்போது புரிகிறதா..? என்னிடம் வம்பு வைத்துக் கொள்ள நினைத்தால் நான் எந்தளவுக்கு வேண்டுமானாலும் இறங்குவேன் என்று.. என்னைப் பகைத்துக் கொள்ள நினைக்காதே.. இருக்கும் இடம் தெரியாது அழித்து விடுவேன்.. என் பெயரில் மட்டும் சிவனில்லை.. என் குணத்திலும் சிவன் இருக்கிறார்.. அழித்து விடுவேன் அழித்து.." என்று ஒற்றை விரல் நீட்டி எச்சரித்தவன் பின்பு மாமா புறம் திரும்பி,

"இத்தனைக்கும் காரணம் உங்கள் அருமை மகள் தான்.. உங்களுக்கும் எனக்கும் எந்தப் பகையும் இல்லை.. ஆனால் உங்கள் மகள் என்னை எதிரியாக நினைக்கிறாள்.. அப்போ நான் எதிரியாகத் தானே நடந்து கொள்ள முடியும்.. அதைத் தான் இப்போது நான் செய்திருக்கிறேன்.." என்று மொழிந்துவிட்டு விறுவிறுவெனச் சென்றுவிட்டான்.. அவன் காரை கிளப்பிக் கொண்டு செல்லும் சத்தத்தில் தான் அனைவருக்கும் உணர்வு வந்தது..

குணசேகரன், சுந்தரி இருவரும் தங்கள் மகளிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு பார்த்து விட்டனர்.. ஆனால் சாருலதாவோ எதையும் கூறாது இறுகி போய் அமர்ந்திருந்தாள்.. அவளது மனதில் வன்மம் தான் அதிகரித்துக் கொண்டு போனதே தவிர.. அவள் அடங்குவதாய் இல்லை.. சிவகுருவிடம் அவள் தோற்றுப் போகக் கூடாது.. அதுவே அவளது தாராக மந்திரமாக இருந்தது..

சக்திப்ரியா திக்பிரம்மை பிடித்தார் போன்று தோட்டத்தில் இருந்த கல்மேடையில் அமர்ந்திருந்தாள்.. சங்கீதா அவள் அருகில் அமர்ந்து அவளது தோளை தொட்டாள்..

"என்ன சக்தி, இங்கே வந்து உட்கார்ந்துட்டு இருக்க..?"

"சங்கி.." என்றவள் அக்காவின் தோளில் சாய்ந்து அழ ஆரம்பித்து விட்டாள்..

"இப்போ நீ எதுக்கு அழற..?" சங்கீதா புரியாது அவளைப் பார்த்தாள்..

"எனக்குப் பயமாயிருக்கு சங்கி.."

"மாமாவை நினைச்சா ரொம்பப் பயமாயிருக்கு.. சாரு அக்கா மேல் என்ன தப்பு இருந்தாலும் அவங்க நிச்சயத்தை நிறுத்தியது தப்பு இல்லையா..? அது மகாபாவம் இல்லையா..? ஒரு பெண்ணின் பாவம் பொல்லாதது சங்கி.. அது நம் தலைமுறையையே அழித்து விடும்.. எனக்கு என்னுடைய வாழ்க்கையை நினைச்சா ரொம்பப் பயமாயிருக்கு.." கணவனது ருத்ரதாண்டவம் கண்டு அந்தச் சின்னப் பெண் மிகவும் அரண்டு போனாள்..

"உனக்கு ஒண்ணு தெரியுமா..? பெரிய மாமா என்னைக் கூடத் தான் சத்தம் போட்டு இருக்காரு.."

"மாமா ஒருத்தரையும் மிச்சம் வைக்கிறது இல்லையா..? உன்னையும் திட்டி இருக்காரா..? ஏன் சங்கி..?"

"நான் கொஞ்சம் ஊதாரித்தனமா இருந்தேன்.. அதனால் கோபப்பட்டுத் திட்டி இருக்கார்.. அப்போ நானும் பதிலுக்கு அவரைத் திட்டி இருக்கேன்.. ஆனா இப்போ அவர் என்னை ஏதாவது பேசுறாரா..?"

"ம்ஹூம்.." என்று மறுப்பாய் தலையசைத்தாள் சக்திப்ரியா..

"இப்போ நான் என்னை மாத்திக்கிட்டேன்.. அதனால் கூட இருக்கலாம்.. இதில் இருந்து என்ன தெரியுது..? அவர் தப்புச் செஞ்சவங்களைத் தான் சத்தம் போடுவார்.. சாருலதா ஏதோ தப்புச் செய்து இருக்கிறாள்.. அதான் இப்படிச் சத்தம் போடுறார்.."

"அதுக்குன்னு இப்படியா..? ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுப்பது ரொம்பப் பெரிய பாவம்.."

"நீ பாவப்படும் அளவுக்குச் சாருலதா ஒண்ணும் நல்லவள் கிடையாது.. அவள் ஏற்கெனவே என் கிட்ட வந்து பெரிய மாமாவை பத்தி தப்புத் தப்பா பேசியவள் தான்.."

"அவங்க எப்படி வேணா இருந்துட்டு போகட்டும் சங்கி.. நாம அவங்க அளவுக்குக் கீழிறங்கி போக வேண்டாமே.." சக்திப்ரியாவின் பிள்ளை மனம் பரிதவித்தது..

"சக்தி, நீ இப்போ பெரிய மாமா கிட்ட இதைப் பத்தி எதுவும் பேசி உங்களுக்குள் பிரச்சனையை இழுத்து விட்டுக்காதே.. மாமா எல்லாத்தையும் பார்த்துப்பார்.. நீ தைரியமா இரு.." என்ற சங்கீதா எழுந்து உள்ளே சென்று விட்டாள்..

சக்திப்ரியாவும் எழுந்து உள்ளே சென்றவள் நேரே தனது அறைக்குச் செல்ல முயல.. அவளை வழியிலேயே பிடித்துக் கொண்டாள் சாருலதா.. அவளது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.. அவளது கண்கள் அடக்கப்பட்ட கோபத்தில் சிவந்து காணப்பட்டது.. அவளைப் பார்த்த சக்திப்ரியா பயத்தில் பின்னால் நகர்ந்தாள்..

"சிவா தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்ல.. அப்புறம் எதுக்கு என் வாழ்க்கையோடு விளையாடுகிறான்.. இன்னும் அவனுக்கு என்ன வேணுமாம்..? நானா..? அப்போ பேருக்கு தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டானா..? அவன் இன்னமும் என்னைத் தான் மனசில் நினைச்சிட்டு இருக்கானா..? ச்சீ, எவ்வளவு கீழ்த்தரமான எண்ணம் அவனுக்கு.. அவன் கிட்ட போய்ச் சொல்லு.. அவனோட எண்ணம் எப்போதுமே நடக்காதுன்னு.. இந்தச் சாரு.. கண்ணகி மாதிரின்னு.. அவன் என்னைத் தொட்டான்னா முதல்ல அவனைத் தான் நான் எரிப்பேன்னு அவன் கிட்ட போய்ச் சொல்லு.." ஆக்ரோசமாய் வெறி பிடித்தார் போன்று கத்தியவளை கண்டு சக்திப்ரியா பயத்தில் அறைக்குள் ஓடி வந்துவிட்டாள்..

சக்திப்ரியாவின் அச்சத்தைக் கண்ட சாருலதாவின் இதழ்கள் இகழ்ச்சியில் வளைந்தது.. 'இனி நீ எப்படிச் சந்தோசமா வாழுறேன்னு நானும் பார்க்கிறேன் சிவா.. சக்தி மனதில் நெருப்பைப் பற்ற வைத்து விட்டேன்.. இனி அது திகுதிகுவெனப் பற்றி எரிய வேண்டியது தான் மிச்சம்.. என்னிடமா உன் வேலையைக் காட்டுகிறாய்..?' அவள் கோபத்தில் பற்களைக் கடித்தாள்..

இரவு வீடு திரும்பிய சிவகுருவை தாத்தா அவரது அறைக்கு அழைத்தார்.. அவனும் மறுப்பு சொல்லாது அவரைப் பின்தொடர்ந்தான்..

"உட்கார் சிவா.." என்றதும் உட்கார்ந்தவன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்..

"ஏன் இப்படி நடந்துக்கிற சிவா..? நம்மை ஒருத்தங்களுக்குப் பிடிக்கலைன்னாலும், நமக்கு ஒருத்தங்களைப் பிடிக்கலைன்னாலும் வேண்டாம்ன்னு விலகி போயிரணும் சிவா.. இப்படி வன்மத்தை வளர்த்துக் கொண்டு மொத்தமா பழிவாங்க கூடாது.."

"நான் யாரையும் பழிவாங்கலை தாத்தா.. அவங்க செய்ற செயலுக்கு எதிர்வினை ஆற்றுகின்றேன் அவ்வளவே.."

"சாரு அப்படி என்ன செய்தாள்..?"

"முதலில் சங்கீதா மனதில் நஞ்சை விதைத்துக் குடும்பத்தில் பிரச்சனையை உண்டு பண்ணினாள்.. அந்தப் பிரச்சனையே இப்போது தான் தீர்ந்து இருக்கிறது.. இப்போது அடுத்தப் பிரச்சனையை ஆரம்பித்து விட்டாள்.. சக்தியிடம் போய் நான் அவளைக் காதலித்ததாகவும், ஈகோ காரணமாய் அவளைக் கல்யாணம் பண்ணலைன்னும் சொல்லி இருக்கிறாள்.. இதெல்லாம் விடச் சாரு சக்தியிடம் 'நீ முட்டாளாக இருப்பதால் தான் சிவா உன்னைக் கல்யாணம் பண்ணி இருக்கிறான்'ன்னு சொல்லி இருக்கிறாள்.. இவ்வளை என்ன செய்றதுன்னு நீங்களே சொல்லுங்க..?" அவன் படபடவெனப் பொரிந்து தள்ளிவிட்டான்.

சாருலதாவின் இன்னொரு பக்கத்தை அறிந்த தாத்தா சற்று அசந்து தான் போனார்.. இப்படியும் ஒரு பெண்ணால் யோசிக்க முடியுமா..? என்று..

“இவளுக்கு எதற்கு இந்தக் கெட்ட எண்ணம்..?” அவருக்கு ஆற்றாமையாக இருந்தது..

“வேறு என்ன.. நான் நிம்மதியாக இருக்கக் கூடாது என்பதற்காகத் தான்..”

“உங்க இருவருக்கும் இடையில் என்ன நடந்தது என்று எனக்கும் தெரியவில்லை.. ஆனால் இந்த விரோதம் நல்லதுக்கு இல்லை சிவா.. என்ன இருந்தாலும் சாரு ஒரு பெண்..”

“பெண் என்றால் பேய் வேண்டுமானால் இரங்கலாம்.. ஆனால் இந்தச் சிவா இரங்க மாட்டான்.. இன்னொரு தடவை என் வாழ்க்கையில் ஊடே அவள் வரட்டும்.. இன்னும் பலமாய் அடிக்கிறேன்..” சிவகுரு கோபம் குறையாது உறுமினான்.. பிறகு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

“வேறு ஒண்ணும் இல்லையே தாத்தா.. நான் வர்றேன்..” என்று அவன் கிளம்ப ஆயத்தமாக..

“சிவா..” தாத்தாவின் குரலில் அவன் திரும்பி பார்த்தான்..

“நீ ஏன் சக்தியை கல்யாணம் பண்ணிக்கிட்ட..? சரண், சங்கீதா சேர்வதற்காக என்று நீ கூறினாலும் என்னால் இதை நம்ப முடியவில்லை..” அவர் கூறியதை கேட்டு அவனது தேகம் வில்லில் பூட்டிய நாண் போல் விறைத்தது..

“உண்மையில் சாரு சொன்னது போல் சக்தி ஒரு முட்டாள் தானோ..? அவளைப் பார்த்தால் எனக்கு அப்படித்தான் தெரிகிறது..”

“தாத்தா..” பேரனின் அதட்டலில் தாத்தாவின் முகத்தில் புன்னகை தோன்றியது..

“சக்தி என் மனைவி.. அவளைப் பத்தி நீங்க இப்படிப் பேசுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.. இனியொரு முறை இப்படிப் பேசாதீங்க..”

“அவளிடம் அப்படி என்ன இருக்கிறது சிவா..? அவளுக்காக நீ என்னையவே எதிர்த்து பேசுகிறாய்..” தாத்தா கோபம் போல் பேரனை பார்த்துக் கூறினார்..

“எனக்குப் பிடித்திருக்கிறது.. போதுமா..?”

“போதும் சிவா.. போதும்..” என்றவர் அவனை ஆரத்தழுவி கொண்டார்.. அவன் புரியாது அவரைப் பார்த்தான்..

“நீ ஏதோ கோபத்தில் சக்தியை திருமணம் செய்திருக்கிறாயோ என்று நினைத்தேன்..”

“சக்தி மீது கோபமா..? எதற்கு..?”

“திடுமென சக்தியை திருமணம் செய்யப் போகிறேன்னு வந்து நின்றாயா.. அவள் ஏதும் அசட்டுத்தனமாக உன்னிடம் நடந்து, அதனால் உன் கோபம் அதிகரித்து.. அதன் விளைவாகப் பழிவாங்க என்று நீ அவளைத் திருமணம் செய்து கொண்டாயோ என்று நினைத்தேன்..”

“நல்ல கற்பனை வளம் தாத்தா.. பேசாம நீங்க கதை எழுத போகலாம்..” என்று அவன் வாய்விட்டுச் சிரித்தான்..

“சிரிக்காதேடா போக்கிரி.. உன் நடவடிக்கை எல்லாம் அப்படித்தானே இருக்கிறது..”

“தாத்தா, சக்தியை மனசுக்குப் பிடித்துத் திருமணம் செய்தேனா.. இல்லை காதலித்துத் திருமணம் செய்தேனா என்று கேட்டால்.. அதற்கு என்னுடைய பதில், தெரியவில்லை தான்.. ஆனால் இந்த ஜென்மத்தில் அவள் தான் எனது மனைவி.. அதை மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்..”

“சக்தி விளையாட்டுப் பிள்ளையாக இருக்கிறாளே..” தாத்தாவிற்குச் சற்றுக் கவலையாக இருந்தது..

“விளையாட்டு பிள்ளை என்பதை விட அவள் மிகவும் நல்ல பெண்.. அது போதும் தாத்தா.. மற்றது எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.. இந்தச் சிவாவுக்கு ஏற்ற சக்தியாய் அவளை மாற்ற வேண்டியது என்னுடைய பொறுப்பு..”

“ரொம்பச் சந்தோசம் சிவா.. நீ சந்தோசமாக வாழ்வதைப் பார்க்கத்தான் என் உடம்பில் உயிர் இருக்கிறது..”

“நிச்சயம் நான் சந்தோசமாக வாழ்வேன் தாத்தா..” என்றவன் புன்னகை முகமாய் அவரிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான்..

அறைக்குச் சென்ற சிவகுரு அங்கே மனைவியைக் காணாது திகைத்தான்.. எப்போதும் அவன் வரும் போது

தொலைக்காட்சியில் தொல்லை கொடுக்கும் தொடர் சத்தமாய் அலறிக் கொண்டிருக்கும்.. அவனது மனைவி அவனைக் கூடக் கண்டு கொள்ளாது தொலைக்காட்சி திரையை வெறித்துப் பார்த்து கொண்டிருப்பாள்.. இன்று இது இரண்டும் நடவாதது கண்டு அவனுக்கு எதையோ இழந்தார் போன்று ஒரு உணர்வு தோன்றியது..

'வர வர உனக்குப் பைத்தியம் முத்திருச்சுடா சிவா..' அவன் தனக்குள் சிரித்தபடி குளியலறைக்குள் நுழைந்தான்..

சிவகுரு இரவு உணவு உண்டு முடித்து அறைக்குத் திரும்பி வரும் வரை சக்திப்ரியாவை ஆளை காணோம்.. அவளைக் காணாதது அவனுள் எரிச்சலை மூட்ட அவன் உறங்க பிடிக்காதவனாய் மடிகணினியில் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.. பனிரெண்டு மணிக்கு அவனது அறை கதவு சத்தம் செய்யாது மெல்ல திறந்தது.. அவன் யாரது என்று நிமிர்ந்து பார்த்தான்.. அவனது மனைவி சக்திப்ரியா தான் பதுங்கி பதுங்கி உள்ளே வந்து கொண்டிருந்தாள்.. கதவை மூடி விட்டு திரும்பியவள் அங்கே இரவு விளக்கு ஒளியில் மடிகணினியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு திகைத்து போய் அப்படியே அசையாது நின்றாள்..

அவன் அவளைப் பார்த்தபடி மடிகணினியை அணைத்து ஓரமாய் வைத்தவன் கையை நீட்டி மின்விளக்கை போட்டான்.. பளீரென்று ஒளிர்ந்த விளக்கு வெளிச்சத்தில் சக்திப்ரியாவுக்கு விழிகள் கூசியது.. அவள் விழிகளை மூடி திறந்தாள்..

"எங்கே போயிட்டு வர்ற..?"

"இங்கே.. தான் தோட்டத்துக்கு.." அவள் திக்கி திணறியபடி பதில் கூறியதை கண்டு அவன் யோசனையாய் பார்த்தான்..

"ஏன் இவ்வளவு நேரம்..?"

"தூக்கம் வரலை.."

"தூக்கம் வரலைன்னா என்ன..? டிவியில் டிராமா பார்க்க வேண்டியது தானே.."

அவனைக் கண்டு பயந்து தான் தான் இங்கே வரவில்லை என்பதைச் சொல்ல முடியாது அவள் திருதிருவென விழித்தபடி

நின்றிருந்தாள்.. அவளது செய்கை அவனுக்குப் புதினமாக இருந்தது..

"சரி வா.. வந்து படு.." என்றவன் மின்விளக்கை அணைத்து விட்டு இரவு விளக்கை போட்டுவிட்டு தானும் படுக்க ஆயத்தமானான்..

அவள் மறுபேச்சு பேசாது படுக்கையின் ஒரு புறம் வந்து ஓரமாய் படுத்து கொண்டாள்.. விட்டால் கீழே விழுந்து விடுவாள் போலும்.. அதைக் கண்டவன் அவளது இடையைச் சுற்றி தனது கரத்தினைக் கொண்டு சென்று அவளைத் தன் பக்கமாய் இழுத்தான்..

"ஐயோ மாமா, நான் எந்தத் தப்பும் பண்ணலை.. என்னை ஒண்ணும் பண்ணிராதீங்க.." என்று அவள் பயத்தில் விழிகளை மூடி கொண்டு அலறினாள்..

"ஏய்.. இங்கே பாருடி.." அவன் அதட்டிய போதும் அவள் கண்களைத் திறக்கவில்லை..

"கண்ணைத் திறக்க போறியா இல்லையா..?" மீண்டும் அவன் அதட்டியதும் அவள் மெல்ல விழிகளைத் திறந்தாள்..

ஆழ்கடல் போன்ற பெண்ணவளின் விழிகளில் அவன் ஆழ்ந்து போகவே விரும்பினான்.. ஆனால் அதில் காதல் இல்லாது கலவரம் இருந்ததைக் கண்டு அவனது புருவங்கள் உயர்ந்தது.. அவன் அவளிடம் கோபம் கொண்டு வீட்டை விட்டு வெளியில் தள்ளிய போது கூட அவளது கண்களில் அவன் மீதான பயத்தைக் கண்டது இல்லை.. அவன் என்ன செய்த போதும், என்ன பேசிய போதும் மறுகணம் அதை மறந்து அவனிடமே மீண்டும் வந்து நிற்கும் வெகுளித்தனத்தை அவன் இதுவரை அவளது விழிகளில் கண்டிருக்கிறான்.. அவளது இந்த அச்சம் அவனது மனதினை ஏதோ செய்தது..

"என்னைப் பார்த்து எதுக்குடி பயப்படுற..?" என்று கேட்டபடி அவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்..

கணவனது அணைப்பில் பெண்ணவளின் பயம் தெளியவில்லை.. மாறாக அவளது அச்சம் விலைவாசி போல் ஏற துவங்கியது.. அதன் விளைவு அவளது தளிர்மேனி மெல்ல நடுங்க

ஆரம்பித்தது.. அதை அணைத்திருந்த அவளது கணவனும் உணர்ந்தான்.. அவன் தனது அணைப்பை தளர்த்தி விட்டு குனிந்து அவளது முகத்தைப் பார்த்தான்..

"எதுக்குடி உடம்பு நடுங்குது..?"

"எனக்குப் பயமாயிருக்கு மாமா.. ப்ளீஸ்.." அவளது அச்சம் இப்போது அவனுள் கோபத்தைத் தோற்றுவித்தது..

"என்னை என்ன காமுகன் என்று நினைத்து விட்டாயா..?" என்று அவன் கோபத்தோடு அவளை உதறித் தள்ளினான்..

அவனது செயலில் அவளின் பயம் இன்னமும் அதிகரித்தது.. அவனைப் பார்த்தபடி பின்னால் நகர்ந்தவள் தன்னுடைய இடத்திற்கு வந்ததும் அங்கிருந்த போர்வையை எடுத்து இழுத்துப் போர்த்திக் கொண்டு தன்னைக் குறுக்கியபடி படுத்து கொண்டாள்.. அவளது செயலில் அவன் தான் மிகவும் காயப்பட்டுப் போனான்..

## 10

சிவகுரு காலையில் எப்போதும் போல் எழும் போது அவனது மனைவியை அருகில் காணவில்லை.. 'என்னடா இது அதிசயமா இருக்கு..? எப்போதும் நான் தானே அவளை எழுப்பி விடுவேன்..' என்று யோசித்தபடி எழுந்தவன் முகம் கழுவி, உடை மாற்றி விட்டு அறையை விட்டு வெளியில் வந்தான்.. தோட்டத்தைச் சுற்றி அவன் ஓடி கொண்டிருக்கும் போது அவனது மனைவி அவனுக்கு எதிரில் நடந்து வந்து கொண்டிருந்தாள்.. திடுமெனக் கணவனை அங்கே கண்டதும் சக்திப்ரியா செய்வதறியாது திகைத்து நின்றாள்.. அவனுக்குமே மனைவியை இங்கே கண்டதும் ஆச்சரியமே..

'பாருடா, கும்பகர்ணி காலையில் எழுந்ததோடு மட்டுமல்லாது வாக்கிங் வேறு வந்திருக்கிறாள்..' என்று நினைத்தவன் அவளை அழுத்தமாய்ப் பார்த்தபடி அவளை நோக்கி வந்தான்.. அவனது ஓட்டப்பயிற்சி இப்போது நடைப்பயிற்சியாக மாறிப் போனது. அவன்து வேக நடை மென்நடையாக மாறிப் போனது..

'மாமா எதுக்கு இப்படிப் பார்க்கிறாங்க..? நாம எதுவும் தப்பு பண்ணிட்டோமா..?' அவள் திகிலுடன் கணவனைப் பார்த்தபடி முன்னேறினாள்..

'முட்டக்கண்ணி, ஆளை முழுங்கிற மாதிரி பார்க்கிறதை பார்..'

அதிகாலை வேளையில் பனியில் நனைந்த ரோஜா பூ போன்று புத்தம் புது மலராய் இருந்த மனைவியைக் கண்டு அவனது மனதில் பெருத்த சலனம் ஏற்பட்டது.. ஒரே அறையில், ஒரே படுக்கையில் இருந்த போது வராத ஒருவித உணர்வு இப்போது எழுந்து அவனை ஆட்டிப்படைத்தது.. அவள் ஒரு பெண், தன் மனைவி என்பதைத் தாண்டி குழந்தை மனம் படைத்த குமரி பெண் என்றே அவன் அவளை இதுவரை நினைத்திருந்தான்.. மனைவியின் உள்ளத்தை ஆட்கொண்ட பிறகே உடலை ஆட்கொள்ள வேண்டும் என்கிற அவனது கொள்கை சிறிது ஆட்டம் காண ஆரம்பித்தது.. இப்போதே அவளை ஆட்கொள்ள வேண்டும் என்கிற வேட்கை அவனுள் தீயாய் பற்றி எரிய ஆரம்பித்தது..

இருவருக்கும் இடையில் இரண்டடி தூரம் என்ற நிலையில் சக்திப்ரியா திகைத்து போய் அப்படியே நின்றாள்.. அவர்களது ஒரு புறம் அலங்கார செடிகள் இருந்த தொட்டிகள் அழகுற அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது.. மறுபுறம் நீச்சல் குளம் இருந்தது.. அவளுக்கு நீச்சல் குளத்தைக் கண்டு பயம்.. அதனால் அவள் ஓரமாகத் தான் அதை வேடிக்கை பார்த்தபடி நடந்து வந்து கொண்டிருந்தாள்.. இப்போது திடுமென ஆஜானுபாகுவாய் கணவன் எதிரில் வந்து நிற்கும் போது அவளுக்கு எந்தப் புறம் செல்வது..? என்று தெரியவில்லை.. எந்தப் பக்கம் சென்றாலும் அவள் அவனை இடித்துக் கொள்ளாது மறுபக்கம் செல்ல முடியாது.. அவள் திகைப்புடன் அவனைப் பார்த்திருந்தாள்.. அவளது திகைப்பு அவனுக்கு இல்லை போலும்.. அவன் வெகுசாதாரணமாய் அவளை நோக்கி அடி மேல் அடி எடுத்து வைத்தான்..

ஒருவர் மூச்சு காற்று ஒருவர் மீது மோதும் நெருக்கத்தில் அவள் அருகே வந்தவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்.. அவளோ பேய்றைந்தார் போன்று அவனையே பார்த்திருந்தாள்.. அவன் தனது கரங்களை அவளது இடையை நோக்கி கொண்டு செல்ல முயன்ற போது அவள் பயத்தில் விழிகளை இறுக மூடி கொண்டாள்.. விழிகள் மூடியிருந்தாலும் அங்கும் இங்கும் நர்த்தனமாடும் அவளது கருவிழிகளையும், துடிக்கும் அவளது

இதழ்களையும் ரசித்துப் பார்த்தபடி அவன் அவளை இடையோடு தூக்கி மறுபக்கம் விட்டான்..

"ஆத்தே.." திடுமெனத் தான் அந்தரத்தில் பறக்கவும் அவள் பயத்தில் கத்தியே விட்டாள்..

அவளை மறுபக்கம் இறக்கி விட்டவன் திரும்பி பார்க்காது சென்றுவிட.. அவள் தான் அ

சிவகுரு முகத்தில் அவனையும் அறியாது புன்னகை தோன்றியது.. அவன் தனது உள்ளங்கைகளை விரித்துப் பார்த்தான்.. பட்டு போன்ற மனைவியின் மேனியின் மென்மை இன்னமும் அவனது வன்மையான கைகளில் மிச்சம் இருப்பது போல் ஒரு தோற்றம் அவனுள்.. அவளின் மென்மையை உணர்ந்தவனுக்குப் பெருமூச்சு எழுந்தது..

"காலையிலேயே ஆளை கொல்கிறாளே.." என்று அவன் தாபமாய் முணுமுணுத்துக் கொண்டான்..

இதை எல்லாம் மேலே தனது அறை பால்கனியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சாருலதாவின் மனதில் ஆத்திரம் எழுந்தது.

'என் வாழ்க்கையை அழிச்சிட்டு நீ மட்டும் சந்தோசமா இருக்கியா..? விட மாட்டேன்டா..' அவள் ஆத்திரத்துடன் முணுமுணுத்து கொண்டாள்.

குளியலறை கதவு திறக்கும் சத்தத்தில் கண்விழித்த சரண் மனைவியை இந்தக் கோலத்தில் காண்போம் என்று கனவில் கூட நினைத்திருக்க மாட்டான்.. சங்கீதாவுமே கணவன் திடுமென எழுவான் என்று எண்ணியிருக்க வில்லை.. ஏனெனில் சரண் எப்போதுமே தாமதமாகத் தான் எழுவது.. அதனாலேயே அவள் அவன் எழும் முன் எழுந்து குளித்து உடை மாற்றி விடுவது வழக்கம்.. எந்த விதத்திலும் அவனது கவனத்தை ஈர்க்க தான் முயல கூடாது என்பதில் அவள் மிகவும் கவனமாக இருந்தாள்.. கணவனைக் காதலாய் தான் தன்பக்கம் இழுக்க வேண்டும்.. காமத்தால் அல்ல என்பதில் அவள் மிகத் தெளிவாக இருந்தாள்..

மனைவியுடனான மனஸ்தாபம் சரணின் அறிவுக்கு எட்டினாலும் அவனது மனதிற்கு அது எட்டவில்லை போலும். பாழும் காதல் மனது அவளை இந்த நிலையில் கண்டதும்

தாறுமாறாகத் துடிக்க ஆரம்பித்தது.. அவளுடன் சுகித்த காதல் இரவுகள் கண்முன்னே காட்சியாய் விரிந்ததில் அவன் படுக்கையை விட்டு எழுந்து அவளை நோக்கி வந்தான்.. அந்த நொடி அவனது மனதினை காதல் மட்டுமே ஆட்சி செய்தது.. சங்கீதா அவனைத் திகைப்புடன் பார்த்திருக்கும் போதே அவன் அவளை இறுக அணைத்திருந்தான்.. அவள் பதிலுக்கு அவனை அணைக்க முடியாது உடல் விறைக்க அமைதியாக நின்றிருந்தாள்.. இதற்கு அவள் ஏதாவது பிரதிபலிப்புக் காட்டினால் நிச்சயம் கணவனிடத்தில் அவமானப்பட வேண்டி இருக்கும் என்று அவளுக்கு உறுதியாகத் தெரியும்.. அதை உறுதி செய்வது போல் சரணின் குரல் ஒலித்தது..

"இதற்கு எவ்வளவு பணம் வேண்டும்..?" அவளது காதோரம் சரணின் குரல் சீறலாய் ஒலித்தது.. அந்த நொடி அவள் உயிரோடு மரணித்துப் போனாள்..

அவளது சிலை போன்ற உணர்வற்ற தன்மையைக் கண்ட சரண் தன்னைத் தானே கடிந்து கொண்டான்.. அதே நேரம் மனைவியைக் குதறி எடுக்கவும் அவன் தவறவில்லை.. அதாவது தன் மீதிருந்த கோபத்தை அவளிடம் காட்டினான்..

"ச்சே.." என்றபடி அவன் அவளை உதறி தள்ளிவிட்டு செல்ல.. அவனது உதாசீனத்தில் அவளது காதல் மனம் விழித்துக் கொண்டது.. கணவனது காதலை உயிரோடு கொன்றவளுக்கு இது தேவையான ஒன்று தானே.. அவனது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவள்,

"உங்க காதல் வேண்டும் சரண்.." என்று காதலோடு அவனது காதலை யாசித்தாள்..

"நம்பும்படியாக இல்லையே.." அவளைப் பார்த்து இகழ்ச்சியாய் கூறியவன் அறையை விட்டு வெளியேறி விட்டான்.. அவள் அவன் செல்வதைக் கண்ணீரோடு பார்த்தபடி நின்றிருந்தாள்.

வாசலுக்கு வந்த சரண் அங்குச் சுற்றும் முற்றும் பார்த்தபடி பயந்து பயந்து வந்து கொண்டிருந்த சக்திப்ரியாவை கண்டு அவளை நோக்கி சென்றான்..

"அண்ணி, யாரை தேடுறீங்க..?"

“மாமா, அண்ணின்னு கூப்பிடுறதை நிறுத்துங்க.. முன்னே மாதிரி சக்தின்னே கூப்பிடுங்க..” அவள் அக்கா கணவனிடம் செல்லமாய்க் கோபித்துக் கொண்டாள்..

“அது மட்டும் முடியாது அண்ணி.. அண்ணன் மனைவிக்கு என்று ஒரு மரியாதை இருக்கிறது..”

“என்னமோ போங்க மாமா..” என்றவள் உள்ளே செல்ல போனாள்..

“ஆமா, நீங்க யாரை தேடிட்டு இருந்தீங்க.. பார்த்தால் பயந்த மாதிரி இருக்கே..”

“ஆமா மாமா, காலங்கார்த்தால ஒரு பூதம் வந்து என்னைப் பயமுறுத்திருச்சு..” அவள் விழிகளை உருட்டி கொண்டு சொல்ல.. அப்போது அவளுக்குப் பின்னே வந்து நின்ற சிவகுருவை கண்டதும் சரணுக்கு எல்லாம் விளங்கி போனது..

“அண்ணி, அந்தப் பூதம் இது தானா..? என்று திரும்பி பார்த்து சொல்லுங்க..” அவன் நமட்டு சிரிப்புடன் கேட்க..

அவன் கூறியதை கேட்டு வெகுளியாய் திரும்பி பார்த்த சக்திப்ரியா அங்குக் கணவனைக் கண்டதும் உண்மையில் பேயை கண்டது போல் அரண்டு போய் ஓடி விட்டாள்.. அவளது செயலை கண்டு அண்ணன், தம்பி இருவரது முகத்திலும் புன்னகை அரும்பியது..

“ஆனாலும் அண்ணியை இப்படிப் பயமுறுத்தி வைக்கக் கூடாதுண்ணா..” சரணுக்கு இன்னும் சிரிப்பை கட்டுப்படுத்த முடியவில்லை..

“டேய், நீ வேற.. போடா..” அவனது தோளில் செல்லமாய் அடித்த சிவகுரு உள்ளே சென்றுவிட்டான்.. அண்ணன் முகத்தில் தோன்றிய வெட்கம் கண்டு அவனுக்குத் திருப்தியாக இருந்தது.. சக்திப்ரியாவால் அண்ணனது வாழ்க்கை வசந்தமாக மாறிவிடும் என்கிற நம்பிக்கை அவனுக்கு வந்தது..

அடுத்த வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது.. ஓயாது பேசும் சக்திப்ரியா இப்போது எல்லாம் பேசுவதே இல்லை.. அதுவே சிவகுருவுக்கு எதையோ இழந்தார் போன்ற உணர்வினை தோற்றுவித்தது.. அவளது அமைதி ஒரு சமயம் அவனுக்குக்

கஷ்டமாக இருந்தது.. மறு சமயம் அவனுள் அப்படியொரு கோபத்தைக் கிளப்பியது.. ஆனால் அவன் அவளிடம் கோபத்தைக் காட்டினால் அவள் இன்னமும் நத்தை போல் தனது கூட்டிற்குள் சுருங்கி கொண்டு விடுவாள்.. அதனாலேயே அவன் தனது கோபத்தினைக் கட்டுப்படுத்திக் கொண்டான்..

அப்போது கூட அவன் மனைவியின் பயத்திற்கான காரணத்தை உணரவில்லை.. தன்னிடம் நன்றாகப் பேசி, பழகி கொண்டிருந்தவள் திடுமெனப் பயந்து ஒடுங்குவது எதனால்..? என்று அவன் சிந்திக்க மறந்தான்.. சாருலதா விசயத்தில் அவன் காட்டிய கடுமை மனைவியிடத்தில் அவனை வில்லனை போல் காட்டியிருந்ததை அவன் உணர தவறிப் போனான்.. அது தான் அவன் செய்த பிழை..

அன்றிரவு சிவகுரு வீட்டிற்கு வந்த போது சக்திப்ரியா தொலைக்காட்சி தொடரில் மூழ்கி போயிருந்தாள்.. ஏனோ அந்தக் கணம் அவன் அவ்வளவு நிம்மதியாக உணர்ந்தான்.. அவள் அவனிடம் பேசாவிட்டாலும் பரவாயில்லை.. அவள் அங்கே இருப்பதே அவனுக்குப் போதுமானதாக இருந்தது.. நேரே அவளை நோக்கி சென்றவன் அவள் அருகில் அமர்ந்தான்.. அவன் வருவதை உணர்ந்து அவனை ஏறிட்டு பார்த்தவள் அவன் திடுமெனத் தன்னருகில் அமர்ந்ததும் செய்வதறியாது விழித்தாள்.. பின்பு மெல்ல விலகி அமர முற்பட்டாள்.. முற்பட்டாள் அவ்வளவே.. ஆனால் அவளால் அதைச் செயல்படுத்த முடியவில்லை.. ஏனெனில் சிவகுரு ஒற்றைக் கையால் அவளது இடையைப் பிடித்து அவளைத் தடுத்திருந்தான்.. அவனது கையில் அவள் நெளிந்தபடி அமர்ந்திருந்தாள்..

“இந்தா எடுத்துக்கோ..” என்றபடி அவன் தனது கையை அவள் முன் நீட்ட..

“என்ன..?” என்று அவள் அவனைப் பார்த்து கேட்டாள்..

“என் கண்ணைப் பார்க்காதே.. என் கையைப் பார்.. புரியும்..” அவன் சொன்னதும் அவள் அவனது கையைப் பார்த்தாள்.. அவனது உள்ளங்கையில் அவளுக்குப் பிடித்த சாக்லேட் இருந்தது..

“ஐய் சாக்லேட்..” என்று தன்னையும் அறியாது கூவியவள் பின்பு தனது வாயை இறுக மூடி கொண்டாள்..

அவளது செயலை அவன் தவறாக எண்ணி கொண்டான்.. அன்று அவள் கொடுத்த சாக்லேட்டை தான் வீசியெறிந்து விட்டு சென்றதை எண்ணி தான் அவள் வாங்க மறுக்கிறாள் என்று..

"அன்னைக்கு நான் பண்ணியது தப்பு தான்.. நீ கொடுத்த சாக்லேட்டை வீசியிருக்கக் கூடாது சாரி.." என்று மன்னிப்பு கேட்டவனை அவள் வியப்பாய் பார்த்தாள்..

'ஏன் மாமா, நீங்க நல்லவங்களா இல்லாம போயிட்டீங்க..?' அவளது மனம் ஊமையாக அரற்றியது.. தன்னுடைய கணவன் நல்லவனாக இருக்க வேண்டும்.. நாலு பேரை வாழ வைக்கும் வள்ளலாக இருக்க வேண்டும் என்று தான் ஒரு பெண் விரும்புவாள்.. இப்படி ஒருவரின் வாழ்க்கையை அழிக்கும் குரூர குணத்துடன் இருப்பதை எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள்.. மற்ற பெண்களைப் போல் அவளுக்குக் கணவனை வெறுக்கத் தெரியவில்லை.. அவன் மீது கோபம் கொள்ளத் தெரியவில்லை.. மாறாக அவன் மீது அச்சம் கொண்டாள்.. அவளுக்குத் தெரிந்தது அது மட்டுமே..

"என்னை மன்னிச்சிட்டேன்னா சாக்லேட்டை எடுத்துக்கோ.."

கணவன் அவனது நிலையை விட்டு இறங்கி வந்து தன்னிடம் மன்னிப்பு கேட்டதே அதிசயம்.. இதற்கு மேல் அவனைக் கீழிறக்க பெண்ணவளால் முடியவில்லை.. அதனால் மௌனமாகச் சாக்லேட்டை எடுத்து கொண்டாள்.. அதைக் கண்டு அவனது முகம் பிரகாசமானது.

"தேங்க்ஸ்.." என்றவனைப் பார்த்தவள் ஒன்றும் பேசாது எழுந்து சென்றாள்.. இப்போது அவளது மௌனம் அவனைப் பாதிக்கவில்லை.. மாறாக அவன் புன்னகையுடன் அவளைப் பார்த்திருந்தான்..

சிவகுரு குளித்து முடித்துவிட்டு வரும் போது மனைவியை அறையில் காணவில்லை.. ஆனால் அவன் கொடுத்த சாக்லேட் மட்டும் மேசையில் ஒய்யாரமாய் வீற்றியிருந்தது.. அது பிரிக்கப்படாமல் இருப்பதைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது.. அதே கோபத்துடன் அவன் விருட்டென்று அறையை விட்டு வெளியேறினான்.. உணவு உண்ணும் போது பரிமாற வந்த மனைவியைத் தடுத்து விட்டு அவனே பரிமாறிக் கொண்டான்..

அவளோ அவனது செய்கைக்கான அர்த்தம் தெரியாது நின்றிருந்தாள்..

சக்திப்ரியா தூங்கிய பின்பே சிவகுரு அறைக்குள் வந்தான்.. இன்னமும் சாக்லேட் அப்படியே இருப்பதைக் கண்டு அவனது கோபம் அதிகரித்தது.. தூங்கி கொண்டிருக்கும் மனைவியை எழுப்பி நாலு கேள்வி நறுக்கென்று கேட்போமா..? என்றுகூட அவனுக்குத் தோன்றியது.. விட்டால் கேட்டிருப்பான் தான்.. ஆனால் அவளை எண்ணி பார்த்தவன் தனது கோபத்தினைக் கட்டுப்படுத்திக் கொண்டு படுத்துவிட்டான்..

நள்ளிரவில் ஏதோ சத்தம் கேட்டு சிவகுரு விழித்துப் பார்த்தான்.. சக்திப்ரியா சாக்லேட்டை எடுத்து பிரித்தவள் அவனைத் திரும்பி பார்த்தாள்.. அவள் பார்ப்பதை உணர்ந்து அவன் வேகமாய்க் கண்களை மூடி கொண்டான்.. அவன் தூங்குவதைக் கண்டு அவள் நிம்மதி பெருமூச்சு விட்டபடி அவசரமாகச் சாக்லேட்டை ஒரேடியாய் தனது வாயில் திணித்துக் கொண்டாள்.. இதை எல்லாம் விழிகளைச் சுருக்கியபடி பார்த்திருந்தான் சிவகுரு.. சாக்லேட்டை உதப்பிக் கொண்டு உண்டு கொண்டிருந்தவளை கண்டு அவனது உதடுகளில் தானாகப் புன்னகை அரும்பியது.. 'திருட்டுப்பூனை..' அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

ஒரேடியாய் சாக்லேட்டை வாய்க்குள் திணித்ததால் அவளுக்கு விக்கல் எடுத்தது.. அவசரத்துக்கு நீர் எடுத்து பருகாது விக்கி கொண்டிருந்தவளை கண்டு அவன் தான் எழுந்து வந்து நீரை எடுத்து பருக கொடுத்தான்.. அவளும் அவன் எழுந்ததை உணராது அவன் கொடுத்த நீரை வாங்கி வேக வேகமாய்ப் பருகினாள்.. நீரை பருகி முடித்துக் கண்ணாடி குவளையை அவனிடம் கொடுக்கும் போது தான் கணவன் எழுந்திருப்பதை அவள் உணர்ந்தாள்.. அவள் மாட்டி கொண்ட தினுசில் திருதிருவென முழித்தாள்..

சக்திப்ரியா வாயில் இருந்த சாக்லேட் அவள் அருந்திய நீர் துளிகளோடு சேர்த்து அவளது வாயோரம் ஒழுகி இருந்தது.. இதில் அவள் சிறு மழலை போல் திருதிருவென்று விழித்தது அத்தனை அழகாய் இருந்தது.. அவளது அழகில் ஈர்க்கப்பட்டவனின் பார்வை மெல்ல கணவன் பார்வையாக மாற ஆரம்பித்தது.. அவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்.. அவளோ மூளை மரத்து போனவளாய் சிலையாய் அமர்ந்திருந்தாள்.. அதைத் தனக்குச் சாதகமாய்ப்

பயன்படுத்திக் கொண்டவன் அவளது இதழோடு தனது இதழை பொருத்தினான்.. பூவை வருடும் தென்றல் காற்று போன்று மென்மையாய் முத்தமிட்டவன் அடுத்த நொடி அவளிடம் இருந்து விலகியிருந்தான்.. இப்போது அவனது வாயில் சாக்லேட் மணம் கமகமத்தது.. என்ன நடந்தது..? என்று அவளிடம் கேட்டால் சத்தியமாக அவளுக்குத் தெரியாது.. அவள் பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள்..

"தூக்கம் வரலையா..?" அவளது தோள்களைப் பற்றி அவன் உலுக்கவும் தான் அவள் சுயவுணர்வுக்கு வந்தாள்..

"ஆங்.. என்ன கேட்டீங்க..?"

"தூங்கலையான்னு கேட்டேன்.." என்றவனது பார்வையில் தெரிந்த வித்தியாசத்தில் அரண்டு போனவளாய்,

"இதோ.." என்றவள் போர்வையைத் தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்து விட்டாள்.. அவன் சிரித்தபடி மறுபக்கம் வந்து படுத்தான்..

அவனது பார்வையின் வித்தியாசம் பற்றி அவள் அதற்கு மேல் சிந்திக்கவில்லை.. சிந்தித்து இருந்தால் அவனது மனதினை அவள் உணர்ந்து இருப்பாளோ..!!!

இன்னும் பத்து நாட்களில் தாத்தாவிற்கு என்பது வயது பூர்த்தி ஆகிறது என்பதைக் கேள்விப்பட்ட சக்திப்ரியா அவரது பிறந்தநாளை பெரிதாகக் கொண்டாட திட்டமிட்டாள்.. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணி தனது அக்கா சங்கீதாவை தன்னுடன் சேர்த்து கொண்டாள்.. இருவரும் இணைந்து விருந்தினரை அழைப்பதில் இருந்து, உணவு, அலங்காரம், கேக் வரை தாங்கள் செய்ய வேண்டியதை ஒவ்வொன்றாய் யோசித்து ஞாபகம் வைத்து எழுதி வைத்து கொண்டனர்..

இந்த விசயத்தை உடனே கணவனிடம் பகிர்ந்து கொள்ள எண்ணி சக்திப்ரியா சிவகுருவுக்கு அழைத்தாள்.. அப்போது அவன் அலுவலகத்தில் முக்கியக் கூட்டத்தில் பேசி கொண்டிருந்தான்.. அந்த நேரம் அவனது அலைப்பேசி அதிர்ந்தது.. அதை எடுத்து பார்த்தவன் இனிமையாக அதிர்ந்தான்.. வெகு நாட்கள் கழித்து மனைவி அழைப்பு கண்டு அவன் சந்தோசம் அடைந்தான்..

“எக்ஸ்க்யூஸ் மி..” என்றவன் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியில் வந்ததும் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்து;

“சக்தி..” என்று பரவசத்துடன் அழைக்க.. அவனது பரவச குரல் அவளை ஏதோ செய்தது.. இதுவரை அவள் உணராத உணர்விது..

“உனக்கு இப்பத்தான் எனக்கு ஃபோன் பண்ண தோணுச்சா..?” அவனது ஏக்கமான குரல் அவளது நெஞ்சை போட்டுப் பிசைந்தது..

காதலித்துத் திருமணம் புரிந்தால் தான் காதலை உணர முடியும் என்று யார் சொன்னது..? காலத்தின் கட்டாயத்தில் நடந்த திருமணமாக இருந்தாலும் அவர்களது மனதில் காதல் வலுக்கட்டாயமாகப் புகுந்து அவர்களை ஆட்டுவித்தது.. என்ன ஒன்று, அதை இருவருமே உணர்ந்து கொள்ளவில்லை..

“அது.. வந்து.. இல்லை.. மாமா..” என்று திக்கியவளை கண்டு ‘போச்சுடா, தந்தியடிக்க ஆரம்பித்து விட்டாள்..’ என்று நினைத்தவன்,

“அதான் வந்தாச்சுல்ல.. என்ன விசயம்னு சொல்லு..?” ஆர்வக்கோளாறில் அழைப்பை எடுத்தவளுக்கு எப்படி ஆரம்பிப்பது..? என்று தெரியவில்லை..

“சக்தி, வாயை திறந்து பேசு.. உள்ளே மீட்டிங் போயிக்கிட்டு இருக்கு.. உனக்காக எல்லாத்தையும் விட்டுட்டு பைத்தியக்காரன் மாதிரி வெளியில் வந்து நின்னுக்கிட்டு இருக்கேன்.. ப்ளீஸ்டி..” அவனது கோபம் எல்லாம் அவளது வெகுளித்தனத்தில் காணாமல் போயிருந்தது..

“வர்ற ஆறாம் தேதி தாத்தாவோட எண்பதாவது பிறந்தாள் வருது..”

“ஓ.. அது.. தான் தெரியுமே..” என்றவன் சற்று ஆசுவாசமானான்..

“எண்பதாவது பிறந்தாள் ரொம்ப விசேசமானது..” என்றவள் தனது திட்டத்தைப் பற்றி உற்சாகமாய்ப் பேசலானாள்..

அவனுக்குக் கூட்டத்திற்கு நேரமாகி விட்ட போதும் அவளுக்காக அவன் தனது நேரத்தை ஒதுக்கி வைத்தான்.. அவள்

பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவன் கலாரசிகனாகி போனான்.. மொத்தத்தில் அவள் அவனைப் பைத்தியம் பிடிக்க வைத்திருந்தாள்..

அன்று சிவகுரு அலுவலகம் முடிந்து வந்த போது சக்திப்ரியா உற்சாகமாய் அவனை வரவேற்றாள்.. அவளது புன்னகை முகம் அவனது சோர்வை எல்லாம் விரட்டி விட்டது..

"இந்தா உனக்குப் பிடிச்ச வெங்காயச் சமோசா.." என்றவன் கையிலிருந்த பையை அவளிடம் நீட்டினான்.. அதை வாங்கிக் கொண்டவளுக்குத் தந்தையின் ஞாபகத்தில் கண்களில் கரை கட்டி நின்றது..

"உனக்குச் சமோசா பிடிக்கும் தானே..?"

"ம்..." அவள் தலையை உருட்டினாள்..

"பிறகு எதுக்குக் கண் கலங்குற..?"

"எனக்கு.."

"உனக்கு..?"

"அப்பா ஞாபகம் வந்திருச்சு.." அதைக் கேட்டு அவன் கல்லாய்ச் சமைந்தான்.. அவனது உணர்வினை அறியாது அவள் பேசி கொண்டே போனாள்..

## 11

"அப்பாவும் இப்படித்தான் சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுத்துட்டே இருப்பாங்க.. எனக்கு எங்கப்பாவை ரொம்பப் பிடிக்கும்.." அவளது வார்த்தைகளில் உணர்வு பெற்றவன் அவளைப் பார்த்தான்..

"என்னை உன் அப்பாவா நினைச்சுக்கோ சக்தி.." அவனது விழிகளிலும், வார்த்தைகளிலும் கனிவு வந்தது.. அதைக் கேட்டு அவள் கண்ணீரை மறந்து களுக்கென்று சிரித்தாள்..

"கணவர் எப்படி அப்பாவாக முடியும்..?"

"ஏன் முடியாது..?" அவள் சிரிக்கவும் தான் அவனுக்கு மனம் லேசானது..

“அதெப்படி முடியும்..?” அவள் தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்தபடி கேட்டாள்..

“ஏன் முடியாது..?” என்றவன் அவளது முக வடிவை ஒற்றை விரலால் அளவெடுத்தபடி,

“அழகான உன்னைப் பார்க்கும் போது எல்லாம் என் மனசு கணவனாய் தடுமாறத் தான் செய்யுது.. ஆனால் உன்னுடைய குழந்தைத்தனத்தைக் கண்டு என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிறேன்.. இப்போ நான் உனக்கு யார்..?”

அவனது கேள்வியில் அவள் பேந்த பேந்தவென்று விழித்தாள்.. அதைக் கண்டு வாய்விட்டு சிரித்தவன் தனது பர்சை எடுத்து அதிலிருந்து கடன் அட்டையை உருவி எடுத்தவன் அதை மனைவியின் கையில் திணித்தான்.. அவள் புரியாது அவனைப் பார்க்க..

“தாத்தாவோட பிறந்தநாள் விழாவுக்கான செலவுக்கு வச்சுக்கோ..”

“ம்,ம்..” தலையை ஆட்டியவளின் தலைமீது கை வைத்து,

“தலையாட்டி பொம்மை..” என்று கூறியவன் சிரித்தபடி சென்றுவிட்டான்..

‘பொம்மையா..? நானா..?’ அவள் திகைப்பாய் எண்ணியபடி நின்றிருந்தாள்..

**தா**த்தாவின் பிறந்தநாள் காலையில் இருந்தே களை கட்ட ஆரம்பித்து விட்டது.. குணசேகரன், சுந்தரி இருவரும் தங்களது மனஸ்தாபத்தை மறந்து பெரியவருக்காக இந்தக் கொண்டாட்டத்தில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டனர்.. என்ன அதிசயம்..! சாருலதா கூட அமைதியாக அங்கு வந்து நின்றாள்.. இந்த ஒற்றுமைக்குக் காரணம் சக்திப்ரியா தான்.. அவள் தான் எல்லோரையும் வற்புறுத்தி வரவழைத்து இருந்தாள்.. சரணும், சங்கீதாவுடன் இணைந்து நின்றான்.. எல்லாம் தாத்தாவிற்காகத் தான்.. இன்று ஒரு நாள் அவரது மனம் கோணாதவாறு நடக்க விரும்பினான்.. சங்கீதா சந்தோசத்துடன் கணவனுடனே சுற்றி கொண்டிருந்தாள்.. சிவகுரு மட்டும் ஆளை காணோம்.. அவன் தனக்கு முக்கியவேலை இருப்பதாகச் சொல்லியவன், மாலையில்

விழாவிற்கு வருவதாகக் கூறி விட்டு அலுவலகம் சென்று விட்டான்..

அதற்காக சக்திப்ரியா சண்டை போட்டு ஆர்ப்பாட்டம் எல்லாம் பண்ணவில்லை.. மாறாக, "நீங்க போங்க மாமா.. நாங்க பார்த்துக்கிறோம்.." என்று இன்முகத்துடன் அவனை வழியனுப்பி வைத்தாள்.. அவன் தான் அவளை முறைத்துக் கொண்டு போனான்..

'கொஞ்சமாவது நானில்லையே என்கிற வருத்தம் இருக்கிறதா..? சந்தோசமா வழியனுப்பி வைக்கிறதை பார்... இவளை எல்லாம்..' அவன் கோபத்தில் பற்களைக் கடித்தபடி காரை விருட்டென்று கிளப்பிக் கொண்டு சென்றான்..

மாலையில் சிவகுரு வீடு திரும்பிய போது வீடு திருவிழா கோலம் பூண்டியிருந்தது.. மனைவியின் ஏற்பாட்டைக் கண்டு அவன் மனதில் மெச்சியபடி தங்களது அறைக்குச் சென்றான்.. அங்கு அழகு தேவதையாய் தயாராகி இருந்த மனைவியைக் கண்டு அவனது விழிகளில் அவனையும் அறியாது மையல் எட்டிப்பார்த்தது..

"வந்துட்டீங்களா..?" என்றபடி திரும்பி பார்த்த சக்திப்ரியா கணவனது பார்வை மாற்றத்தை கண்டு முன்ஜாக்கிரதையாக,

"உங்களுக்கு வேண்டிய டிரெஸ் எல்லாம் எடுத்து வச்சியிருக்கேன்.. கிளம்பி வாங்க.." என்றவள் அங்கிருந்து தப்பிக்க முயல.. ஒரே எட்டில் அவளது கையை எட்டிப்பிடித்தவன்,

"எங்கே தப்பிச்சு போற..?" என்க..

"ஃபங்க்சனுக்கு டைம்மாச்சு மாமா.." அவனது அருகாமையில் அவள் திணறினாள்..

"ஒரு நிமிசம்.." என்றவன் அவளை அணைப்பது போல் அருகில் வர.. அவள் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்..

"உனக்கு எப்பவும் ஒரே நினைப்பு தானா..?" என்று கேட்டு அவளை மேலும் அதிர வைத்தவன் தனது கையிலிருந்த வைர கழுத்தணியை அவளது சங்கு கழுத்தில் மாட்டி விட்டான்.. அவனது செயலில் அவள் பெருமூச்சுடன் அவனைப் பார்த்தாள்..

மற்றொரு கையில் இருந்த நகைப்பெட்டியை அவளிடம் கொடுத்தவன், "இதில் இருப்பதை மாற்றிவிட்டு போ.." என்றுவிட்டு செல்ல..

அவனது செயலில் சக்திப்ரியாவின் இதழ்கள் தானாக விரிந்தது... அவள் மந்தகாச புன்னகையுடன் அதிலிருந்த கம்மல், வளையல், மோதிரம் எல்லாவற்றையும் அணிந்து கொண்டாள்.. அதை அவள் கண்ணாடி முன் நின்று அழகு கூடப் பார்க்கவில்லை.. அப்படியொரு எண்ணம் அவளுக்குத் தோன்றவும் இல்லை..

கீழே இறங்கி வந்த சக்திப்ரியாவை கண்ட சாருலதாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.. அதிலும் அவள் அணிந்திருந்த வைர அணிகலன்களின் மதிப்பு அவளது ஆத்திரத்தில் பெட்ரோலை ஊற்றியது..

'அன்னக்காவடிக்கு வந்த வாழ்க்கையைப் பார்..' என்று அவள் மனதிற்குள் பொருமினாள்.. அந்த நொடி சிவகுருவையும், சக்திப்ரியாவையும் ஒருங்கே மட்டம் தட்ட அவளது மனதில் லட்டு போன்று அழகான திட்டம் ஒன்று தோன்றியது.. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்..

எல்லோருக்கும் சிற்றுண்டி எடுத்து வைத்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்ட சிவகுரு விழா நடக்கும் இடத்திற்குச் செல்லாது நேரே அவளை நோக்கி வந்தான்.. அவள் அருகில் வந்ததும் பின்பக்கம் இருந்து அவள் புறம் குனிந்தவன் அவளது காதருகில் ரகசியமாய்,

"ரொம்ப அழகாயிருக்கடி.." என்க..

"நான் அவ்வளவு அழகா மாமா..?" அவள் விழிகளை விரித்தபடி அறியாமையுடன் கேட்க..

"நீ அழகு இல்லை.. நான் வாங்கிக் கொடுத்த ஜுவெல்ஸ் தான் அழகாயிருக்கு.. அதோடு சேர்த்து நீயும் கொஞ்சம் அழகா இருக்க.." என்று அவன் நமட்டு சிரிப்புடன் கூற..

"ஓ.. நான் கண்ணாடி பார்க்கலையே.." என்று அவள் வருத்தப்பட..

அவன் அவளைத் திருப்பித் தன்னைப் பார்க்கும்படி நிறுத்தி வைத்தவன் அவளது விழிகளோடு விழி கலந்து, "என் கண்களைப் பார்.. லுக் அட் மை ஐஸ்.." என்க.. அவள் அவனது விழி வீச்சில் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவள் போல் அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்..

"என் கண்ணைப் பார்.. நீ எவ்வளவு அழகுன்னு தெரியும்.." என்று கூறியவனின் மயக்கும் குரலில் அவள் மயங்கியே போனாள்..

இதை எல்லாம் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சாருலதாவின் மனதில் பொறாமை தீ பற்றிக் கொண்டது.. இதுவரை அவளிடம் கோபம் மட்டும் தான் இருந்தது.. முதன்முறையாக அவளுள் பொறாமை எட்டிப்பார்த்தது.. தான் இருக்கும் இடத்தில் சக்திப்ரியா இருப்பதைக் கண்டு அவளுக்கு அத்தனை ஆத்திரமாக வந்தது..

ஆறு மணியில் இருந்து விருந்தினர்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர்.. ராணியும், ஞானமும் வந்திருந்தனர்.. அக்கா, தங்கை இருவரும் சந்தோசமாக விழாவில் கலந்து கொள்வதைக் கண்டு இருவரது மனதும் நிறைந்து போனது..

காலையில் கோவிலுக்குப் போய் உற்சாகமாய் ஆரம்பித்த தாத்தாவின் பிறந்தநாள் மாலையில் கேக் வெட்டி ஆர்ப்பாட்டத்துடன் இனிதே முடிவுற்றது.. தாத்தாவுக்கும் ரொம்பச் சந்தோசமாக இருந்தது.. அதிலும் சிவகுரு விழாவில் கலந்து கொண்டது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.. அவன் குடும்பத்தினரோடு அவ்வளவு சீக்கிரம் இணங்கி வரமாட்டான்.. இப்போது மனைவிக்காக அவன் தன்னை மாற்றிக் கொண்டது கண்டு அவருள் பெரும் வியப்பு..

'பயல், காதல் இல்லை.. பிடிச்சிருக்கான்னு தெரியலைன்னு சொல்லி சொல்லியே இப்படிப் பொண்டாட்டிகிட்ட தலைக்குப்புற விழுந்துட்டானே..' அவர் மனதில் பேரனை கேலி செய்தாலும் அவனது மகிழ்ச்சி கண்டு நிறைவாக உணர்ந்தாள்..

எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தால் சாருலதாவிற்குப் பிடிக்காதே.. அதனால் சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தாள்.. அப்போது சக்திப்ரியா கையில் குளிர்பானம் அடங்கிய தட்டை ஏந்தியபடி வந்து கொண்டிருந்தாள்.. அவள் அருகே புன்னகையுடன சென்ற சாருலதா சக்திப்ரியாவின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு விருந்தினரை பார்த்து புன்னகைக்க.. அதைக் கண்டு துணுக்குற்ற சிவகுரு நேரே மனைவியின் அருகே வந்தான்.. சாருலதா ஏதோ செய்யப் போகிறாள் என்பதை ஊகித்தவனாய் அவன் மனைவி அருகில் பாதுகாப்பாய் நின்று கொண்டான்.. அவனைக் கண்டு எள்ளலாய் புன்னகைத்த சாருலதா,

"தி கிரேட் பிசினஸ்மேன் சிவகுருவின் மனைவி சக்திப்ரியா பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியாத் ஒரு ரகசியத்தை இப்போது நான் சொல்ல போகிறேன்.." என்று பீடிகையோடு நிறுத்த.. சக்திப்ரியா திகைத்துப் போய்ச் சாருலதாவை பார்த்தாள்..

"என் மனைவியைப் பற்றி நீ ஒண்ணும் சொல்ல தேவையில்லை.." அவன் அடிக்குரலில் உறுமினான்.. அதற்கு எல்லாம் சாருலதா பயப்படுவாளா என்ன..!

"புத்திசாலி சிவகுருவுக்கு அடிமுட்டாளாய் மனைவி அமைந்திருக்கிறது.." சாருலதா கூறியதை கேட்டு எல்லோரும் ஆச்சரியத்துடன் சிவகுருவை பார்த்தனர்.. அவனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும்.. எல்லாமே நேர்த்தியுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவன்.. அப்படிப்பட்டவன் எப்படி மனைவி விசயத்தில் சறுக்கினான்..? எல்லோர் மனதிலும் ஒரே மாதிரியான கேள்வி எழுந்தது..

சிவகுரு ஆத்திரத்தில் பல்லை கடித்தான்.. சக்திப்ரியாவுக்கு அவமானத்தில் பூமிக்குள் புதையுண்டு போக மாட்டோமோ என்று இருந்தது.. அவள் உதட்டை கடித்தபடி, தலையைக் குனிந்து கொண்டு கண்ணீரோடு நின்றிருந்தாள்..

சாருலதா தனது கையிலிருந்த காகிதத்தைக் காட்டி, "இது தான் அம்மணியோட ஃபைனல் மார்க் சீட்.. பத்துப் பாடத்தில் ஃபெயில்.." என்று கூறியவள் கேலியாய் சிரித்தாள்.. அதைக் கண்டு எல்லோரும் நக்கலாய் சக்திப்ரியாவை பார்த்து சிரித்தனர்.. தர்த்தா, சரண், சங்கீதா, ராணி ஞானம் எல்லோரும் திகைத்து போய் நின்றிருந்தனர்..

"ஸ்டாப் இட்.." சிவகுரு எல்லோரையும் பார்த்து உரக்க கத்தினான்.. அதில் எல்லோரும் திகைத்து போய் அவனைப் பார்த்தனர்.. அவன் மனைவியைத் தோளோடு சேர்த்து அணைத்தபடி,

"அதுக்கு என்ன இப்போ..? படிப்பு இல்லைன்னா என்ன..? அவளுக்கும் சேர்த்து நான் படிச்சிருக்கேன்.. வாழ்க்கைக்குப் படிப்பு தேவையில்லை.. நல்ல குணம் தான் தேவை.. என்னுடைய மனைவி தேவதை.. இந்த மாதிரி ஒரு தேவதை பெண் யாருக்கு எல்லாம் மனைவியாய்க் கிடைச்சிருக்கு..? உங்க மனசாட்சியைக் கேட்டுட்டு

கையைத் தூக்குங்க..” அதைக் கேட்டு எல்லோருமே தலைகுனிந்தனர்.. யாருமே கையைத் தூக்கவில்லை.. எல்லோருடைய மனைவியும் தத்தம் கணவன்மாரை முறைத்தனர்..

“என் மனைவி எனக்குக் குழந்தை மாதிரி.. அவளைப் போல் நல்லவளை எங்கும் காண முடியாது.. நானாக விரும்பித்தான் அவளைத் திருமணம் செய்தேன்.. ஒரு சிலரை போல் கீழ்த்தரமாக என்னை மயக்கி வளைத்து போட அவள் நினைக்கவில்லை..” என்றவனின் பார்வை சாருலதாவை துளைத்தெடுத்தது.. அதைக் கேட்டு அவளது முகம் அவமானத்தில் கன்றிப் போய்விட்டது..

சக்திப்ரியா கணவனை ஆச்சரியத்துடன் பார்த்திருந்தாள்.. தாத்தா, சரண், சங்கீதா, ராணி, ஞானம் எல்லோரும் மகிழ்ந்து போயினர்..

“வெல்செட் மாமா..” என்றபடி கைத்தட்டி ஆர்ப்பரித்தாள் சங்கீதா.. அவளுடன் சேர்ந்து சரணும் கைத்தட்டி விசிலடிக்க.. விருந்தினர்களும் கைத்தட்டி சிவகுருவின் பேச்சை ஆமோதித்தனர்..

சிவகுருவையும், சக்திப்ரியாவையும் அவமானப்படுத்த நினைத்த சாருலதா தான் இப்போது அவமானப்பட்டு நின்றாள்..

“சாரு, வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்க மாட்டியா..?” குணசேகரனும், சுந்தரியும் அவளை அதட்டினர்..

விழா முடிந்து அனைவரும் சென்றதும் முதல் வேலையாகச் சிவகுரு குணசேரனிடம், “நீங்கள் தனியே போய்விட்டால் நன்றாக இருக்கும் மாமா..” என்று கூறிவிட்டான்..

“இந்த நேரத்தில் எங்கே போவாங்க..?” சக்திப்ரியா அவர்களுக்காகப் பரிந்து கொண்டு வர.. அவளை முறைத்து பார்த்தவன் விறுவிறுவெனத் தங்களது அறைக்குச் சென்றுவிட்டான்.

“நீங்க எங்கேயும் போக வேண்டாம்ப்பா.. நான் மாமாவிடம் பேசி கொள்கிறேன்..” என்று குணசேகரனிடம் கூறிய சக்திப்ரியா தனது அறையை நோக்கி ஓடினாள்.

கட்டிலில் கண்மூடி படுத்திருந்தவன் அருகில் வந்து நின்றவள், “மாமா..” என்று கத்தி அழைக்க.. அடுத்த நொடி அவள் அவன் மீது வீழ்ந்திருந்தாள். சிவகுரு தான் அவளது கையைப் பிடித்து

இழுத்திருந்தான்.. அவள் தன் முகம் அருகில் இருந்த கணவனது முகத்தைத் திகைப்புடன் பார்த்திருந்தாள்..

"என்னடி பயம் விட்டு போச்சா..?" என்று அவன் கேட்க.. அவனது கடுமையில் அவள் பயத்தில் வாயடைத்து போய் அவனைப் பார்த்திருந்தாள்..

"இப்படிக் கத்த கூடாதுன்னு உனக்குச் சொல்லியிருக்கேன்ல.." அதற்கு ஆமென்று அவள் தலையாட்ட...

"இத்தனை நாளாய் என்னைக் கண்டு பயந்து சுத்திக்கிட்டு இருந்தவளுக்கு இப்ப மட்டும் எப்படித் தைரியம் வந்துச்சு..?"

"அவங்க பாவம் இல்லையா..?"

"யார்..?" அவன் முகத்தைச் சுளித்தான்..

"குணசேகரன் அப்பாவும், சுந்தரி அம்மாவும்.."

"இல்லை.." என்றான் உறுதியான குரலில்.. அவள் அவனையே வைத்த கண் வாங்காது பார்த்தாள்..

"என்னடி பார்வை எல்லாம் பலமாயிருக்கு..?" அவன் தான் பிடித்திருந்த அவளது இடையில் கையின் அழுத்தத்தைக் கூட்டினான்..

"நீங்க நல்லவங்களா..? கெட்டவங்களா..?" அவளது வார்த்தைகளில் அவனது பிடி தளர்ந்தது..

"இப்போ இந்தக் கேள்விக்கு என்ன அவசியம் வந்தது..?" அவன் கேட்டதும் தான் தாமதம் அவள் பொலபொலவென்று கண்ணீர் வடித்தாள்.. அவளது கண்ணீரை கண்டு அவன் பதறி போய் எழுந்தவன் அவளைத் தனது கைவளைவில் வைத்துக் கொண்டே,

"ப்ச், எதுக்கு அழுற..?" என்று அவளது விழிகளைத் துடைத்து விட்டான்..

"நீங்க சாருக்கா திருமணத்தை நிறுத்தியது தப்பு இல்லையா..?" என்று அழுதபடி கேட்டவளை கண்டு அவனுள் கோபம் எழுந்தது..

"இன்னைக்க அவள் நடந்து கொண்டதை பார்த்தும் நீ இப்படிக் கேட்பது தான் எனக்குக் கோபம் வருது.."

“அதான் நீங்க சமாளிச்சிட்டீங்களே.. எனக்காக நீங்க இருக்கும் போது எனக்கு என்ன கவலை..?”

“வக்கணையா பேச மட்டும் செய்.. ஆனா எதையும் யோசிக்காதே.. சாருவை இப்படியே விட்டால் நம் வாழ்க்கையில் புகுந்து குழப்பம் பண்ணுவாள்.. அவளை எல்லாம் தள்ளி தான் நிறுத்தணும்..”

“அவள் என்னைப் பத்தி தப்பா சொன்னால் நீங்க நம்புவீங்களா மாமா.,?”

“முட்டாள்.. உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா..?”

“அதே மாதிரி தான் நானும்.. உங்களைப் பத்தி என் கிட்ட சொன்னால் நானும் நம்ப மாட்டேன்.. நாம நமக்கு இடையில் மூணாவது மனுசனை நுழைய விட்டால் தான் தவறு.. நம்மில் தவறை வச்சிட்டு அடுத்தவங்களைக் குறை சொல்ல கூடாது..” தெளிவாகப் பேசிய மனைவியை அவன் ஆச்சரியம் பொங்க பார்த்தான்..

“எப்போதுமே நமக்கு இடையே பிரச்சனை வர போவது இல்லை.. அதுக்காக நீங்க அவங்க வாழ்க்கையில் விளையாடுறது நல்லது இல்லை.. பெண் பாவம் பொல்லாதது மாமா..”

“அவள் பெண்ணல்ல.. அரக்கி..” அவன் கடுப்புடன் மொழிந்தான்.. அதைக் கேட்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது..

“அவங்க கெட்டவங்களாகவே இருந்துட்டு போகட்டும்.. நாம நல்லவங்களா இருப்போமே.. அதுவும் என் கணவன், என் மாமா நல்லவங்களா இருந்தால் தான் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்..”

அவளது இந்த வார்த்தைக்காக எதையும் செய்ய விழைந்தது அவனது உள்ளம்..! அவனது அமைதி அவளுள் கலவரம் மூட்டியது..

“நாம செய்ற பாவம் நம்ம சந்ததியை பாதிக்கும் மாமா.. நாம பண்ற தப்புக்கு நம்ம குழந்தைங்க பலியாகலாமா..?” அவள் வாரிசுகளைப் பற்றிப் பேசியதும் அவன் முற்றிலும் கரைந்தே போனான்.. அவளது கையை மென்மையாகப் பற்றியவன்,

“இப்போ நான் என்ன செய்யணும் சொல்லு..?” என்று மென்மையுடன் கேட்க..

“மாப்பிள்ளை வீட்டார் கேட்ட சீர்களை எல்லாம் செய்து கொடுத்து, சாருக்கா கல்யாணத்தை நீங்க தான் முன்னே இருந்து நடத்தி கொடுக்கணும்..” அவளது தன்னலமற்ற வார்த்தைகளைக் கேட்டு அவன் மனம் நெகிழ்ந்து போனான்..

“உத்தரவு மகராணி..” மேலே நாட்டு பாணியில் குனிந்து நிமிர்ந்தவன் புன்னகையுடன் கூற.. அவனது புன்னகை அவளையும் தொற்றிக் கொண்டது..

“நான் உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்துறேனா மாமா..?” அவன் இல்லை என்பது போல் தலையாட்டினான்..

“இல்லை.. என்னை ரொம்ப ரொம்பச் சந்தோசமா வச்சியிருக்க..” அவன் ஆழ்மனதில் இருந்து அந்த வார்த்தைகளை உதிர்த்தான்..

இங்குக் காதல் சொல்லப்படவில்லை.. மாறாகக் கல்வெட்டாய் மனதில் செதுக்கப்பட்டது..!!

## 12

“**மா**மா, மாமா..” என்று அலறியபடி அறையினுள் நுழைந்தாள் சக்திப்ரியா..

“ஷ்... இப்படிக் கத்த கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல..” மடிகணினியில் வேலையாக இருந்த சிவகுரு நிமிர்ந்து பார்த்துக் கூறினான்..

“ம், சரி..” என்று சமத்தாகத் தலையாட்டியவள் பின்பு மெல்ல, “மாமா, மாமா..” என்று ரகசிய குரலில் அழைத்தபடி பூனை போல் பதுங்கி பதுங்கி அவன் அருகில் வந்தாள்.. அவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.. அவளது கைகளில் இருந்த பைகளின் எண்ணிக்கையைக் கண்டு அவன்,

“ஷாப்பிங் பலமா இருக்கும் போலிருக்கே..” என்று கேட்டான்..

“நான் எல்லாம் என்னத்தை வாங்கினேன்.. ஜுஜுபி.. சாருக்கா வாங்கியதை பார்க்கணுமே.. ஹப்பா.. முழுக் கடையவே காலி பண்ணிட்டாங்க..”

“ஐயோ பாவம் அவள் புருசன்..” சிவகுரு சாருலதாவின் வருங்காலக் கணவனுக்காகப் பரிதாபப்பட்டான்..

சக்திப்ரியா கையிலிருந்த பைகளைக் கட்டிலில் பரப்பி வைத்து அதிலிருந்த பொருள்களை ஒவ்வொன்றாக எடுத்துக் காண்பித்துக் கணவனிடம் விளக்கி கொண்டிருந்தாள்.. அவன் பொருட்களைப் பார்த்தானோ இல்லையோ மனைவி பேசும் அழகினை இமைக்காது பார்த்திருந்தான்..

"மாமா.." என்றபடி தன் தோளில் சாய்ந்து கொண்ட மனைவியைக் கண்டு உணர்வு பெற்றவன் ஒற்றைக் கையால் அவளை அணைத்துக் கொண்டு,

"மாமாவுக்கு என்ன வச்சிருக்க..?" என்று கேட்க.. அவள் தனது உதட்டினை முத்தம் கொடுப்பது போல் குவித்து அதில் கை விரல்களை ஒற்றி அந்த விரல்களை அவனது உதட்டின் மீது வைத்தாள்..

"இவ்வளவுதானா..?" என்றவனது பார்வை பூவை மொய்க்கும் வண்டினை போல் அவளது இதழ்களை முற்றுகையிட்டது..

"இப்போதைக்கு இவ்வளவுதான்.. நான் எல்லாச் சப்ஜெக்ட்டிலும் பாஸ் பண்ணிய பிறகு தான் எல்லாம்.." என்று கண்டிப்பாய் கூறியவளை கண்டு அவன் மானசீகமாகத் தலையில் கை வைத்தான்..

அன்று சாருலதா அவளை அவமானப்படுத்தியதில் இருந்து சக்திப்ரியா இந்தப் புதுச் சபதம் எடுத்திருக்கிறாள்..

"நீ எப்போ பாஸ் பண்ணி.. நான் எப்போ அப்பா ஆகிறது..?"

"நீங்களும் என்னை நம்ப மாட்டேங்கிறீங்க.. என்னை மக்குன்னு சொல்றீங்க.." என்று கண்ணில் டேமை திறந்து விட்டாள் அவனது அருமை மனைவி..

"ச்சேச்சே.. நான் அப்படிச் சொல்வேனா.. உனக்குச் சொல்லி கொடுப்பதை விட மாமாவுக்கு வேறு வேலை என்ன இருக்கு..? இந்த முறை உன்னை எல்லாப் பாடத்திலும் பாஸ் பண்ண வைக்கிறது தான் என்னோட ஒரே குறிக்கோள்.." அவன் மனைவியைச் சமாதானப்படுத்தினான்..

"மாமா, எல்லாப் பாடத்திலும் இல்லை.. பத்தே பத்து தான்.." அவள் இரண்டு கைவிரல்களையும் அகல விரித்துக் கட்டினாள்.

"ஆமாம், மறந்தே போயிட்டேன்.. பத்தே பத்து தான்.." நமட்டு சிரிப்புடன் கூறியவளைக் கண்டு அவள் மீண்டும்,

"மாமா.." என்றழைக்க..

"என்னடி சொல்லு..?"

"நான் உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்துறேனோ..?" என்றவளின் முகத்தை நிமிர்த்தியவன்,

"என்ன திடீர்ன்னு இந்தச் சந்தேகம்..?" என்று கேட்க..

"நான் சொன்னதுக்காகத் தான் நீங்க சாருக்கா கல்யாணத்துக்குச் சீர் செய்ய ஒத்துக்கிட்டீங்க.. ஆனா நான் எதிர்பார்த்ததை விடச் செலவு ரொம்ப அதிகமா இருக்கே மாமா.."

"கல்யாணம்ன்னா சும்மாவா..? செலவுகள் இருக்கத்தான் செய்யும்.."

"நான் கூட இரண்டு அல்லது மூன்று லட்சத்தில் எல்லாச் செலவும் முடிஞ்சிரும்ன்னு நினைச்சேன்.. ஆனா அக்கா வாங்கிய ட்ரெசோட விலையே அதையும் தாண்டி போயிருச்சு.."

"விடு சக்தி.. அதை நீ ஏன் யோசிச்சிட்டு இருக்க..?"

"என்னால் தானே உங்களுக்கு இத்தனை செலவு..? பேசாம, இந்தச் செலவை எல்லாம் நான் உங்க கிட்ட வேலை பார்த்து அடைக்கவா மாமா..?" என்றவளை கண்டு அவன் குபீர் என்று சிரித்து விட்டான்..

"சாரு விரலில் போட்டு இருக்கும் வைர மோதிரத்தின் விலை என்ன தெரியுமா..?"

"ம்ஹூம், தெரியாது.." என்று உதட்டை பிதுக்கியவளின் உதட்டின் மீது கை விரலால் கோலம் போட்டவன்,

"பல லட்சங்கள் பெறும்.." என்க..

"ஆத்தி.." என்று அவள் வாய்விட்டு அலறியே விட்டாள்..

"ஏய், நான் ஒண்ணுமே பண்ணலையே.. எதுக்கு இப்படிக் கத்துற..?" அவன் அவசரமாகத் தனது கை விரலை அவளது உதட்டில் இருந்து எடுத்தான்..

“மோதிரமே பல லட்சங்களா..? அப்போ நான் பல வருசங்கள் வேலை பார்க்கணும் போலிருக்கே.. ஆத்தி..” என்று அவள் அதிர்ச்சியில் வாயை பிளந்தாள்.. அவளது தாடையில் கை கொடுத்து வாயை மூடியவன்,

“அந்தக் கவலை எல்லாம் உனக்கு எதுக்கு..? எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்.. நீ சீரியல் பார்த்துட்டு ஐம்முன்னு அழுதுட்டு இரு.. அது தான் உனக்குச் செட்டாகும்..”

“மாமா..” என்று அவள் சிணுங்கினாள்..

“உனக்காக எதையும் செய்வேன்.. இதைச் செய்ய மாட்டேனா..?” என்றவன் அவளை அணைத்துக் கொண்டான்..

“என்னை ஏன் உங்களுக்குப் பிடிச்சியிருக்கு மாமா..? நான் மக்கா இருக்கிறதாலா..?”

“இன்னொரு தடவை என் பொண்டாட்டியை மக்குன்னு சொன்ன அடி பிச்சிருவேன் பிச்சி.. என் மனைவி வெள்ளந்தி பெண்.. வெகுளி பெண்.. அதனால் மட்டும் தான் எனக்கு அவளைப் பிடிக்கும்..”

“அப்போ நான் அழகா இல்லையா..?”

“ரொம்ப ரொம்ப அழகு.. நான் தான் உனக்குப் பொருத்தமானவனான்னு எனக்குத் தெரியலை..”

“நீங்களும் அழகு தான் மாமா..”

“இல்லையே.. நீ என்னை அங்கிள்ன்னு கூப்பிட்டதா எனக்கு ஞாபகம்..”

“ஹி,ஹி.. அது வந்து..”

“நான் ரொம்ப வயசானவன் மாதிரி இருக்கேனா சக்தி..?” கணவனது குரலில் தெரிந்த கவலையில் அவள் பதறி தான் போனாள்..

“நீங்க அழகு தான் மாமா.. இந்த உலகத்திலேயே நீங்க மட்டும் தான் அழகு..” அவள் அவனை அணைத்து கொண்டாள்..

“நிஜமா..?” அவளது விழிகளைப் பார்த்து அவன் கேட்டான்.

“நிஜமா.. நீங்க சிரிச்ச முகமா இருந்தால் இன்னும் அழகா இருக்கீங்க..” என்றவளின் நெற்றியில் விளையாட்டாய் முட்டியவன்,

“நீ சொன்னால் உண்மையாகத் தான் இருக்கும்..” என்றவனது முகத்தில் சிரிப்பு மலர்ந்தது..

நள்ளிரவில் உறக்கம் கலைந்து அமர்ந்த சக்திப்ரியா கணவன் இன்னமும் மடிகணினியில் வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டு அவன் அருகில் வந்து அவனது தோளில் சாய்ந்தமர்ந்தாள்..

“என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க..?”

“பில்டிங் டிசைன் பண்ணிக்கிட்டு இருக்கேன்..” என்றவன் வேலையில் கவனமானான்..

அவன் செய்வதை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த சக்திப்ரியா அதில் சில மாற்றங்களைச் சொல்ல.. அவன் வியப்பாய் அவளைப் பார்த்தான்..

“நீ சிவிலா..?”

“ஆமா.. இது கூடத் தெரியாமலா எனக்குப் பாடம் சொல்லி கொடுக்க ஒத்துக்கிட்டீங்க..”

“நான் ஏதோ டிகிரின்னு நினைச்சேன்.. சிவில்ன்னா நல்லதா போச்சு.. நானும் அதே தான்..” என்றவன்,

“அருமையான ஐடியா எல்லாம் கொடுக்கிற நீ எப்படி ஃபெயிலான..?” என்று கேட்க..

“எக்சாமில் ரொம்ப நேரம் எழுத சோம்பேறித்தனம் மாமா.. அதைவிட, எல்லாத்தையும் பாஸ் பண்ணினா வேலைக்குப் போகச் சொல்லி தொந்தரவு பண்ணுவாங்க.. எனக்கு டிவி சீரியல் ரொம்ப முக்கியம்..” என்றவளை ‘அடப்பாவி..’ என்பது போல் பார்த்திருந்தான் அந்த அப்பாவி கணவன்..

“வாங்க மாமா.. டிசைன் பண்ணுவோம்..” என்றவள் உற்சாகமாய் அவனுடன் இணைந்து வேலை செய்தாள்..

சிறிது நேரத்தில் அவன் நினைத்ததைவிட அந்த வரைவு அழகாக வந்திருந்தது.. அவன் அவளை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு,

“தேங்க்ஸ்டி பொண்டாட்டி..” என்க..

“எதுக்கு மாமா..?”

“நான் அப்பா ஆகும் நாள் விரைவில்.. அதுக்குத் தான்..” என்று அவன் கண்சிமிட்டி சிரித்தான்.. அதைக் கண்டு அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்து போனது..

சரண் அலுவலகத்தில் இருந்து காரை கிளப்பிக் கொண்டு வெளியில் வந்த போது அருகிலிருந்த பேருந்து நிலையத்தில் சங்கீதா நிற்பதை கண்டான்.. தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தவன் மணி பத்து என்றதும் திகைத்துப் போனான்.. ஒன்றிரண்டு பேரை தவிரப் பேருந்து நிலையத்தில் யாரும் இல்லை..

‘நேரத்தோடு வீட்டுக்கு கிளம்பி போக வேண்டியது தானே..’ என்று முணுமுணுத்தவன் பேருந்து நிலையத்தைத் தாண்டி சென்று விட்டான்.. பின்பு மனம் கேட்காது காரை ஓரமாக நிறுத்திவிட்டு பேருந்து நிலையத்தை நோக்கி ஓடிவந்தான்..

சங்கீதா சரணின் கார் கடந்து சென்றதை கவனித்தாள்.. தன்னைக் கண்ட கொள்ளாது போகும் கணவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் கலங்கியது.. அவன் தன்னை வெறுத்து விட்டான் என்று அவள் முடிவே செய்துவிட்டாள்.. யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டு அவள் திரும்பி பார்த்தாள்.. அங்கு மங்கலாய் தெரிந்த கணவனது உருவத்தைக் கண்டு இனிய அதிர்ச்சி அடைந்தவள் கண்ணீரை துடைத்து விட்டு அவனைப் பார்த்தாள்.. அவளது கணவன் சரண் தான் அங்கே நின்று கொண்டிருந்தான்.. அவள் சந்தோசத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவனோ அவளைப் பார்க்காது கையில் இருந்த அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.. தன்னுடன் வரும்படி அவ்ளை அவன் அழைக்கவில்லை.. அதைக் கண்டு அவள் மனம் பாரமாகத் தனக்கான பேருந்து வருகிறதா..? என்று பார்க்க ஆரம்பித்தாள்..

மனைவி தன்னைப் பார்க்காததை உணர்ந்த சரண் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.. அவன் அலைப்பேசியைப் பார்ப்பதும், பின்பு சங்கீதாவை பார்ப்பதுமாய் இருந்ததைக் கண்டு அருகில் இருந்தவருக்குச் சந்தேகம் வந்தது.. நேரே அவன் அருகில் வந்து அவனது சட்டையைப் பிடித்து,

"ரோட்டில் ஒரு பொம்பளையை விட்டு வைக்கிறது இல்லை.. நீ அந்தப் பொண்ணை ஃபோட்டோ எடுத்த தானே.. ஒழுங்கு மரியாதையா ஃபோனை கொடு.." என்று அவர் மிரட்ட..

"சார், புரியாம பேசாதீங்க.." சரண் எரிச்சல் பட்டான்..

"நான் புரியாம பேசுறேனா..?" அவர் கத்த துவங்கவும் அங்கே கூட்டம் கூட ஆரம்பித்தது.. இதற்கு மேல் அமைதியாக இருந்தால் சரிவராது என்று எண்ணிய சங்கீதா நேரே அவரிடம் வந்து,

"இவர் என் கணவர்ங்க.. நீங்க நினைக்கிற மாதிரி பொறுக்கி இல்லை.." என்று கூற..

"புருசன், பொஞ்சாதியா..? நல்ல புள்ளைங்க:. பொஞ்சாதி கிட்ட பேச என்ன தயக்கம் தம்பி..? போ, போய்ப் பேசு.." என்றவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.. எல்லோரும் கலைந்து சென்றனர்..

அப்போது சங்கீதா செல்ல வேண்டிய பேருந்து வந்து நின்றது.. அவள் அதை நோக்கி செல்ல முயன்ற போது சரண் அவளது கையைப் பிடித்துத் தடுத்திருந்தான்..

"சரண்..." அவள் கண்ணீர் மல்க கணவனைப் பார்த்தாள்..

"வா.." என்று அவன் அவளை அழைக்க.. அவள் மறுப்பேதும் சொல்லாது அவனுடன் நடந்தாள்..

வீடு வரும் வரை இருவரும் அமைதியாக வந்தனர்.. தங்களது அறைக்கு வந்ததும் சங்கீதா கணவனிடம், "தேங்க்ஸ்.." என்க.. அவன் பதில் பேசாது அவளை ஏறிட்டுப் பார்த்தான்.. ஒவ்வொரு முறையும் நன்றி சொல்லும் போது இருவரும் பரிமாறிக் கொள்ளும் இதழ் முத்தம் ஞாபகத்தில் எழுந்து அவர்களை அலைக்கழித்தது.. அதற்கு மேல் தாங்க முடியாது சங்கீதா ஓடி வந்து அவனை அணைத்து கொண்டாள்..

"ப்ளீஸ் சரண்.. என் கிட்ட பேசுங்க.. இப்படிப் பேசாம இருந்து என்னை வதைக்காதீங்க.. உங்களால் என்னை மன்னிக்க முடியலைன்னா என்னைக் கொன்னு போட்டுருங்க.. என்னால் இந்த வேதனையைத் தாங்கிக்க முடியலை.. ரொம்பக் கஷ்டமாயிருக்கு சரண்.."

உயிருக்கு உயிரானவளின் உயிரை எடுத்துவிட்டு அவனால் மட்டும் இந்த உலகத்தில் வாழ முடியுமா..? முடியவே முடியாது என்பது போல் அவனது கைகள் அவளை இறுக அணைத்துக் கொண்டது.. அவள் நம்ப முடியாது அவனை ஏறிட்டு பார்த்தாள்..

"என்னை மன்னிச்சிட்டீங்களா சரண்..?" அதற்கு அவன் தனது பார்வையை பதிலாகக் கொடுத்தானே தவிர.. வேறு எதுவும் பேசவில்லை..

"அன்னைக்கு நான் அப்படிப் பேசினது தப்பு தான் சரண்.. ஆனா அப்போ இருந்த சங்கீதா இப்போ இல்லை.. இதை நீங்க நம்பணும்.."

சங்கீதா மீண்டும் இங்கே வந்த நாட்களில் இருந்து அவன் அவளைத் தினமும் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறான்.. அவளுடைய மாற்றம் அவனுக்கு நன்றாகப் புரிந்தது.. ஆனாலும் அவனது மனதிலிருந்த வெறுமை மறையவில்லையே..

"நீங்க தற்கொலைக்கு முயன்றீங்கன்னு கேள்விப்பட்டு நான் செத்து போயிட்டேங்க.. உங்களுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தால் அடுத்த நொடி நானும் செத்திருப்பேன்.. அந்தக் கணம் எனக்குப் புரிஞ்சது.. காசு, பணம் எல்லாத்தையும் தாண்டி எனக்கு என்னோட சரண் எவ்வளவு முக்கியம்ன்னு.. நீங்க இல்லாத வாழ்க்கை உயிர்ப்பு இல்லாத வாழ்க்கைன்னு நான் புரிஞ்சிக்கிட்டேன்.." என்றவள் அவனை நிமிர்ந்து பார்த்து,

"நான் என்ன செஞ்சா நம்புவீங்க சரண்..? என் உயிரை தரவா..? வேறு என்ன செய்யணும்.. சொல்லுங்க சரண்..?" என்றவளின் கைகளை விலக்கி விட்டுச் சரண் அமைதியாகச் சென்று விட்டான்..

சங்கீதா வேதனையுடன் அவனைப் பார்த்திருந்தாள்.. அன்றிரவு அழுது கொண்டே இருந்தவள் எப்போது போல் இருந்தது.. அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தவள் தன் எதிரே புன்னகை முகமாய் நின்றிருந்த கணவனைக் கண்டு வியப்பில் விழிகளை விரித்தாள்..

"சரண்.."

“ஹேப்பிப் பேர்த்டே மை ஸ்வீட் ஹார்ட்..” என்று வாழ்த்தியபடி அவன் அவளின் முன் இதய வடிவிலான கேக்கை நீட்டினான்..

“தேங்க்ஸ் சரண்..” அவள் கண்கள் கலங்க, மனம் நெகிழ அவனுக்கு நன்றி கூற..

“தேங்க்ஸ் இப்படிச் சொல்ல கூடாதே..” என்றவனது பார்வை அவளது இதழ்களை மொய்த்தது..

“சரண்..” என்று சிணுங்கியவள் அவனது நெஞ்சில் முகத்தைப் புதைத்து கொண்டாள்..

“கேக் வெட்டு சங்கி..” அவன் சிறு கத்தியை எடுத்து அவளிடம் கொடுக்க.. அவள் மகிழ்ச்சியுடன் கேக்கை வெட்டினாள்.. அவள் கேக் துண்டை எடுத்து அவனின் வாயில் வைக்க..

“இப்போ தேங்க்ஸ் சொல்லலாம் இல்லையா..?” என்றவன் அவளது இதழோடு இதழ் பொருத்தியிருந்தான்.. அவளும் அவனது கைகளில் பாந்தமாய்ப் பொருந்தினாள்..

“சரண், என்னை மன்னிச்சிட்டீங்களா..?” கதறியழுதப்போ..

“தெரியலை.. ஆனா நான் இல்லாம நீ உயிரோடு இருக்க மாட்டேன்னு சொன்னியே.. அந்த வார்த்தைகள் தான் என்னை உன் காலடியில் விழ வைத்தது.. ‘இதைவிட வேறு என்ன எதிர்பார்க்கிறாய் மடையா..’ன்னு என் மனசாட்சி என்னைக் குத்துச்சு.. காதலிக்கிறவங்களுக்காக எதையும் செய்ய நினைக்கிறது தான் உண்மையான காதல்.. நீ உன் உயிரையே கொடுக்கிறேன்னு சொல்றதை விட எனக்கு வேறு என்ன வேண்டும்..” என்றவன்,

“இனி கடந்த காலத்தைப் பத்தி நாம ரெண்டு பேரும் பேச கூடாது.. நம்ம ரெண்டு பேர் கிட்டேயும் தவறு இருக்கு.. இனி நாம நம்மைத் திருத்திக்கலாம்..” என்று அவன் புரிதலுடன் கூற..

“ஆமா சரண்.. சக்தியை பார்த்து தான் நானும் என்னைக் கொஞ்சம் கொஞ்சமா மாத்திக்கிட்டேன்.. அவள் எப்படி எல்லாம் பெரிய மாமாவை அட்ஜஸ்ட் பண்ணி போகிறாள்..”

“அண்ணா மட்டுமென்ன... அண்ணிக்காக அவங்க குணத்தையே மாத்திக்கிட்டாங்களே... அண்ணா இப்படி

மாறுவாங்கன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை.. இப்போ கோபம்ன்னா என்ன விலைன்னு அண்ணா கேட்பாங்க.." என்றவனுக்குச் சிரிப்பு வந்தது..

"அவங்களோட வாழ்க்கை நமக்கான படிப்பினை.."

"அது என்னவோ உண்மை தான்.." என்றவன் அவளை அணைத்துக் கொண்டான்..

**ந**கரத்தின் மையத்தில் இருந்த அந்தத் திருமண மண்டபம் முழுவதும் விஐபிகளால் நிறைந்திருந்தது.. சாருலதாவின் திருமணம் தான் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.. குணசேகரன், சுந்தரி இருவரின் விழிகளும் கலங்கி போயிருந்தது.. சக்திப்ரியா மட்டும் மனது வைக்கவில்லை என்றால் அவர்களது மகளது திருமணம் இத்தனை கோலாகலமாக நடந்திருக்காது.. அதற்காக அவர்கள் அவளிடம் நன்றி கூறிய போது,

"எனக்கு எதுக்கு நன்றி எல்லாம்.. மாமா தான் எல்லாச் செஞ்சாங்க.. நன்றி சொல்றதா இருந்தால் மாமாவுக்குச் சொல்லுங்க.." என்று கணவனைக் கை காட்டிவிட்டு அவள் ஒதுங்கி கொண்டாள்..

சிவகுருவோ ஒரு படி மேலே போய், "என் மனைவி சொன்ன சொல்லுக்காகத்தான் நான் இதைச் செய்தது.. அவள் பாவ புண்ணியக் கணக்கு நிரம்பப் பார்ப்பவள்.. அவளது கணக்கில் பாவம் ஏறிவிடக் கூடாது என்று தான் நான் இதைச் செய்தேன்.." என்ற கூறி மனைவியைப் பெருமைப்படுத்தி விட்டான்..

"சிறந்த தாம்பத்தியத்திற்கு இது தான் வேண்டும் சிவா.. நீயும், உன் மனைவியும் ஒற்றுமையும், சந்தோசமாய் நீடூழி வாழ வேண்டும்.."" குணசேகரன் மருமகனை வாழ்த்தினார்..

அதை எல்லாம் நினைத்து பார்த்தவரின் விழிகள் சிவகுருவையும், சக்திப்ரியாவையும் நன்றியுடன் பார்த்தது..

திருமணம் முடிந்து சாருலதா கணவன் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாகி கொண்டிருந்தாள்.. கிளம்பும் முன் சிவகுரு, சக்திப்ரியாவிடம் சொல்லிவிட்டு போக வந்தாள்..

"வாங்கக்கா.." சாருலதாவின் வரவை கண்டு அறை கதவை அகல திறந்து அவளை உள்ளே அழைத்தாள் சக்திப்ரியா..

சிவகுரு சாருலதாவின் வருகையைக் கண்டாலும் எதுவும் பேசாது சோபாவில் அமர்ந்திருந்தான்.. அவனது மடியில் இருந்த ஒற்றை மல்லிகைப்பூ சொல்லாமல் சொல்லியது, அவர்கள் இருவரது வாழ்க்கையை.. சாருலதாவின் பார்வையை உணர்ந்து அங்கே திரும்பி பார்த்த சக்திப்ரியா 'ஐயோ' என்று தலையில் கை வைத்தாள்.. திருமண அலைச்சலில் தலைவலி என்று சொன்னவளை சிவகுரு மடியில் படுக்க வைத்து இதமாகத் தலையைப் பிடித்து விட்டான்.. அப்போது அவளது தலையில் இருந்த பூ உதிர்ந்திருக்க வேண்டும்..

"ஷ்.. மாமா.." சக்திப்ரியா கணவனை மெல்ல அழைக்க.. அவன் என்னவென்று அவளைப் பார்த்தான்..

அவள் தனது தலையில் இருந்த பூவை எடுத்து காட்டி அவனது மடியினைச் சுட்டிக்காட்ட.. அவன் புரிந்தார் போன்று குனிந்து பார்த்தான்.. அவன் தனது மடியில் இருந்த ஒற்றை மல்லிகை பூவை எடுத்து வாசம் பிடித்தவன் மனைவியைக் கண்டு கண்சிமிட்டினான்.. இந்தக் காட்சியைச் சாருலதா புன்முறுவலுடன் பார்த்திருந்தாள்.. இப்போது அவளது மனதில் எந்தவித கோபமும் இல்லை.. பொறாமையும் இல்லை..

"உங்களை.." என்று முறைத்தவள் சாருலதா புறம் திரும்பி,

"சொல்லுங்கக்கா.." என்க..

"என்னை மன்னித்து விடு சத்தி.." என்று அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு சாருலதா மன்னிப்பு கேட்டாள்..

"அது எப்படிக்கா முடியும்..?" என்றவளை அதிர்ந்து போய்ப் பார்த்தாள் சாருலதா.. சிவகுரு கூட மனைவியைக் கூர்மையாய் பார்த்தான்..

"நீங்க என்னைத் தவறா சொல்லியிருந்தால் கூட அதை நான் மன்னிச்சிருப்பேன்.. ஆனா நீங்க தவறு சொன்னது, குற்றம் சுமத்தியது என் மாமா மேல்.. என்ன சொன்னீங்க.. அவர் உங்களைக் காதலிக்கிறார்.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்பும் உங்களை அடைய நினைக்கிறார்.. அப்படி, இப்படின்னு தப்புத் தப்பா சொன்னீங்கல்ல.. அவருக்கு அந்த மாதிரியான கீழ்த்தரமான எண்ணம் கொஞ்சமும் இல்லை.. உங்களுக்குத் தான் அந்த மாதிரியான எண்ணம் இருந்திருக்கு.. அதான் அப்படிப்

பேசியிருக்கீங்க.. என் கணவர் ராமர்.. அவர் மனசில் நான் மட்டும் தான்.. அதனால் தான் நான் சொன்னதுக்காக உங்க கல்யாணத்தை முன்னே நின்று நடத்தி காட்டினார்.. அவர் மனதில் எந்தவித கல்மிசமும் இல்லை.. அதே போல் நீங்களும் உங்க கணவரை காதலிச்சு வாழ்ந்து உங்க காதலை நிரூபிங்க.."

சக்திப்ரியாவின் வார்த்தைகளில் சிவகுரு அதிர்ந்து போய்ச் சோபாவில் இருந்து எழுந்து விட்டான்..

"சக்தி, இப்போ நான் என் தப்பை உணர்றேன்.. நான் செஞ்ச தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கிறேன்.. சிவா அத்தான் என்னை மன்னிச்சிருங்க.." என்று இருவரிடமும் மன்னிப்பு கேட்டவள் அழுது கொண்டே அங்கிருந்து சென்றுவிட்டாள்..

காலம் சில காயங்களை ஆற்றும்..!!

## 13

"மாமா, சாருக்கா முன்னாடி இப்படியா மானத்தை வாங்குவீங்க..?" சக்திப்ரியா இடுப்பில் இரு கைகளை வைத்தபடி கணவன் முன் வந்து நின்று அவனைப் போலியாக முறைத்து கொண்டிருந்தாள்..

"சக்தி.." சிவகுரு இன்னமும் திகைப்பு மாறாது மனைவியைப் பார்த்தான்.. அவனது கலக்கத்தை அவள் புரியாது பார்த்தாள்..

"என்ன மாமா..?"

"சாரு எப்போ உன் கிட்ட இப்படி எல்லாம் பேசினாள்..?"

"நீங்க நிச்சயத்தை நிறுத்துனீங்கல்ல.. அன்னைக்குச் சொன்னாங்க.. ப்ச் விடுங்க மாமா.. கோபத்தில் பேசும் வார்த்தைகளுக்கு அர்த்தம் கிடையாது.. அவங்க வாழ்க்கையை நீங்க அழிச்சிட்டீங்கன்னு அவங்களுக்கு உங்க மேல் கோபம்.."

"அவள் சொன்னதை நீ நம்புறியா..?"

"ம்ஹூம், இல்லவே இல்லை.. அவங்களை நீங்க காதலிச்சு இருந்தால் அவங்களைக் கல்யாணம் பண்ண எந்தத் தடையும் இல்லையே.. அப்புறம் எப்படி அவங்க சொன்னது உண்மை ஆகும்.." புரிதலுடன் கூறிய மனைவியை அவன் நன்றியுடன் பார்த்தான்..

அவளை அருகே இழுத்து தன்னுடன் இருத்தி கொண்டவன், “உன்னைச் சின்னப் பொண்ணுன்னே நினைச்சுட்டு இருந்தேன்.. ஆனா நீ இவ்வளவு பக்குவமா சிந்திக்கிறவள்ன்னு இப்போ தான் புரியுது..” என்றவனது மனம் லேசானது..

“நான் சின்னப் பொண்ணு தான் மாமா.. உங்களை விட ஒன்பது வயது சின்னப் பொண்ணு..” கைகளை அகல விரித்து, சுருக்கி அபிநயம் பிடித்த மனைவியைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்..

பின்பு அவளைச் சோபாவில் அமர்த்தித் தானும் அவளுடன் அமர்ந்தவன், “நம்ம குடும்பத்தைப் பத்தி நான் இதுவரை உன்கிட்ட ஒண்ணுமே சொன்னது இல்லை அல்லவா.. இப்போது சொல்கிறேன் கேள்.. தாத்தா என்னுடைய அம்மாவோட அப்பா.. எங்க அம்மா அவங்களுக்கு ஒரே மகள்.. அம்மா அப்பாவை காதலிச்சுக் கல்யாணம் பண்ணியதால் தாத்தா அவங்களைச் சேர்த்துக்கவே இல்லை.. அப்பா குடும்பம் இவங்களைவிட வசதி குறைவு.. அதனால் கூட இருக்கலாம்.. ஒரு விபத்தில் அம்மா, அப்பா, சித்தப்பா, சித்தி எல்லோரும் இறந்துட்டாங்க.. சரண் என்னுடைய சித்தப்பா பையன்.. அப்பாவோட தங்கை சுந்தரி அத்தை தான் எங்களைக் கூட்டிட்டு போய் வளர்த்தாங்க..” என்றவனைக் கண்டு,

“அல்டாப்பு சுந்தரிக்குள்ள இவ்வளவு நல்ல குணம் இருந்திருக்கா..?” சக்திப்ரியா குறும்புடன் கூற..

“பெரியவங்களை அப்படி எல்லாம் பேச கூடாது.. அவங்க கொஞ்சம் அலட்டிக்குவாங்களே தவிர ரொம்ப நல்லவங்க.. நம்ம கல்யாணத்துக்குப் பிறகு உன்ன ஏதும் சொன்னாங்களா..?”

“இல்லை..” மறுப்பாய் தலையாட்டியவளை கண்டு அவன்,

“அது தான் அவங்க.. அப்புறம் தாத்தா விசயம் கேள்விப்பட்டு என்னைப் பார்க்க வந்தார்.. நான் தனியா வர மறுக்கவும் என்னுடன் எல்லோரையும் அழைச்சிட்டு வந்தார்..” என்க..

“அப்புறம் ஏன் மாமா யாரிடமும் ஒட்டாம தனியா இருந்தீங்க..?”

“அத்தை கிட்ட இருக்கும் வரை நார்மலா எல்லோரையும் போல் தான் இருந்தேன்.. தாத்தா பொறுப்பில் வந்த பின்பு

தாத்தாவின் வளர்ப்பு வேறு மாதிரி இருந்தது.. அதனால் கூட நான் இப்படி மாறி போயிருக்கலாம்.. அதன் பின்பு தொழிலை கையில் எடுத்தேன்.. அதில் நான் அடைந்த ஏமாற்றங்கள் என்னை இப்படி மாற்றி இருக்கலாம்.. நான் இப்படிக் கோபக்காரனா காட்டி கொண்டாலும் எல்லோரின் மீதும் அன்பு இருந்தது.. அவங்களுக்குத் தேவைப்படும் அனைத்தையும் செய்து கொடுத்தேன்.. எங்களது தொழில்களைச் சரண், மாமா வசம் நம்பி ஒப்படைத்தேன்.. அவங்களும் எனது நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இதுவரை நடந்துக்கிட்டு தான் இருக்காங்க.. உனக்கு ஒண்ணு தெரியுமா..? எனக்குக் கிடைக்கும் லாபத்தில் சரண் மற்றும் மாமாவுக்கு என்று தனியே ஒரு பங்கு ஒதுக்கி விடுவேன்.. ஏன்னா இந்தச் சொத்துக்களில் அவங்களுக்காகத் தாத்தாவிடம் பங்கு கேட்க முடியாது.. அவர் எனக்காக அவங்களை இந்தளவுக்கு அனுமதித்ததே பெரிசு.. அதனால் தான் இந்த ஏற்பாடு.."

"மாமா, நீங்க வில்லன் இல்லை, ஹீரோ.." என்றவள் அவனைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.. அவனும் பதிலுக்கு அவளை அணைத்து நாசியோடு நாசி உரசியவன்,

"நீ கட்டாயம் பாஸ் பண்ணியே ஆகணுமா..?" என்று தாபத்துடன் கேட்க..

"ஆமா.." என்றவள் அவனை விட்டு இரண்டடி தள்ளி அமர்ந்து கொண்டாள்.. அவளது செயலை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்..

"ம், கதை சொல்லுங்க மாமா.." என்றவளின் மூக்கை பிடித்துத் திருகியவன்,

"என்னைப் பார்த்தால் கதை சொல்கிறவன் மாதிரியா இருக்கு.." என்க..

"ப்ளீஸ்.." என்றவளை கண்டு மனமிரங்கி அவன் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தான்..

"எல்லாம் நல்லா தான் போயிட்டு இருந்தது.. இடையில் சாரு காதல் என்று வந்து நின்றிருக்கா விட்டால் எல்லாம் நல்லதாகவே நடந்திருக்கும்.. அவள் திடுமென என்னிடம் வந்து காதல் என்று சொன்னாள்.." என்றவன் மனைவியைக் கண்டு,

"இதை நான் சொல்வதற்காக நீ என்னைத் தவறாக நினைக்கக் கூடாது.." என்று கூற..

"பரவாயில்லை சொல்லுங்க.." அவள் ஊக்குவிக்க.. அவன் மேலே தொடர்ந்தான்..

"அவளது காதலை மறுக்க எனக்கு ஒன்றுமே இல்லை.. அத்தை பெண்.. அழகாய் இருந்தாள்.. நிரம்பப் படித்திருந்தாள்.. எனக்கு மனைவியாகக் கூடிய எல்லாத் தகுதியும் அவளுக்கு இருந்தது.. அதனால் என் மனதிலும் சிறு ஈர்ப்பு வந்தது.. ஆனாலும் நான் அவளிடம் எதையும் வாய்விட்டு சொல்லவில்லை.. இப்படியே நாட்கள் கடந்தது.. ஏதேச்சையாக ஒரு நாள் அவளது டைரியை நான் படிக்க நேர்ந்தது.. அதில் அவள் சரணுக்காக நியைக் காதல் கவிதைகள், கடிதங்கள் எழுதி வைத்திருந்தாள்.. எனக்குத் தூக்கிவாரி போட்டது.. எல்லாவற்றையும் நிதானமாகப் படித்துப் பார்த்தேன்.. அவள் முதலில் காதலித்தது சரணை.. பிறகு தாத்தாவிடம் பேச ஆரம்பித்ததும் தான் அவளுக்குத் தெரிந்திருக்கிறது, சொத்துக்கள் எல்லாம் என்னுடையது என்று.. அதில் இருந்து அவளது காதல் என் மீது மாறி விட்டது.. இது எனக்கு எவ்வளவு பெரிய அவமானம்.. நான் இதைப் பற்றி அவளிடம் எதுவும் மூச்சு விடவில்லை.. மாமா, அத்தைக்காக அமைதியாகக் கடந்து விட்டேன்.."

"ஆனா அவள் அப்படி இருக்கவில்லை.. நான் ஒதுங்கியது தெரிஞ்சதும் சரண் பின்னே சுத்த ஆரம்பித்தாள்.. எனக்கு இது கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது.. இவளிடம் இருந்து சரணை எப்படிக் காப்பது என்று எனக்குத் தெரியவில்லை.. அப்போது தான் சரண் உங்கக்காவை காதலிப்பது தெரிந்தது.. நல்லதாய் போயிற்று என்று உன் அக்காவை பற்றி விசாரித்தால் அவள் பத்து மடங்கு சாருவை கொண்டிருந்தாள்.. சங்கீதாவிடம் இருந்து சரணை காக்க முடியவில்லை.. அதனால் எனக்கு ஒரே கோபம்.. அவனது திருமணத்துக்கு நான் சம்மதித்த போதும் அவனது திருமணத்தில் நான் கலந்து கொள்ள்வில்லை.. சங்கீதா மீது அவ்வளவு வெறுப்பு இருந்தது.. அவளுக்குச் சரண் மீது இருந்த காதலை விட அவனது அந்தஸ்தின் மீது தான் அதிகக் காதல் இருந்தது.."

"வெளிநாடு கிளம்பி போகும் முன் சாருவிடம் அவளது முகத்திரையைக் கிழித்து விட்டு தான் சென்றேன்.. அது அவளுக்குக் கோபம்.. சரணை நான் தான் அவளிடம் இருந்து பறித்து விட்டேன்னு.. அவளும் வேலை விசயமா மும்பை போய்விட்டாள்.. அதற்குப் பிறகு அவள் வந்தது நீ வந்த அன்று

தான்.. இது தான் அவள் சொன்ன காதல் கதை.. இதில் எங்காவது காதல் இருக்கிறதா..? நீயே சொல்..”

“நீங்க பாவம் தான் மாமா..”

“என்னைப் பார்த்தால் பாவமா இருக்கா சக்தி..?”

“ம், ரொம்ப..”

“அப்போ கொஞ்சம் கருணை காட்ட கூடாதா..?”

“அதுக்கு நான் என்ன செய்யணும் மாமா..?” அவள் அப்பாவியாய் கேட்க..

“நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்.. நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்..” என்றவன் அவள் புறம் குனிந்து அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான்..

அதன் பின்பு கடந்த மணித்துளிகளில் சிவகுரு மனைவிக்கு உலகத்தையே மறக்க செய்திருந்தான்.. அவளும் தனது படிப்பினை மறந்து கணவன் சொல்லி கொடுத்த வாழ்க்கை பாடத்தைச் சமத்தாகப் படிக்க ஆரம்பித்தாள். அங்கே இனிய இல்லறம் அழகாக மலர்ந்தது..

“சக்தி, நாம ஹனிமூனுக்கு எங்கேயாவது வெளிநாடு போகலாமா..?” மனைவியின் மடியில் படுத்தபடி சிவகுரு கேட்க..

“போகலாம்.. ஆனால் நமக்கு முன்னாடி கல்யாணம் ஆனவங்க இன்னும் ஹனிமூன் போகலையே..”

அப்போது தான் அவனுக்கு அது உறைத்தது.. அன்று சரண் தன்னிடம் தேனிலவு போக வேண்டும் என்று கேட்டது.. அதற்குத் தான் மறுத்தது எல்லாம் அவனுக்கு ஞாபகம் வந்தது..

“உண்மை தான் சக்தி.. சரண் எவ்வளவு ஆசையா கேட்டான் தெரியுமா..? நான் தான் மறுத்து விட்டேன்..”

“மாமா, உங்களை என்ன பண்ணினால் தகும்..?” சக்திப்ரியா அவனை முறைத்து பார்த்தாள்..

“அப்போ நான் கட்டை பிரம்மச்சாரி.. இப்போ தானே சம்சாரியா ஆகியிருக்கேன்.. அதனால் இந்தச் சின்னப் பையனை மன்னித்துவிடு..”

“நீங்க சின்னப் பையனா..?” அவள் அவனைப் போலியாக முறைக்க.. அதைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்..

அடுத்தச் சில நாட்களில் சரண், சங்கீதா இருவரும் தேனிலவு செல்ல ஏற்பாடு செய்த சிவகுரு அப்படியே சரணை வெளிநாட்டில் தங்கியிருந்தபடி தங்களது தொழில்களைப் பார்த்துக் கொள்ளச் சொன்னான்..

"அப்போ நீங்க..?"

"என் பொண்டாட்டி சுத்த தமிழச்சியாம்.. அவள் இங்கிலீஷ் பேச மாட்டாளாம்.. அதனால் அவள் தமிழ்நாட்டு எல்லையைத் தாண்ட மறுத்து விட்டாள்.." சிவகுரு விளையாட்டு போல் கூறினாலும் அதில் உண்மையே இருந்தது..

சக்திப்ரியாவுக்கு வெளிநாடு செல்வதில் விருப்பம் இருக்கவில்லை.. மாறாக இங்கேயே இருக்க விருப்பம் கொண்டாள்.. அதற்கு அவள் சொன்ன காரணம் தான் அவள் மீதான சிவகுருவின் காதலை அதிகரிக்கச் செய்தது..

"தாத்தா தனியே இருப்பாங்க.. நாம எங்கேயும் போகாம அவர் கூடவே இருப்போம்.." என்று அவள் கூறிய போது அவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை..

சரண், சங்கீதா வெளிநாடு சென்று ஒரு வாரமாகி இருந்தது.. வீட்டை சும்மா சுற்றிக் கொண்டிருந்த சக்திப்ரியாவை சிவகுரு அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான்..

"மாமா, உங்களைப் பக்கத்தில் இருந்து சைட் அடிக்கன்னா நான் வர்றேன்.. ஆனா என்னைய வேலை பார்க்க சொல்ல கூடாது.." என்று அவள் கறாராய் கூறிவிட்டு தான் அங்கு வந்தது..

அவள் சொன்னது போல் அவனைச் சைட் அடித்துக் கொண்டிருக்க.. அவன் தான் வேலையில் கவனம் செலுத்த முடியாது அவஸ்தைப்பட்டான்..

"அம்மா தாயே, நாளையில் இருந்து நீ இங்கே வர வேண்டாம்.. வீட்டிலேயே இரு.." என்று அவன் கையெடுத்து கும்பிட..

"அது.." என்று அவள் கெத்தாகப் புன்னகைத்தாள்..

சிறிது நேரத்தில் சிவகுரு முக்கியக் கூட்டம் தொடர்பாகச் செல்ல இருந்ததால் மனைவியைத் தனியே அலுவலக அறையில் விட்டு விட்டுச் சென்றான்.. அப்போது அங்கு வந்த அவனது செயலாளர் நந்தீஷ் அவளைக் கண்டு வியந்தவன்,

“குட்மார்னிங் மேம்..” என்று அவளுக்கு வணக்கம் தெரிவிக்க.. அவனை அவர்களது திருமணத்தில் அவள் பார்த்திருந்தால் அவளும் பதிலுக்குப் புன்னகைத்தாள்..

“ஐயம் சாரி மேம்..” அவளது தந்தை இறந்ததற்கு அவன் வருத்தம் தெரிவித்தான்.. அவளோ புரியாது,

“எதற்கு..?” என்று கேட்க..

“உங்கப்பா இறந்ததுக்கு மேம்.. அதோ அங்கே தான்..” அவர்களது நிறுவனத்திற்கு முன்னால் இருந்த பிரதான சாலையைச் சுட்டிக்காட்டியவன்,

“அங்கே தான் உங்கப்பாவுக்கு ஆக்சிடெண்ட் ஆச்சு.. சார் தான் உங்கப்பாவை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போய் வைத்தியம் பார்த்தார்.. டாக்டர்ஸ் என்ன முயற்சி செய்தும் அவரைக் காப்பாத்த முடியாம போச்சு..” வருத்தத்துடன் கூறியவனைக் கண்டு அவள் திகைத்து போய் அமர்ந்திருந்தாள்.. அவளது பேச்சற்ற நிலையைக் கண்ட நந்தீஷ் அவளைத் தொந்தரவு செய்யாது அங்கிருந்து சென்றுவிட்டான்..

சிவகுரு மீண்டும் அறைக்கு வந்த போது வெற்று அறையே அவனை வரவேற்றது.. மனைவியைக் காணாது பதற்றம் அடைந்தவன் அவளது அலைப்பேசிக்கு அழைக்க.. அழைப்புப் போய்க் கொண்டே இருந்தது.. மறுபக்கம் யாரும் எடுக்கவில்லை, உடனே அவன் தாத்தாவிற்கு அழைத்தான்.. மறுபக்கம் அவர் எடுத்ததும்,

“தாத்தா, சக்தி அங்கே வந்தாளா..?” என்று கேட்க..

“ஆமாப்பா.. இப்போது தான் வந்தாள்.. அவளிடம் எதுவும் பேசணுமா..?”

“இல்லை தாத்தா.. நானே வருகிறேன்..” என்று அழைப்பை துண்டித்தவன் அடுத்த நொடி காரிலேறி வீட்டிற்குப் பறந்தான்..

வீட்டிற்கு வந்த சிவகுருவை தாத்தா நமட்டு சிரிப்புடன் பார்க்க.. அவனோ அவரைக் கண்டு கொள்ளாது இரண்டு இரண்டு படிகளாகத் தாவி ஏறி மாடியில் இருந்த தனது அறைக்கு விரைந்தான்..

அறைக்குள் நுழைந்தவன் அங்குக் கட்டிலில் படுத்திருந்த மனைவி அருகில் சென்று அமர்ந்து, “ஏய் சக்தி, விளையாட்டுக்கு அப்படிச் சொன்னேன்.. அதுக்காகக் கோவிச்சுட்டு வந்துட்டியே..

மாமா எப்படி எல்லாம் பயந்து போயிட்டேன் தெரியுமா..?" என்றவன் அவளது தோள் மீது கை வைத்தான்.. அவள் உடல் குலுங்குவதை உணர்ந்தவன் அவள் அழுவதைக் கண்டு கொண்டான்..

"ஹேய் சக்தி, இங்கே பாருடா.." அவளை நிமிர்த்தித் தன்புறம் திருப்பித் தன்னைப் பார்க்க செய்தவன் அவளது முகத்தைக் கண்டு திடுக்கிட்டான்.. அவளது முகம் அழுதழுது வீங்கி போயிருந்தது..

"சக்தி, இங்கே பாரும்மா.. மாமா தெரியாம சொல்லிட்டேன்.. நீ தினமும் வந்து என்னைச் சைட் அடி.. நான் உன்னை ஒண்ணுமே சொல்ல மாட்டேன்.." அவன் அவளது கண்ணீரை துடைத்து விட்டான்..

"அப்பா உங்களைப் பார்க்க எதுக்கு வந்தாங்க மாமா..?" அவளது கேள்வியில் அவனது கை அப்படியே நின்றது..

"உனக்கு எப்படித் தெரியும்..?" அவனது குரல் நடுங்கியது..

"நந்தீஷ் சொன்னாரு.."

"அவனை.." பல்லை கடித்தான் சிவகுரு..

"முதல்ல என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க மாமா.."

"ஆமா, மாமா என்னைப் பார்க்க வரும் போது தான் விபத்து நடந்தது.."

"ஐயோ.." என்றவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது..

"மாமா சரண், சங்கீதா விசயமா தாத்தாவிடம் பேச வந்திருக்கிறார்.. தாத்தா இதில் தான் தலையிட முடியாது.. சரணிடம் பேசிக்கோங்க என்று சொல்லிவிட்டார்.. சரணோ அவரைச் சந்திக்க மறுத்து என்னைச் சந்திக்கச் சொல்லி விட்டான்.. அந்த நேரத்தில் நானும் பயங்கரக் கோபத்தில் இருந்தேன்.. மாமா வந்தால் சங்கீதாவை பற்றிச் சொல்லி நறுக்கென்று கேள்வி கேட்க வேண்டும் என்று.. ஆனால் கடவுள் அதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்கவே இல்லை.. அவர் என்னைப் பார்ப்பதற்காக மெயின் ரோட்டை கிராஸ் பண்ணும் போது பஸ் வந்து இடித்து.."

"ப்ளீஸ் சொல்லாதீங்க மாமா.." என்று சக்திப்ரியா விழிகளையும், காதுகளையும் மூடி கொண்டு அவனது நெஞ்சில் விழுந்து கதறினாள்..

"மாமா இறந்த அன்னைக்கு நீ இப்படித்தான் என் நெஞ்சில் சாய்ந்து கதறி அழுத.." என்றவனை அவன் திகைப்பாய் பார்த்தாள்..

“மாமா.. நானா..? நீங்க அங்கே தான் இருந்தீங்களா..?”

“ம், நம்ம கம்பெனி முன் என்பதால் செக்யூரிட்டி விபத்தைப் பார்த்துவிட்டு அது மாமா என்று அடையாளம் தெரிந்ததும் நேரே என்னிடம் வந்து சொன்னான்.. அவன் ஏற்கெனவே சரணின் கல்யாணத்தில் மாமாவை பார்த்திருக்கிறான்.. ஹாஸ்பிட்டலில் மாமாவை சேர்த்த போது அவருக்கு உயிர் இருந்தது.. அவர் கடைசியாக என்னிடம் தான் பேசினார்..”

“அப்பா என்ன சொன்னாங்க..?” அவள் தேம்பியபடி அவனது முகத்தைப் பார்த்தாள்..

“அவருடைய ரத்தம் தோய்ந்த கையை நோக்கி நீட்டி என்னை அருகில் அழைத்தார்.. இதோ இந்தக் கையால் தான் நான் அவருடைய கையைப் பிடித்தேன்..” அன்றைய நாளின் நினைவில் அவனது முகத்தில் வேதனை கவிழ்ந்தது.. அவளோ அவனது வலக்கை உள்ளங்கையில் தந்தையின் நினைவில் முகம் புதைத்து அழுதாள்.. அவன் வேதனையுடன் அவளது தலையை வருடி கொடுத்தவன்,

“அவர் என் கிட்ட கேட்டுக் கொண்டது ஒண்ணே ஒண்ணு தான்.. சக்தி பாவம், பத்திரமா பார்த்துக்கோங்க.. இதை ஏன் என்கிட்ட சொன்னாருன்னு எனக்குப் புரியலை.. அங்கே அவருக்குத் தெரிந்த ஒரே உறவு நான் மட்டும் தான்.. அதனால் கூட இருக்கலாம்.. அவர் உயிர் பிரியும் போது கூட உன்னைத் தான் நினைத்துக் கொண்டே உயிர் விட்டார்..” அதைக் கேட்டு அவள்,

“அப்பா..” என்று கதறினாள்.. அவன் அவளைத் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டான்..

“அழாதே சக்தி.. நீ அழுறதை பார்க்கும் சக்தி எனக்கு இல்லை..” என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் தனது விழிகளைத் துடைத்து கொண்டாள்.. ஆனாலும் அவளது கண்ணீர் விடாது வடிந்து கொண்டிருந்தது..

“உனக்காக நான் இருக்கும் போது நீ எதற்காகவும் அழ கூடாது..” என்றவன் தானே அவளது கண்ணீரை துடைக்க.. என்னே அதிசயம்..! அவளது கண்ணீர் நின்று போனது.. அதைக் கண்டவன் நிம்மதியுடன் மேலே தொடர்ந்தான்..

“விசயம் கேள்விப்பட்டு நீங்க எல்லாரும் ஊரில் இருந்து வந்தீங்க.. அப்போ நான் அங்கே தான் இருந்தேன்.. உங்க வீட்டில் எல்லோருமே கதறி அழுதாங்க.. ஆனா நீ மட்டும் தான்

மூர்ச்சையாகும் அளவுக்குக் கதறியழுத.. எல்லோரும் அவங்க அவங்க துக்கத்தில் இருந்ததால் உன்னைக் கவனிக்கலை.. நான் தான் மனசு கேட்காம உன் அருகில் வந்து நின்றேன்.. அப்போது நீ சுவற்றில் சாய்ந்து நிராதரவா அழுததைப் பார்த்து எனக்கு என்ன தோணுச்சுன்னு தெரியலை.. உன்னை இழுத்து அணைச்சுக்கிட்டேன்.. ஆறுதல் சொல்ல ஆள் கிடைத்ததும் நீ ஒன்னு கதறியழுத.. உன் கண்ணீர் என் மனதை தொட்டது.. மாமா என் கிட்ட கேட்டக்கிட்ட போது கூட உன்னைப் பத்தி நான் எதுவும் நினைக்கலை.. ஆனா நீ என்னிடம் கதறியழுதப்போ உன்னைக் கண்ணுக்குள் வச்சு பார்த்துக்கணும்ன்னு தோணுச்சு.. அதனால் தான் கொஞ்ச நாள் கழிச்சுச் சரணை சாக்கா வச்சு நம்ம திருமணத்தைப் பேசி முடிக்கச் சொன்னேன்.. அதன் பிறகு நடந்தது எல்லாம் உனக்கே தெரியுமே..”

“அப்பா சொன்னதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா மாமா..? நான் உங்களுக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லையே..”

“அது எனக்கும் தெரியும் சக்தி.. உன்னுடைய விளையாட்டுத்தனம் என்னோட குணத்தோடு ஒத்து போகுமான்னு இடைப்பட்ட நாளில் நான் நிரம்ப யோசித்துப் பார்த்துவிட்டேன்.. ஆனாலும் உன்னை விட என்னால் முடியவில்லை.. அது காதலா..? என்று கேட்டால் எனக்கு விடை தெரியவில்லை.. ஆனாலும் நீ எனக்கு மனைவியாக வர வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன்..” என்றவன்,

“இங்கே வா..” என்று அவளது அறையோடு ஒட்டி பூட்டியிருந்த மற்றொரு அறையைத் திறந்து அதற்குள் அவளை அழைத்துச் சென்றான்..

“இங்கே பார்..” என்றவன் காட்டிய திசையில் பார்த்தவள் திகைத்து போய் அப்படியே நின்றாள்..

அன்று அவள் ‘சாரி’ என்று எழுதிய ஒப்பனை கண்ணாடியும், அதன் மேசை மீது அவள் அவனுக்குக் கொடுத்த பூங்கொத்தும் (அது வாடி சருகாகி இருந்தது) அழகுற வீற்றியிருந்தது..

“மாமா.. அப்போதே என்னைப் பிடிக்குமா..?” அவள் வியப்பில் விழிகளை விரித்தாள்..

“தெரியலை.. ஆனால் நீ இங்கே புகுந்து ஏதோ செய்தாய்..” என்றவன் தனது நெஞ்சினை சுட்டிக்காட்ட..

“மாமா..” கூவலுடன் அவள் அவனை அணைத்திருந்தாள்.. பதிலுக்குத் தானும் அவளை அணைத்தவன்,

“இனி மாமாவை நினைத்து நீ அழ கூடாது.. உனக்கு அப்பாவுக்கு அப்பாவா நான் இருப்பேன்..” என்று கூறியவனைக் கண்டு அவள் புன்னகைத்தாள்..

“இதுக்காகத் தான் சொல்லாம கொள்ளாமல் வந்தியா..? உன்னைக் காணாமல் நான் பதறிப் போயிட்டேன் தெரியுமா..?”

“திடீர்னு அப்பாவை பற்றிச் சொன்னதும் எனக்கு மூளை மரத்து போன மாதிரி இருந்தது.. ஒன்னு அழணும் போலிருந்தது.. அதான் வீட்டுக்கு கிளம்பி வந்துட்டேன்..” அவன் ஒன்றும் பேசாது அணைத்தபடி இருக்க. அவளும் அமைதியாக நின்றிருந்தாள்..

“மாமா, அய்யனார் உங்களுக்குள் ஒரு அரவிந்த்சாமி ஒளிந்திருப்பதை நீங்க சொல்லவே இல்லையே..” என்று அவள் குறும்புடன் கூறியவாறு அவனை ஏறிட்டு பார்த்தாள்..

“எனக்கே தெரியாத விசயத்தை நான் என்னன்னு சொல்ல.. ரொம்பக் குழப்பத்தோடு தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.. ஆனா நீ உன் குழந்தைத்தனத்தால் என் மனதை கொஞ்சம் கொஞ்சமாய் வென்று விட்டாய்..” என்றவன் அவளது உச்சந்தலையில் அழுந்த முத்தமிட்டான்..

அந்தக் கணம் இருவரது மனதிலும் அத்தனை நிம்மதி நிறைந்திருந்தது..

“மாமா, இப்பவாவது என்னை மன்னிச்சிட்டீங்களா..?”

“எதுக்கு..?” அவன் புரியாது பார்த்தான்..

“அன்னைக்கு என்னால் தானே எல்லோர் கிட்டேயும் திட்டு வாங்கினீங்க..”

“இன்னமும் நீ அதை மறக்கவே இல்லையா..? தப்பு செய்தவன் தான் மன்னிப்பு கேட்கணும்.. நீயில்லை..” என்று கூறியவன் மெல்ல சிரித்தான்..

“இல்லை நான் தான் மன்னிப்பு கேட்கணும்..” என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

“ம்ஹூம், மன்னிக்க மாட்டேன்..” என்றான் உறுதியான குரலில்..

“மாமா..” அவள் கோபமாய் முறைக்க..

“அப்போ தானே நீ என்னைப் பத்தி நினைச்சிக்கிட்டே இருப்ப..” என்றவனைக் காதல் மீதுற பார்த்தவள்,

"நான் என் மாமாவை எப்போதும் நினைச்சிட்டு தான் இருப்பேன்.." என்று கூறியவளை அவனும் காதல் மிக அணைத்துக் கொண்டான்..

"**நா**ம எங்கே போறோம் மாமா.." விடாது அனத்தி கொண்டு வந்த மனைவியைக் கண்டு சிவகுரு,

"எத்தனை தடவை கேட்டாலும் பதில் சொல்ல மாட்டேன்.. நீ இப்படிப் பேசிக்கிட்டே இருந்தால் என் மகனும் உன்னைப் போல் வாயாடியா இருப்பான்.. அதனால் பேச்சை குறை.." என்று கேலி செய்தான்..

ஒரு மாதம் முன்பு தான் சக்திப்ரியா கருவுற்று இருப்பது தெரிய வந்தது.. அதைக் கேட்டு எல்லோரும் மகிழ்ந்து போயினர்.. அவளது தந்தையே மீண்டும் அவளிடம் வந்து விட்டார் என்று அவள் மகிழ்ந்து போனாள்.. அதை அவனும் சந்தோசமாய் ஆமோதித்தான்.. விசயம் கேள்விப்பட்டுச் சரண், சங்கீதா இருவரும் இவர்களுக்கு அழைத்து வாழ்த்து தெரிவித்தனர்..

"நீ எப்போடா குட் நியூஸ் சொல்ல போகிற..?" என்று சிவகுரு தம்பியிடம் கேட்க..

"இன்னும் மூன்று வருடத்திற்கு எந்தக் குட் நியூசும் கிடையாதுண்ணா.. வாழ்க்கையில் சாதித்துவிட்டு, காதலிலும் வெற்றி பெற்ற பின்னரே குழந்தை பெற்றுக் கொள்ளப் போகிறோம்.." இருவரும் ஒருமித்த குரலில் கூறியதை கேட்டு மகிழ்ச்சியாக இருந்தது..

அதை எல்லாம் நினைத்தபடி சிவகுரு காரை ஓட்டி கொண்டிருந்தான்..

நேரே கார் ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றிற்குள் நுழைந்தது.. அதைக் கண்டு வியப்பில் விழி விரித்தவள், "ரொம்ப அழகா இருக்கு மாமா.." என்றவள் அதன் தோற்றத்தை பார்த்து பிரமித்தபடி காரிலிருந்து இறங்கினாள்..

அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட மேசையில் அமர்ந்ததும் சிவகுரு அங்கிருந்த பூச்சாடியில் இருந்து ஒற்றை ரோஜா பூவை எடுத்து அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"இப்போ நான் ஒரு ஹோட்டலுக்கு அதிபதி.. என் காதலை ஏற்றுக் கொள்வாயா சக்தி..?" என்று புன்னகையுடன் கேட்க..

"ஐய், இது நம்ம ஹோட்டலா..? அப்போ எவ்வளவு வேணும்ன்னாலும் சாப்பிடலாம்.. எந்த நேரம் வேண்டுமானாலும்

ஆர்டர் பண்ணலாம்.. பில் கொடுக்கத் தேவையில்லை..” என்று அவள் சந்தோசத்தில் துள்ளி குதித்தாள்..

“ஒருத்தன் எவ்வளவு கஷ்டப்பட்டு ப்ரபோஸ் பண்ணிக்கிட்டு இருக்கேன்.. நீ என்னடான்னா சாப்பாட்டைப் பத்தியே பேசுறியே சக்தி..?” சிவகுரு இன்னமும் மண்டியிட்டே அமர்ந்திருந்தான்..

சக்திப்ரியா போனால் போகிறது என்று அவனது கையிலிருந்த ரோஜாவை வாங்கிக் கொண்டவள், “இந்த அழகான ஹோட்டலுக்காக உங்களை ஏற்றுக் கொள்கிறேன்..” என்று கெத்து காட்ட..

“அடிங்க..” என்றபடி எழுந்தவன் அவளை அடிப்பதற்குப் பதில் அணைத்துக் கொண்டான்..

“மாமா, ரோஜாவுக்குப் பதில் தந்தூரி சிக்கனை கொடுத்திருந்தால் என் பசியாவது அடங்கியிருக்கும்..” என்று அவள் செல்லமாய்ச் சிணுங்க..

“ஐயோ, பசிக்குதா சக்தி..” என்றவன் அடுத்த நொடி அவளுக்குப் பிடித்த உணவு வகைகளைக் கொண்டு வர ஏற்பாடு செய்தான்..

உணவு வந்ததும் அவள் ஆசை ஆசையாய் உண்டு கொண்டிருப்பதைக் காதலோடு பார்த்தபடி அவன் அமர்ந்திருந்தான்.. நீண்ட நேரம் கழித்துத் தான் அவள் கணவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாள்..

“உங்களுக்கு வேணுமா..?” என்று கேட்டவள் பின்பு கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு,

“நீங்க காதலை தானே கேட்டீங்க.. அதனால் நானும் காதலை சொல்கிறேன்.. ஐ லவ் யூ மாமா..” என்க..

“காதலை விடக் கடாய் சிக்கன் உனக்கு முக்கியமானதாய் போயிற்று.. அப்படித்தானே சக்தி..”

“ஹி..ஹி..” அவள் அசடு வழிந்ததிலேயே தெரிந்து போனது, அவன் கூறியது உண்மை என்று.. அதைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்..

**அ**ன்று வீட்டிற்குள் நுழையும் போதே சிவகுரு, “சக்தி, சக்தி..” என்று மனைவியை ஏலம் போட்டுக் கொண்டே வந்தான்..

“ஷ், எத்தனை தடவை சொல்றது.. இப்படிக் கத்த கூடாதுன்னு..” அவன் சொன்ன வசனத்தை அவனுக்கே திருப்பிப் படித்தாள் அவனது அருமை மனைவி..

“கொழுப்புடி உனக்கு..” என்று அவன் அவளது காதை திருக..

"ஐயோ, மாமா.. பாப்பாவுக்கு வலிக்கும்.." அவள் வயிற்றில் இருக்கும் பிள்ளையைச் சாக்கு சொல்ல.. அவன் உடனே குனிந்து,

"சாரி பேபி.." என்று தன் மகவிடம் மன்னிப்பு கேட்டான்..

"இப்போ சொல்லுங்க.. எதுக்குக் கூப்பிட்டீங்க..?"

"நம்ம டிசைனுக்குச் சிறந்த டிசைனர் அவார்டு கிடைச்சிருக்கு.."

"வாவ், சூப்பர் மாமா.. வாழ்த்துகள்.."

"உனக்கும் சேர்த்து வாழ்த்து சொல்லிக்கோ.." என்றவனை அவள் புரியாது பார்க்க..

"இதற்கு நம்ம ரெண்டு பேர் பெயரையும் சேர்த்து தான் கொடுத்திருந்தேன்.. இனி எல்லா டிசைனுக்கும் அப்படியே.."

"மாமா.." அவளுக்குக் கண்களில் கண்ணீரே வந்துவிட்டது.

மக்கு மண்ணாந்தை அவளையும் எல்லோரும் போற்றும் வண்ணம் பெரிய மனுசியாக்கி விட்டானே அவளது கணவன்,

"நான் இருக்கும் வரை நீ அழவே கூடாது.." என்றவன் அவளை ஆறுதலாக அணைத்துக் கொள்ள.. அவளும் பாந்தமாய் அவனது அணைப்பில் அடங்கினாள்..

"இந்தத் தடவை ஆல் பாஸ் பண்ணிருவியா சக்தி..?" அவன் அவளிடம் ரகசிய குரலில் கேட்க..

"எனக்காக இல்லைன்னாலும் என் மாமாவுக்காக நான் பாஸ் பண்ணிருவேன்.." என்றவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது..

காதலில் கட்டுண்ட, உண்மையாய் நேசிக்கும் நெஞ்சங்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சிக்கு குறைவே இல்லை என்பதற்கு சிவகுரு, சக்திப்ரியா இருவரின் வாழ்க்கை நல் உதாரணம்.. இனி அவர்களது வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சியே..!!!

... முற்றும் ...

வெளியீடு

**விஷ்ணு பப்ளிகேஷன்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர்,
நந்தவனம்,சென்னை - 35

Owned and Published by T. Raghavan, Vishnu Publication Contact : 95669 42486 Published at 68/37, Sri Ram Pet, CIT Nagar, Nandhanam, Chennai - 600 035. Printed by E. Sudeeshkumar at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kitabathkhan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002.

SUDARKODI (TAMIL MONTHLY) R.DIS. NO. 1994/16

